

# "தானியேல்"

மற்றும்

# "வெளிப்படுத்தின விசேஷம்"

விளக்கவுரை



Rev.Dr.A. சேவியர் B.Sc.,M.A (Theo).,DD.
எழுத்தாளர் சுவிசேஷகர் போதகர்

# தானியேல்

மற்றும்

# வெளிப்படுத்தின விசேஷம்

விளக்கவுரை


ஆசிரியர்

Rev. Dr. A. சேவியர் B.Sc., M.A, (Theology), D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)



2016

வெளியீடு

"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrust xavier

v.endtimedeliverance.com; e-mail:-info@deliverance.

**தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் விளக்கவுரை**

First Edition : 2016
Total Copies : 1000 nos
Book Serial No : 14/14

காணிக்கை : ₹ 70/-

**Copy right :**

End Time Deliverance Ministry Trust

**Sponsored by :**

Pastor **சத்தியதாஸ்** B.E., B.Th.,
விடுதலை கிறிஸ்துவின் சபை,
அண்ணனூர், சென்னை - 600 109.
செல் : 94448 73848

**Printed by :**
**Saravan Printers**
New 91, Old 44, V.M. Street (Near BSNL Quarters)
Royapettah, Chennai - 600 014.
Email : saravanprinters@gmail.com

# முன்னுரை

## விசுவாசம் வெற்றியைத் தரும்

இனி சம்பவிக்கப் போகிறவைகளை பழைய ஏற்பாட்டு இஸ்வேலர்களுக்கு தானியேல் மூலமும், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு யோவான் மூலமும் வெளிப்படுத்திய தேவனுக்கு தோத்திரம். இந்த இரண்டு புத்தகங்களையும், அறிவு பெருகிப் போயிருக்கும் இந்த கடைசி காலத்தில், வாசிக்க, தியானிக்க தேவன் எனக்குக் கொடுத்த கிருபைக்கு கோடா கோடி தோத்திரம்.

நான் பெற்றுக் கொண்ட விளக்கங்களை, நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையில் இதை சமர்ப்பிக்கிறேன்.

*வாசியுங்கள் ! விசுவாசியுங்கள் !*

*ஆசீர்வாதம் பெறுங்கள் !*

*இயேசு சீக்கிரம் வருகிறார் !*

*ஆயத்தமாவோம் !! ஆயத்தமாக்குவோம் !!!*

சென்னை

அக்டோபர் 2016

**- ஆசிரியர்**

**<u>குறிப்பு</u> :**

இது குறித்து எந்த சந்தேகமோ, கேள்விகள் எழுந்தாலும், உடனே ஆசிரியரை தொடர்பு கொள்ளுங்கள்.

# பொருளடக்கம்

## தானியேல் விளக்கவுரை


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | நுழைவாயில் .............................................. | 6 |
| 2. | 1ம் அதிகாரம் .............................................. | 9 |
| 3. | 2ம் அதிகாரம் (சிலை கனவு) ......................... | 11 |
| 4. | 3ம் அதிகாரம் (சிலை வணக்கம்) .................... | 15 |
| 5. | 4ம் அதிகாரம் (தரிசனம் "மரம்") .................... | 20 |
| 6. | 5ம் அதிகாரம் (சுவரில் எழுதப்பட்ட காரியம் ...... | 24 |
| 7. | 6ம் அதிகாரம் (சிங்கக் கெபியில் போடல்) ......... | 27 |
| 8. | 7ம் அதிகாரம் (மிருகம் - தரிசனம்) ................. | 30 |
| 9. | 8ம் அதிகாரம் (ஆட்டுக்கடா தரிசனம்) ............. | 34 |
| 10. | 9ம் அதிகாரம் (70 வார தீர்க்கதரிசனம்) ........... | 37 |
| 11. | 10ம் அதிகாரம் (Vision of Wars) ................... | 42 |
| 12. | 11ம் அதிகாரம் (Vision of Wars - தொடர்ச்சி) .. | 45 |
| 13. | 12ம் அதிகாரம் (Vision of Wars - தொடர்ச்சி) .. | 49 |

Charts and Maps ........................................ 121 - 130


இந்த மாத "விசுவாச முழக்கம்"
வாசித்தீர்களா?

# பொருளடக்கம்

## வெளிப்படுத்தின விசேஷம் விளக்கவுரை


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | நுழைவாயில் | 54 |
| 2. | 1ம் அதிகாரம் (கண்டவைகள்) | 56 |
| 3. | 2ம் அதிகாரம் (இருக்கிறவைகள்) | 60 |
| 4. | 3ம் அதிகாரம் (இருக்கிறவைகள்) | 64 |
| 5. | 4ம் அதிகாரம் (இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவை) | 66 |
| 6. | 5ம் அதிகாரம் | 70 |
| 7. | 6ம் அதிகாரம் | 72 |
| 8. | 7ம் அதிகாரம் | 74 |
| 9. | 8ம் அதிகாரம் | 77 |
| 10. | 9ம் அதிகாரம் (இரண்டு ஆபத்துகள்) | 79 |
| 11. | 10ம் அதிகாரம் | 82 |
| 12. | 11ம் அதிகாரம் | 84 |
| 13. | 12ம் அதிகாரம் | 87 |
| 14. | 13ம் அதிகாரம் | 93 |
| 15. | 14ம் அதிகாரம் | 98 |
| 16. | 15ம் அதிகாரம் | 101 |
| 17. | 16ம் அதிகாரம் | 103 |
| 18. | 17ம் அதிகாரம் (Mystical Babylon) | 106 |
| 19. | 18ம் அதிகாரம் (Physical Babylon) | 109 |
| 20. | 19ம் அதிகாரம் | 112 |
| 21. | 20ம் அதிகாரம் | 115 |
| 22. | 21 மற்றும் 22ம் அதிகாரம் | 117 |

# "தானியேல்" - விளக்க உரை

## நுழைவாயில்

தானியேலும், வெளிப்படுத்தின விசேஷமும் ஒன்றோடொன்று இணைந்த தீர்க்கதரிசனப் புத்தகங்கள். இவை இரண்டையும் நன்கு தெரிந்து கொண்டாலே வருங்காரியங்களைப்பற்றி நாம் திட்டமும் தெளிவுமாய் இருக்கலாம். இந்த இரண்டுமல்லாது, வேறெந்த தீர்க்கதரிசிகளையும் நாடி, ஓடித்தேடி அல்லோகல்லோலப்படத் தேவையே இல்லை. இந்த "தானியேல்" விளக்கவுரையைப் படியுங்கள்; தெளிவு பெறுங்கள்; கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விலகி ஓடுங்கள்; மற்றவர்களுக்கும் அறிவியுங்கள்.

கடைசி நாட்களில் எழும்பப்போகும் பாழாக்கும் அருவருப்பாகிய அந்திகிறிஸ்து பற்றி தானியேல் சொல்லியிருப்பதை வாசித்து சிந்திக்க, இயேசு சொன்னதைப்பாருங்கள்:-

> "**.... பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே, வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்...**" (மத். 24:15)

இந்த விளக்க உரையை வாசிக்க வந்த நீங்கள் பாக்கியவான்கள்; இந்தபுத்தகமும் பாக்கியமுள்ளது. அல்லேலூயா!

**பொதுவான தீர்க்கதரிசன விளக்கங்களை முதலில் பார்ப்போம்:-**

(1) "வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும், சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது" - 2 பேது.1:20.

தீர்க்கதரிசனத்தில் "ஸ்திரி" என்றால் ஸ்திரி அல்ல; "கொம்பு" என்றால் கொம்பு அல்ல; "சமுத்திரம்," "மிருகம்," "முடி", "மலை" என்றால், சமுத்திரமுமல்ல; மிருகமுமல்ல; முடியுமல்ல; மலையுமல்ல. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தீர்க்கதரிசன அர்த்தமுண்டு என்று நம் வேதத்திலேயே அறிந்துகொள்ளலாம்.

(2) நடக்கப்போகும் காரியங்களை மொத்தமாய் ஒரே தீர்க்கதரிசனமாயும் பல இடங்களில் சொல்லப்படும. ஆனால் அவைகளில் சொல்லப்படும் காரியங்களெல்லாம் ஒரேசமயத்தில் தொடர்ச்சியாய் நடப்பதில்லை; கால இடைவெளிகள் விட்டு (Gap) நடக்கும். உதாரணத்திற்கு, லூக்.1:31-33 மற்றும் ஏசா.61:1-3 போன்ற தீர்க்கதரிசன வசனங்களை வாசித்தால், கன்னியின் வயிற்றில் பிறக்கும் இயேசுவால் நடக்கும் காரியங்களை சொன்னாலும், அவைகளில், முதலாம் வருகையில் நடப்பதையும், 2ம் வருகையில் நடப்பதையும் ஒன்றாகவே, Gap இல்லாமல் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். இதனால்தான், இயேசு முதலாம் முறைவந்தபோது, ஏசாயாவில் சொல்லப்பட்ட முழுதீர்க்கதரிசன வாக்கியங்களையும் படிக்காமல், முதல் வருகையில் நடப்பது மாத்திரமே வாசித்துவிட்டு அமர்ந்தார் (லூக்.4:16-20).

(3) தீர்க்கதரிசிகள், ஒரு தீர்க்கதரிசன காரியத்தை சொல்லிக் கொண்டிருக்கும் போதே, வேறொரு தீர்க்கதரிசன காரியத்தை அதில் நுழைப்பதும் உண்டு. அதன் பின், பழைய தீர்க்கதரிசனத்தை தொடர்வார்கள். உதாரணத்திற்கு ஏசா.66ஐ எடுத்துக்கொண்டால், 1000வருட அரசாட்சிபற்றி (கூடாரப்பண்டிகை) சொல்லிக் கொண்டுவரும், ஏசாயா தீர்க்கதரிசி, திடீரென்று ஏசா.66:22ல் புதியவானம், புதிய பூமி பற்றி சொல்கிறார். பின், ஏசா.66:23 லிருந்து, பழையபடி 1000 வருட அரசாட்சி காலம்பற்றியே சொல்கிறார்.

(3) தீர்க்கதரிசனங்கள், ஒரே கோர்வையாய் வரிசைப்படுத்தி எழுதப்படுவதில்லை. அந்தந்த நேரத்தில் ஆவியானவர் தரும் தீர்க்கதரிசன வார்த்தைகளை எழுதுவார்கள். பின்னால் நடப்பது முன்னால் எழுதப்பட்டிருக்கலாம்; முன்னால் நடப்பது பின்னால் எழுதப்பட்டிருக்கலாம்.

தானியேல் மொத்தம் 12 அதிகாரங்களை உடையது. ஆனால், கத்தோலிக்க பைபிளில், 13 மற்றும் 14ம் அதிகாரம், கிரேக்க மொழியில் உள்ளது. அவைகள் நம்மால் தள்ளப்பட்டவை. தானியேலில், 2:4 முதல் 7:28 வரை அராமிக் மொழியில் எழுதப்பட்டுள்ளது. மீதமுள்ளவை எபிரேயு மொழியில் எழுதப்பட்டுள்ளது. இதில் முதல் 6 அதிகாரம் சரித்திரம் சம்பந்தப்பட்டது; அடுத்த 6 அதிகாரமும் தீர்க்கதரிசனம் சம்பந்தப்பட்டது.

இதிலே எழுதப்பட்டவை எல்லாமே முழுக்க முழுக்க இஸ்ரேலர் சம்பந்தப்பட்டவைதான். கிறிஸ்தவர்கள் சம்பந்தப்பட்டவை ஏதுமில்லை. ஏனெனில் கிறிஸ்தவ சபை மத்.16:18ன்படி இயேசுவின் மரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டது. (எபே.2:15) அப் 20:28). பழைய ஏற்பாட்டில் இந்த சபை பற்றிய எந்த வசனமும் கிடையாது.

இந்த புத்தகத்தைப்பற்றி தானியேலிடம் தேவன் சொன்னதைப் பாருங்கள்:- “முடிவு காலமட்டும இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து இந்த புத்தகத்தை முத்திரைபோடு. அப்பொழுது, இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள்; அறிவும் பெருகிப்போம்” (தானி.12:4).

அடிமைத்தனத்தில் பாபிலோன் நகரத்திலும் (பாபிலோன் ராஜ்யம்), சூசான் நகரத்திலும் (மேதிய-பெரிசிய ராஜ்யம்) தானியேல் இருந்தபோது, கி.மு. 6ம் நூற்றாண்டில் எழுத ஆரம்பிக்கப்பட்ட புத்தகம் இது. தானியேல் காலம் முதல், 1000 வருட ஆட்சி வரை இருக்கும் இஸ்ரேலர் சம்பந்தப்பட்ட புறஜாதி அரசுகளைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. தானியேலுக்கு முன்னால், இஸ்ரேலர்கள், எகிப்தியரால், யாக்கோபு முதல் மோசே வரை கிட்டத்தட்ட 430 வருஷம் அடிமையாயிருந்தார்கள். சாலமோன் ராஜாவுக்குப் பிற்பாடு, இஸ்ரேல்தேசம், ரெகோபயாம் தலைமையில் யூதராஜ்யம் என்றும், யெரோபயாம் தலைமையில் இஸ்ரேல் ராஜ்யம் என்றும் இரண்டாய்ப் பிரிந்தது. கி.மு. 975முதல் கி.மு 721 வரை, இஸ்ரேல் ராஜ்யம், யெரோபெயாம் முதல் அசியா ராஜாவரை ஆளப்பட்டு பின் அசீரியரால் அழிந்துபோனது. யூதராஜ்யம், கி.மு.604முதல் பாபிலோனிய ராஜ்ய அடிமைத்தனத்தின்கீழ் வந்தது. தானியேல் யூதராஜ்யத்தை சார்ந்த யூதன். அசீரியர், எகிப்தியர் போன்ற புறஜாதி ராஜ்யங்களைப்பற்றியெல்லாம் இந்தநூலில் எழுதப்படவில்லை. உலகின் இஸ்ரேல் சம்பந்தப்பட்ட கடைசி ராஜ்யங்களை மட்டும்தான் எழுதியிருக்கிறான். இஸ்ரேலர், உபத்திரவத்திற்கு உட்படுத்தப்படுகின்ற மொத்த ராஜ்யங்கள் எட்டு (வெளி.17) அவைகளில் 6 இப்போது இல்லை. மீதம் இரண்டு இனி வரப்போகிறது என்று தானியேல் புத்தகத்தால் அறியலாம்.

❖ ❖ ❖

# 1ம் அதிகாரம்

யூதாவின் ராஜாவகிய யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே (எபிரேய கணக்கின்படி அது 4ம் வருஷம் - எரே.25:1) பாபிலோன் ராஜா, நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடித்து, தேவாலயப்பாத்திரங்களையும், ராஜாவையும் மற்றும் தானியேல் போன்ற யூதர்களையும் சிறைப்பிடித்துப் போனான். இது கி.மு. 604ல் நடந்தது. இரண்டாம் சிறைப்பிடிப்பு கி.மு.597லிலும், 3ம் சிறைப் பிடிப்பு கி.மு. 586லிலும் நடந்தன. எருசலேம் தேவாலயப் பாத்திரங்களை சினேயாரில் ராஜா தன் தேவனுடைய பண்டசாலைக்குள் வைத்தான். இஸ்ரேல் புத்திரருக்குள்ளே, ராஜா குலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரண்மனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர் களுமாகிய சில வாலிபர்களையும் ராஜா தெரிந்து கொண்டான். அவர்களில், தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தனர். ராஜாவின் உத்திரவுப்படி, பிரதானிகளின் தலைவன் அஸ்பேனாஸ் என்பவன், அவர்களுக்கு,

(1) கல்தேயர் பாஷையை கற்றுக் கொடுத்தான்.

(2) ராஜாவின் போஜனமும், குடிக்கும் திராட்சைரசமும் பரிமாறினான்.

(3) தன்தெய்வப் பெயர்களை, தானியேலுக்கு பெல்தெஷாத்சர் என்றும், அனனியாவுக்கு சாத்ராக் என்றும், மீஷாவேலுக்கு மேஷாக் என்றும், அசரியாவுக்கு ஆபேத்நேகோ என்றும் இட்டான்.

**இதன் தாற்பரியத்தைப்பாருங்கள்:-** மொழி, உணவுமுறை, பெயர் போன்றவை எந்த அளவுக்கு ஒரு மனிதனின் கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம், தெய்வீகம் போன்றவற்றில் கலந்திருக்கிறது என்பதை உணருங்கள். பாபிலோனிய ராஜா இதை உணர்ந்திருக்கிறான். நம்மவர்களோ இதைப்பற்றி சிந்திப்பதே இல்லை (கிறிஸ்தவனான பின்னும் அந்நிய தெய்வப் பெயரால்தான் அழைக்கப்படுகின்றான்). மூன்று வருடமுடிவில் இவர்களை வளர்த்து, கொழுமையாக்கி ராஜாவிடம் கொண்டுவர வேண்டும் என்பது அஸ்பேனாசுக்கு கட்டளை.

ஆனால், இந்த 4பேர் மட்டும் ராஜாவின் போஜனமும் பானமும் தீட்டுப்படுத்தும் என்று பிரதானியிடம் சொன்னபோது, அவன் ராஜாவுக்குப்

பயந்தான். எப்படி இது தீட்டாகும்? அசைவ உணவு என்பதால் அல்ல. (சில சபையார், இவர்களைக் காரணம் காட்டி அசைவ உணவு சாப்பிடக்கூடாது என்கின்றனர்). ஏதேனில் தேவன் மனிதனை வாழ வைத்தபோது அவரின் பரிபூரணசித்தம் சைவ உணவுதான் (ஆதி. 1:29,30); ஆனால், உலக சூழ்நிலைகளின் நிமித்தம், நோவா ஜலப்பிரளயத்துக்குப்பின், அசைவமும் தேவன் அனுமதித்தார். 40 வருட வனாந்திர வாழ்க்கையில் கூட மன்னா மட்டுமே கொடுக்கப்பட்டும்; இஸ்ரேலரின் வேண்டுதலினிமித்தமே இறைச்சி கொடுக்கப்பட்டது. 1000 வருட ஆட்சியிலும், நித்தியத்திலும் அசைவம் இல்லை. அசைவம் சாப்பிடுவது பாவமல்ல. அது மனித சரீரத்தை, சுபாவங்களை கெடுத்துவிடக்கூடாது. அதனால்தான் இறைச்சிகளிலே சுத்தமான மிருகம், அசுத்தமான மிருகம் என்று தேவன் பிரித்துக் காட்டினார். அந்த நாலுபேரும், ராஜாவின் போஜனம் விக்ரகத்துக்குப் படைக்கப்பட்ட அசைவ உணவு என்பதாலும், புறஜாதியார் மத்தியிலே தாங்கள் யாரென்று காட்ட வேண்டும் என்பதாலும், (see 1 கொரி.10:28) அதைப் புசிக்க மறுத்தனர். இதனால் ராஜாவுக்கு பயந்த, விசாரிப்புக் காரணான, மேல்ஷாரிடம், “10 நாள் வரை பருப்பு முதலான மரக்கறியையும், தண்ணீரையும் கொடும். அதன் பின் எங்கள் முகங்களைப் பாரும்; உம் இஷ்டப்படி அப்போது செய்யும் என்று தானியேல் கேட்டுக் கொண்டான். 10 நாள் சென்றபின்பு, ராஜ போஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது (தானி.1:15). எனவே, மரக்கறி உணவே தொடரப்பட்டது. அடிமை நிலையில் இருந்தாலும் அப்.2:40 ன்படி, மாறுபாடுள்ள சந்ததியை விட்டு எல்லாக் காரியத்திலும் விலகியிருந்தனர்.

தேவநாமத்தைப் பரிசுத்தப்படுத்தினால் (Setapart - பிரித்தெடுத்தல், பிரத்யேகம் பண்ணுதல்) அவர் உன்னை வித்தியாசமாய் நடத்துவார். அதன்படியே, இந்த 4 பேருக்கும் கர்த்தர் சகல எழுத்திலும், ஞானத்திலும், அறிவிலும், சாமார்த்தியத்தைக் கொடுத்தார். (தானி.1:17) தானியேலை சகலதரிசனங்களையும், சொப்பனங்களையும், அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார். குறித்த நாட்கள் முடிந்தபின் அவர்கள் ராஜாவிடம் கொண்டு வரப்பட்டார்கள். அவர்கள எல்லோருக்குள்ளும் இந்த 4 பேரைப் போல வேறொருவரும் காணப்படவில்லையாதலால், ராஜா இவர்களை தன் சமூகத்திலேயே வைத்துக்கொண்டான். அந்த நாட்டிலுள்ள சகல சாஸ்திரிகளிலும், ஜோஸ்யர்களிலும், இவர்கள் பத்துமடங்கு ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த விஷயத்தில் சமர்த்தராய் இருந்தனர் (தானி.1:20).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நீ எங்கே எந்த நிலையில் இருந்தாலும் தேவனைச் சார்ந்து வாழ்ந்தால் தேவன் உன்னை உயர்த்துவார். அல்லேலூயா! அதனால்தான், தானியேல், மேதிய பெர்சியராஜா கோரேஸ் காலம் வரைக்கும் அரண்மனையில் இருந்தான் (தானி.1:21; 10:1).

❖ ❖ ❖

## 2ம் அதிகாரம் (சிலைகனவு)

பாபிலோன்ராஜா, நேபுகாத்நேச்சார் சொப்பனம்கண்டு, கலங்கி, அதன் அர்த்தத்தை சொல்லவேண்டுமென்று சாஸ்திரிகளையும், ஜோசியரையும், சூனியக்காரரையும் கல்தேயரையும் அழைத்தான்.

(1) **சாஸ்திரிகள் (Astrologist)** :- வானத்து நட்சத்திரங்களைப் பார்த்து, எதிர்காலத்தை கணித்துச் சொல்பவர்கள் இயேசு பிறந்தபோதுவந்த சாஸ்திரிகள் இப்படிப்பட்டோர்தான். திருமணம், நல்லநாள் எல்லாவற்றையும் கணிப்பவர்கள். சிருஷ்டிகரைப் பாராமல், சிருஷ்டிகளைப் பார்க்கிறவர்கள்.

(2) **ஜோஷ்யர்கள்:-** பூமியிலே உள்ள காரியங்களை வைத்து, எதிர்காலத்தை சொல்பவர்கள். இதில் பலதரப்பட்டவர்கள் உண்டு.

(a) பழைய காலத்தில் களிமண்ணால் ஈரலின் படிமங்களை உருவாக்கி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன் எழுதி வைப்பார்கள். பலன் சொல்ல வேண்டுமென்றால், ஆட்டைப் பலியிட்டு ஈரலை எடுத்து, அதன் படிமத்தின் தோற்றப்படி உள்ள களிமண் படிமம் சம்பந்தமான பலனைச் சொல்வார்கள்.

(b) தண்ணீரை பாத்திரத்தில் எடுத்து, அதிலே எண்ணெய் ஊற்றி, எண்ணெய்ப் படல உருவத்துக்கேற்ற பலன் சொல்வார்கள்.

(c) கிளியை வைத்து ஜோஷ்யம் சொல்வார்கள்.

(d) கழுதை கத்துதல், பல்லி கத்துதல், பூனை குறுக்கே வரல், விதவை எதிரில் வரல், கால் தட்டுதல், மணி அடித்தல், தும்முதல், தாயக் கட்டை உருட்டுதல் போன்றவைகளை வைத்து பலன் கூறுவார்கள்.

தற்கால கிறிஸ்தவர்களும்கூட, 66 வேதப்புத்தகங்கள் இருந்தும், தங்கள் எதிர்காலத்தை இப்படிப்பட்டவர்கள் மூலமே கேட்க ஓடுகின்றனர்.

(3) **சூனியக்காரர்கள்:-** வானத்தை வைத்தோ,பூமியை வைத்தோ அல்ல. மரித்து போனவர்களின் ஆவிகளோடு பேசி, எதிர்காலம்பற்றி சொல்கிறோம் என்பவர்கள். சாத்தானின் பெரும் வஞ்சகங்களில் ஒன்று, இறந்து போனவர்களின் ஆவிகளோடு பேசமுடியும் என்பது. அப்படியானால் பிர.12:7 பொய்யா? அன்றைக்கு சவுலிடம் சூனியக்காரி செய்த ஏமாற்றுவேலை இதுதானே! இதுகுறித்து ஆசிரியரின், "சாமுவேலின் ஆவியை அஞ்சனக்காரி எழுப்பினாளா?" என்ற செய்தியை, "தெரிந்து கொள்ளுங்கள் - பாகம் - 2" என்ற நூலில் வாசிக்கவும்.

(4) **கல்தேயர்:-** (Neumaralogy) பாபிலோனிய பல்கலைக்கழகத்தில், கணிததுறையில் பட்டம் பெற்று, எண்களை கூட்டி வகுத்து, கழித்து, பெருக்கி, அதை வைத்து எதிர்காலம் சொல்பவர்கள். நமது ஆவிக்குரிய சபைகளிலும், இப்படிப்பட்டவர்கள், அமெரிக்கா விலிருந்து இறக்குமதியாகியிருக்கின்றனர்.

சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் அறிவியாமற் போனால் துண்டித்துப் போடப்படுவீர்கள் என்று ராஜா ஆணையிட்டான். சொப்பனத்தையே அறியாமல், எப்படி விளக்குவது என்று அவர்கள் தவித்தனர். இதுவரை இப்படி எந்த ராஜாவும் கேட்டதில்லை என்று ராஜாவிடமே சொல்லி, மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம்பண்ணாத தேவர்களேயொழிய, ராஜசமூகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள் (தானி.2:10,11). மாம்சமான நம்மோடு வாசம் பண்ணுகிற நம் தேவனால் இதுகூடும் என்று அவர்கள் அறியாதிருந்தார்கள். ராஜா கோபம் கொண்டு, அவர்கள் எல்லோரையும் (தானியேலையும் அவன் தோழரையும் சேர்த்து) கொல்ல, தலையாரிகளுக்கு அதிபதியாகிய ஆரியோகோடுக்கு உத்திரவிட்டான். இந்த விஷயத்தை தானியேல் அறிந்து, ஆரியேகோடிடம், சொப்பனத்தையும் அர்த்தத்தையும் சொல்ல ராஜாவிடம் தவணை கேட்கச் சொன்னான். தவணையும் கிடைத்தது.

தவணையின் காலத்தில், தானியேலும், அவன் நண்பர்களும், மறைபொருளை விளக்கும்படி தேவனிடம் வேண்டினார்கள். இராக்கால தரிசனத்தில் மறைபொருள் வெளிப்பட்ட உடனேயே, தேவனைத் துதித்தான். அவருடைய குணாதிசயங்களை (character), அவருடைய வல்லமையை (power), அவருடைய மகத்துவத்தை (mighty) புகழ்ந்தான் (தானி.2:20,21). "பாபிலோனின் ஞானிகளை அழிக்க வேண்டாம். என்னை ராஜா முன் கொண்டுபோ. அர்த்தத்தை

தெரிவிப்பேன்" என்று தானியேல், ஆரியோகோடிடம் சொல்ல, அவனும் ராஜாவிடம் அழைத்துப் போனான். "சொப்பனத்தையும், அதின் அர்த்தத்தையும் சிறைப்பட்டு வந்திருக்கிற, யூதா தேசத்தானாகிய உன்னால் சொல்ல முடியுமோ? "என்று ராஜா ஏளனமாய்க் கேட்டான்." ஞானிகளால் கூடாதது, பரலோக தேவனால் கூடியது" என்று தானியேல் பதிலளித்து தேவனை மகிமைப்படுத்தினான் (தானி.2:27,28).

**தானியேல் சொன்ன சொப்பனத்தின் மறைபொருளாவன:-**

ராஜா, பெரிய பிரகாசமான சிலையைக் கண்டான். அதன் தலை பொன்; மார்பும் புயமும் வெள்ளி; வயிறும் தொடையும் வெண்கலம்; கால்கள் இரும்பு; பாதங்களும் விரல்களும் பாதிஇரும்பு பாதிகளிமண். ஒருகல் மலையிலிருந்து உருண்டுவந்து சிலையின் பாதங்களில் மோதி, மொத்த சிலையையும் நொறுக்கிப்போட்டது. பின், அது பெரிய பர்வதமாகிய பூமியெல்லாம் நிரப்பிற்று (தானி.2:31-35).

**விளக்கம்:-** பொன்னான தலை - பாபிலோன் ராஜ்யம் (நேபுகாத்நேச்சார்). அதற்குப் பின் ஒன்றன்பின் ஒன்றாய், வெள்ளி போன்ற ராஜ்யம், வெண்கலம் போன்ற ராஜ்யம், இரும்பு போன்ற ராஜ்யம் எழும்பும். கடைசியில் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமான ராஜ்யம் வரும் ஆனால் இந்த ராஜ்யத்தில் எல்லாரோடும் சம்பந்தங்கலப்பார்கள்; ஆனாலும் இரும்பும் களிமண்ணும் போல ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ள மாட்டார்கள். காலம் மாற மாற ஒவ்வொரு ராஜ்யங்களின் மதிப்பும், பலமும், வல்லமையும் எப்படி குறைகிறது என்று பாருங்கள். கடைசியாய் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். எப்படி? ஒரு கல் வந்து, இவைகளை நிர்மூலமாக்கி பூமியெங்கும் நிற்கும். ஆமென்!

**இது குறித்து சரித்திரம் என்ன சொல்கின்றது என்று பார்ப்போம்?** (சரித்திரம், விஞ்ஞானம், பூகோளம் எல்லாவற்றாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரே வேதம் நம் வேதம்).

கி.மு. 606 முதல், இதுவரை உலகிலே 4 சாம்ராஜ்யங்கள்தான் எழும்பியுள்ளன.

1. பாபிலோன் (கி.மு.606 முதல் 538 வரை)
2. மேதிய - பெர்சிய (கி.மு.538முதல் 330 வரை)
3. கிரேக்கம் (கி.மு.330 முதல் 325வரை). அதன்பின் இது, திரேஸ், மெசபத்தோமியா, சிரியா, எகிப்து என்று நான்கு பிரிவாய் பிரிந்து இயங்கியது. இதிலுள்ள எகிப்தை, ரோமர் கி.மு.30ல் பிடித்தனர்.

4. ரோமர் (கி.மு.30 முதல் ஆண்டாலும் இஸ்ரேலரை கி.மு.60 முதல் 364 வரை ஆண்டது).

இந்த ரோம ராஜ்யம், கி.மு.364ல், கிழக்கத்திய ரோம் என்றும், மேற்கத்திய ரோம் என்றும் இரண்டாய்ப் பிரிந்தது. கி.பி.476ல் மேற்கு ரோமராஜ்யம் வீழ்ந்துபோனது. கி.பி.1453ல் கிழக்கு ரோமராஜ்யம் வீழ்ந்துபோனது. இதைத்தான் வெளி.13ல் சொல்லப்பட்ட சாவுக்கேதுவான காயமாகும். இதற்குப் பிறகு எந்த ஒரு உலக சாம்ராஜ்யமும் இதுவரை எழும்பவில்லை. இயேசுவாகிய கல் இறுதியில் வரும்போது, பாதிகளிமண் - பாதி இரும்பு - 10 ராஜா (பாதங்களின் 10 விரல்கள்) கொண்டு ராஜ்யம் இருக்கும். (இது குடியாட்சியும் சுயாட்சியும் நிறைந்த Autocratic Democracy யாக இருக்கும்) இதைத்தான் தானி.7:7,8ல் 10 கொம்பு (மிருகம்) என்றும், வெளி.17:12ல் 10 கொம்பு என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த 10 ராஜ்யங்கள் - ராஜாக்களிலிருந்துதான், ஒருவன் - ஒரு சின்ன கொம்பு - எழும்புவான். அப்போதுதான், இயேசுவாகிய கல், இந்த ஒரு ராஜாவையும், அந்த சிலை சம்பந்தப்பட்ட அத்தனை புறஜாதி ராஜ்யங்களையும் அழித்துப்போடும் (see. மத்.21:44). இந்த ஒரு ராஜாவோடு, புறஜாதியார் காலம் முடிந்துபோகும் (see லூக்.21:24). இது அர்மகதோன் யுத்தத்தில் நிறைவேறும். அதன்பின் இயேசுவின் ராஜ்யம் பூமியெங்கும் பரவும்.

தானி.2:5ல், "இனிமேல் சம்பவிக்கப் போகிறதை மகா தேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார். சொப்பனமானது நிச்சயம். அதின் அர்த்தம் சத்தியம்" என்று தானியேல் சொன்ன உடனேயே, ராஜா, தானியேல் முன் முகங்குப்புற வணங்கி, காணிக்கை செலுத்தவும், தூபங்காட்டவும் தொடங்கினான். அடிமையாய் சிறைப்பிடிக்கப் பட்டவனுக்கு, அறிவை உணர்த்தி, சக்கரவர்த்தியையே வணங்கும்படி செய்த நம் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. எந்த ராஜா, தானி.2:26ல், தானியேலை ஏளமாய்க் கேட்டானோ, எந்த ராஜா, தேவனின் பெயரை மாற்றி தானியேலுக்கு தன் தெய்வப் பெயரை வைத்தானோ, எந்த ராஜா, விக்ரகங்களுக்குப் படைக்கப்பட்டதை உணவாய்த் தந்தானோ, எந்த ராஜா தன் பாஷையைக் கற்றுக் கொள்ளச் சொன்னானோ, அந்த ராஜா, "தானியேலின் தேவனே தேவன்" என்றான் (தானி. 2:47) அல்லேலூயா! வெகுமதிகளைக் கொடுத்தான்; பாபிலோன் முழுவதுக்கும் அதிகாரியாகவும், சகலஞானிகள் மேலும் பிரதான அதிகாரியுமாக்கினான்; தானியேலின் வேண்டுதலின்படி, அவனது நண்பர்கள் மூவரும்

பாபிலோன் மாகாண காரியங்களை விசாரிக்கும்படி ஆக்கப்பட்டார்கள். தானியேலோ ராஜாவின் கொலுமண்டபத்தில் இருந்தான்.

இதை தியானிக்கும் தேவபிள்ளையே! தேவனை முன்னிறுத்தி, தேவனுக்காய் உண்மையும் உத்தமுமாயிருந்தால், அவர் சகல ஞானத்தையும், மகிமையையும் அருளுவார்; துன்பங்களோடே இம்மையிலே நூறத்தனை ஆசீர்வாதமும் தருவார் (மாற்.10:30) ஆமென்!

இந்த சிலை, கல், நொறுக்குதல், பூமியை நிரப்புதல் பற்றியெல்லாம் இன்னும் அதிகமான விளக்கங்கள், வரக்கூடிய அதிகாரங்களில் கிடைக்கும்.

❖ ❖ ❖

## 3ம் அதிகாரம் (சிலை வணக்கம்)

உலகின் முதல் சாம்ராஜ்யமான பாபிலோன் சாம்ராஜ்ய ராஜா, நேபுகாத்நேச்சார், 60 முழ உயரமும், 6 முழ அகலமுமுடைய ஒரு பொற்சிலையை உண்டுபண்ணி தூரா என்னும் சமபூமியில் நிறுத்தி, அதன் பிரதிஷ்டைக்கு, தேசாதிபதிகள், அதிகாரிகள், தலைவர்கள், நியாயாதிபதிகள், பொக்கிஷதார், நீதிசாஸ்திரிகள், விசாரிப்புக்காரர், உத்தியோகஸ்தர் யாவரையும் அழைப்பித்தான். எல்லோருக்கும் முன்பாக கட்டியக்காரன் எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான கீதவாத்யங்கள் முழங்கும்போது, அனைவரும் ராஜா உருவாக்கின சிலையைப் பணியவேண்டும். மீறினால், எரிகிற அக்கினிச் சூளையில் போடப்படும் என்று உரத்த சத்தமிட்டான். இந்த கீதவாத்தியங்கள் எல்லாம், தமிழ்நாட்டுத் தஞ்சாவூருக்கு சொந்தமானது என்று அறிக. மேலும், எசே.28:13; வெளி.5:8 போன்ற வசனங்களை வாசித்தால், இதே கீதவாத்தியங்கள்தான் பரலோகிலும் இருக்கிறது என அறிகிறோம். **ஆக, தமிழுக்கும் – தமிழருக்கும், நம் தேவனுக்குமுள்ள ஐக்கியத்தைப் பாருங்கள்!** தமிழர்களாகிய நாம் பாக்கியவான்கள் அல்லவா! இயேசுவின் சீஷன் தோமா வந்த பூமியாயிற்றே!

சிலை, சுரூபம், விக்ரகம் உருவாக்குவதும், வணங்குவதும், ஒன்றான மெய்த்தேவனின் மகிமையை மறுதலிப்பதாகும். இப்படிச் செய்வது பிசாசின் கிரியை. தற்கால அரசியல்வாதிகள் மற்றும் தலைவர்களின் சிலை வணக்கம், இந்துக்கள், புத்தர்கள் போன்றோரின்

சிலை வணக்கம் எல்லாமே இப்படிப்பட்டதுதான். நம் தேவன் தன்னுடைய மகிமையை யாருக்கும் கொடார் (ஏசா.48:11) அப்படியிருக்க இந்த விக்ரகங்களுக்கு கொடுப்பாரா? தற்கால ஆவிக்குரிய சபைககளிலேயே, சிலுவை, புறா, மற்றும் இயேசு போன்ற விக்ரகம் வைப்பதும், அதற்கு மரியாதை கொடுப்பதும் சர்வசாதாரணமாகிவிட்டது. ஜாக்கிரதை யுள்ளவர்களாய் இருங்கள். சீனாய் மலையில், 2ம் கற்பனையிலும் (யாத்.20:4,5), புதிய ஏற்பாட்டிலும் ரோ. 1:22,23ம் இந்த செயல் கண்டிக்கப்பட்டிருக்கிறது; பாவமாக்கப்பட்டிருக்கிறது.

**இந்த விக்ரக ஆராதனை எண்ணம் ராஜாவுக்கு எப்படி வந்தது?**

(1) கனவிலே தானி 2ல் கண்ட ராஜ்யங்களிலே முதன்மையானது பொன்னான தனதுராஜ்யம்.

(2) தானியேல் சொன்னான்: உமக்குப் பிறகு உமக்கு கீழ்த்தரமான வேறு ராஜ்யம் எழும்பும் என்று (தானி.2:39).

(3) **இன்னும் தானியேல் சொன்னான்:-** பரலோக தேவன், உமக்கே ராஜரீகம், பராக்கிரமம், வல்லமையும் அருளினார் என்று (தானி.2:37).

இதனாலேயே ராஜாவுக்கு, பெருமை - மேட்டிமை வந்து, பொற் சிலையை உருவாக்கியிருக்கிறான் என்று கணிக்க வாய்ப்புண்டு. மேலும், இஸ்ரேலரை ஆளும் புறஜாதி பாபிலோன் ராஜ்யம் முதற்கொண்டு, புறஜாதிகளின் முடிவுரை இஸ்ரேலர் சரித்திரத்தில் வரும் ராஜ்யங்களில், இந்த விக்ரக ஆராதனை - man made image worship - இருந்து கொண்டு இருக்கிறது. அன்று முதல் பலநாடுகளுக்கும் இது பரவியது. Babylonian Cultsல் இதுவும் ஒன்று. உதாரணத்திற்கு,

1. ரோம சக்கரவர்த்தி வணக்கம்
2. ஜப்பானிய ஷின்டோ வணக்கம்
3. சோஷயத் லெனினிய வணக்கம்
3. காந்தி, அண்ணா, பெரியார் வணக்கம்
4. கடைசி நாளில் நடக்கப்போகும் அந்தி கிறிஸ்துவின் சிலை வணக்கம் (வெளி.13:14,15,14:8-11) (இதை வணங்கியவர்களின் நிலை வெளி.19:20லும், வணங்காதவர்களின் நிலை வெளி.20:4லும் சொல்லப்பட்டிருப்பதை வாசியுங்கள்).

கீதவாத்தியங்களின் சத்தத்தைக் கேட்ட உடனே, பொற்சிலையின் பிரதிஷ்டைக்கு வந்த அனைவரும் சிலையை வணங்கினர். ஆனால்,

அடிமைகளாய் வந்து, பாபிலோன் மாகாண காரியங்களை விசாரிக்க ராஜாவால் ஏற்படுத்தின, யூத இளைஞர்களாகிய, அனனியா, மிஷாவேல், அசரியா மட்டும் ஆராதனை செய்யவில்லை. இவர்கள் மேல் ஏற்கெனவே பொறாமையும், கோபமும் கொண்டிருந்த கல்தேயர், ராஜாவிடம் புகார் கூறினார் (தானி.3:12). சிலையைப் பணிந்து கொள்ளாதது மட்டுமல்ல; ராஜாவின் தேவர்களையும் ஆராதிப்பதில்லை என்று அவர்கள் இருப்பதைக் கேட்ட ராஜாவுக்கு உக்கிர கோபம். உடனேயே அவர்களை அக்கினிச் சூளையில் போடவில்லை. அவர்களை அழைத்து, விசாரித்து, மறுபடியும் சிலையை வணங்க 2வது தருணம் கொடுத்தான். அவர்கள் வணங்கா விட்டால், எரிகிற அக்கினிச் சூளையில் போடப்படுவார்கள் என்றும், ராஜாவின் கைக்கு அவர்களை தப்புவிக்கப் போகிற தேவன் யாரென்றும், ராஜா கேட்டான்.

அடிமையாய் வந்திருக்கும் இம்மூவரும் கர்த்தர்மேல் விசுவாசம் உள்ளவர்களாய் சொன்ன விசுவாச பதில்களைப் பாருங்கள் (தானி.3:16-18).

1. நாங்கள் இதுபற்றி பதில் சொல்ல அவசியமில்லை; ஆனாலும் கேளும்! (தைரிய வார்த்தை).

2. நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை விடுவிப்பார் (இது விசுவாச வார்த்தை; It brings suecess).

3. தானி.3:18ஐ வாசித்தால், "தேவன் விடுவிப்பார்" என்ற விசுவாச வார்த்தையைச் சொன்னவர்கள், "விடுவிக்காமற் போனாலும்" என்ற அவிசுவாச வார்த்தையை சொல்வார்களா என்பதை தியானிக்கலாம். அவர்கள் தேவன் விடுவிக்காமல் போனால் என்ற அவிசுவாச வார்த்தையை சொல்லியிருந்தால், அவர்கள் அக்கினிச் சூளையிலே வெந்து போவார்கள் அல்லவா! பின்பு எப்படி, "ராஜாவின் தேவர்களுக்கு ஆராதனையும் ராஜாவின் சிலையைப் பணிவதும் இல்லை" என்று சொல்ல முடியும்? மரித்தபின் ஆராதனை செய்ய முடியுமா? சிந்தியுங்கள். தானி.3:17,18 இரண்டையும் தியானத்தோடு வாசித்தால், மூலப்பிரதியில் உள்ளது புரியும். அதாவது, ராஜா, இம்மூவரையும் விடுவிக்காமற் போனாலும், தேவன் விடுவிப்பார். தேவனால் விடுவிக்கப்படும் நாங்கள் சிலைய வணங்கமாட்டோம் என்றனர்.

இப்படியாய், விசுவாசப் பதில் கொடுத்த, இம்மூவரும், அந்திகிறிஸ்துவின் கால, மீதமான இஸ்ரேலருக்கு நிழலாட்டமாய் காணப்படுகிறார்கள் (ஏசா.1:9; ரோ.11:5; சங்.2:5; வெளி.7:14).

இந்த மூவருக்கும் ராஜா 2வது தருணம் கொடுக்க, தேவனால் வழிநடத்தப்பட்டதற்கு காரணம்:-

1. இவர்களின் விசுவாச வார்த்தைகள் ராஜாவின் காதுகளில் படவேண்டும்.

2. அதன் பின்னால் நடக்கும் காரியங்களையும் ராஜா அறிய வேண்டும்; உணர வேண்டும்.

இவர்களின் தைரியமான விசுவாசப் பதிலைக் கேட்ட ராஜா கடுங்கோபங் கொண்டு, சூளையை 7 மடங்கு சூடாக்கச் சொல்லி, அவர்களை சூளைக்குள் போடக் கட்டளை இட்டான். சூளை மிகவும் சூடாயிருந்தபடியால், அவர்களைத் தூக்கிக் கொண்டுபோய் போட்ட புருஷர் எரிந்து மாண்டனர். ஆனால் உள்ளே கட்டுகளினின்று, போட்ட 3பேர் மட்டுமல்ல, 4 பேர் சூளைக்குள் விடுதலையாய் உலாவுகின்றனர். அந்த 4வது ஆள் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருப்பதை ராஜா கண்டு பிரமித்தான்.

**யார் இந்த தேவபுத்திரனுக்கு ஒப்பானவர்?** இது கேள்வி. மூலபாஷையில், "a son of God" என்று போட்டிருப்பதால், "it is an angel or super human being" என அர்த்தமாகிறது. தேவகுமாரன் என்றால், மரியாளிடம் பிறக்கப்போகும் இயேசு என்று ராஜாவுக்கு தெரியாது. (லூக்.1:35). ஆனால், ராஜா இந்த தேவபுத்திரருக்கு ஒப்பானவரை, தேவதூதன் என்று தானி.3:28ல் சொல்கிறான். இஸ்ரேல் மூலமாய் கேள்விப்பட்டது இவனுக்குள் இருக்கிறது. நிச்சயமாய் இவர், குமாரனாகிய கர்த்தர்தான். இஸ்ரேலர் இவரை அறிந்திருந்தனர். எனவேதான், தானியேல் இங்கே இப்படியாய் பதிய வைக்கிறான். (இது குறித்து, ஜுலை 2016 "விசுவாச முழக்கம்" இதழில் உள்ள, "பிசாசுக்கும் யாருக்கும் போராட்டம்?" என்ற செய்தியையும், "உங்களுக்குத் தெரியுமா?" என்ற நூலில் பக்கம் (52)ல் உள்ள "பழைய ஏற்பாட்டில் உள்ள கர்த்தருடைய தூதனானவர் யார்?" என்ற செய்தியையும் வாசியுங்கள்).

பிரமித்த ராஜா, உடனே அக்கினிச் சூளையின் வாசலுக்கு அருகே வந்து, "உன்னதமான தேவனுடைய தாசர்களே வெளியே வாருங்கள்" என்றான். எந்த தேவனாலும் தப்புவிக்க முடியாமல் மாண்டுபோங்கள் என்று அக்கினியில் தள்ளிய ராஜா, நம்தேவனின் மகிமையை, கண்ணாரக்கொண்டு, "உன்னதமான தேவன்" என்று புகழும் நிலைக்கு மாற்றிய நம் தேவனுக்கு தோத்திரம். நம் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. ஆமென். இவர் தம்முடைய விசுவாசப் பிள்ளைகளை

தப்புவிப்பவர்; சாட்சியாய் நிறுத்துபவர்; அதன் மூலமாய் தம் மகிமையை வெளிப்படுத்தி, எதிரியையும் விசுவாசிக்க வைக்கிறவர். அங்கே வந்தவர்கள் அத்தனை பேரும் இந்த மூவருக்கும் அக்கினியால் ஒரு சேதமும் இல்லாததைக் கண்டார்கள் (தானி.3:27).

அப்போது ராஜா சொன்னதைப் பாருங்கள் (தானி.3:28,29). முதலில் நம் தேவனை துதித்தான். இவ்விதமாய் இரட்சிக்கிறதேவன் வேறொருவர் இல்லை என்றான். இந்த மூவருக்கும் விடுதலை கிடைத்த காரணத்தை ராஜாவே கூறுவதைப் பாருங்கள். இங்கு தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவிக்கப் பணியாமல், அவரையே நம்பி ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக் கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி தம்முடைய தாசரை விடுவித்தார். **நம்மைப்பற்றி மற்றவர்கள் இப்படியாய் சாட்சி சொல்ல வேண்டும்.** இதை வாசிக்கும் தேவஜனமே! உங்கள் சாட்சி வாழ்க்கையால் இந்த ராஜாபோல் மனம்மாறியோர் எத்தனை பேர்?

**ராஜா இட்ட ஆணையைப் பாருங்கள்** (Decree. தானி.3:29)

1. இந்த தேவனுக்கு விரோதமாய் தூஷண வார்த்தையை யார் சொன்னாலும் துண்டிக்கப்படுவர்.
2. அவன் வீடு எருக்களமாக்கப்படும்.
3. இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை.

ராஜா இம்மூவரையும் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்.

**இங்கே பலருடைய கேள்வி:-**

1. இந்த சிலை வணக்கத்தின்போது தானியேல் என்ன ஆனான்?
2. அவன் சிலையை வணங்கிவிட்டானா?
3. தானியேலும், அவனோடு சேர்ந்த மற்ற அடிமைப்பட்ட யூதர்கள் என்ன ஆனார்கள்?

**ஆவியானவர் மூலமாய் நாம்தரும் பதில்:**

1. தானி.2:49ன் படி தானியேல், ராஜாவின் கொலுமண்டபத்தில், ராஜாவுக்கு அடுத்த நிலையில் பணிபுரிவதால், அவனை யாரும் கண்டுகொள்ளாதிருந்திருக்கலாம். அல்லது
2. அவசரப் பணியினிமித்தம் வேறு ஊர் போயிருக்கலாம். அல்லது
3. மற்ற யூதர்களும், தானியேலும் இந்த பிரதிஷ்டைக்கு வராதிருந்திருக்கலாம். அல்லது

4. இந்த மூன்று பேர் மாத்திரமே கல்தேயரின் கண்களில் பட்டடிருக்கலாம். அல்லது

5. இம்மூவரும் எரிந்துபோனபின், உயர்பதவியிலுள்ள தானியேலைப் பற்றி புகார் செய்ய காத்திருந்திருக்கலாம். அதற்குள், பெரிய அதிசயம் நடந்து, அதை அனைவரும் கண்டு பிரமித்து, ராஜாவே மனம்மாறி ஆர்டர் போட்டதால் அவர்களுடைய எண்ணம் செயல்படுத்த முடியாமல் போயிருக்கலாம்.

எது எப்படியோ, இம்மூவரின் விசுவாசம் (எபி.11:34) இந்தக் கடைசி நாட்களில் நமக்குத் தேவை. இதனால் நம் ராஜாக்களின் மனம் மாற்றப்பட வேண்டும் ஆமென்.

**குறிப்பு** :- கத்தோலிக்க பைபிளில், தானியேல் 3ம் அதிகாரத்தில், 1 முதல் 100 வசனங்கள் இருக்கின்றன. அவைகளில் வசனம் 24 முதல் 90 வரை உள்ளவை நமது பைபிளில் இல்லை; தள்ளப்பட்டிருக்கிறது. அந்த வசனங்கள் வெறும் ஜெபமும், பாடலும்தான். கத்தோலிக்க பைபிளின் கடைசி மூன்று வசனங்கள், 4ம் அதிகாரத்துக்கு உரியது என்பது குறிப்பிடத்தக்கது.

❖ ❖ ❖

# 4ம் அதிகாரம் (தரிசனம் "மரம்")

பாபிலோன் மகாராஜா நேபுகாத்நேச்சார், தனது சமஸ்தானத்துக்கு உட்பட்டவர்களுக்கு எழுதிய அதிகாரமுள்ள கடிதம்தான் இந்த அதிகாரம். மனந்திரும்பிய ராஜா, உன்னத தேவனைப் புகழ்ந்து ஒரு சுவிசேஷம் சொல்வதுபோல இது உள்ளது. இந்த அதிகாரத்தில் கீழ்க்கண்ட, Gods divinity and his divine works are revealed by both நேபுகாத்நேச்சார் & தானியேல்.

1. அவருடைய ராஜ்யம் இந்த பூமியில் நித்தியராஜ்யம்; உலகம் முழுவதும் ஆள்பவர் அவரே.

2. His dominion is from generation to generation. தேவ மக்களின் நித்திய வாழ்வு இந்த பூமியில் இருக்கும் (See உபா.7:9) தானி.4:3ல் ராஜாவே இதை ருசித்துக் சொல்கிறான்.

3. தேவனுடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.

4. அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் (தானி.28 - 37).

5. நம் தேவன் ராஜாக்களுக்கெல்லாம் ராஜா.

6. இரகசியங்களை, மறைபொருளை, கருகலான சத்தியங்களை தன்பிள்ளைகளுக்கு வெளிப்படுத்துகிறவர் (see ஆதி.18:18).

7. தன்னை நம்புகிறவர்களைப் பாதுகாக்க தேவதூதர்களை அனுப்புகிறார்.

8. தேவ ஆவியானவர் மனிதனுக்குள் வாசம் செய்வார் (தானி.4:8,9,18 & 1 கொரி. 6:19)

9. பூமியிலுள்ள ஞானிகளெல்லாம். மனிதர்களின் பிரச்சனைகளை முழுமையாய் தீர்த்து வைக்க முடியாது (தானி.4:4-8).

10. உண்மையான நம் தேவனைப்போல், வேறே எந்த உலக தெய்வங்களும் அற்புதங்கள் செய்ய முடியாது (தானி.4:3)

11. தான் விரும்புகிறவர்களுக்கு நம் தேவன் அரசாட்சியைத் தருகிறார் (தானி.4:17, 32) இதை வைத்து, அரசாட்சி கிடைப்பதெல்லாம் நம் தேவனால் தான் என்று சொல்லக்கூடாது.

இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். ராஜா, தான்கண்டதை, கேட்டதை, அனுபவித்ததை, விசுவாசித்ததை, சகலருக்கும் வெளிப்படுத்தி, நம் தேவனுடைய சித்தம், நீதி,. நியாயங்களை உணரவைக்கிறான்.

**எதனால் இப்படி ஒரு கடிதம் எழுதுகிறான்?**

ராஜா ஒரு சொப்பனம் கண்டான். அதில், இலைகள் நேர்த்தியாயும், கனிமிகுந்தும், எல்லாம் மிருகங்கள் ஆகாயத்துப் பட்சிகள் போஷிக்கப்படத்தக்கதாயும் ஒரு விருட்சம் வளர்ந்திருந்தது. அப்போது, வானத்திலிருந்து ஒரு காவலனாகிய பரிசுத்தவான் உரத்த சத்தமிட்டு இறங்கிவந்து, அதை வெட்டிப்போட்டு சிதறடித்தான். இதனால். மிருகங்களும், பட்சிகளும் போய்விட்டன. ஆனால் அடிமரம் மட்டும் பூமியில் இருந்தது. இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு, ஆகாயத்துப் பனியிலே நனைந்து, ராஜாவுடைய இருதயம் மிருகநிலைக்குப்போய், 7 வருஷங்கள் அப்படியே இருக்குமென்றும், தனக்குச் சித்தமானவனுக்கே ராஜ்யத்தைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும், ராஜவாக்கிறாரென்றும், காவலாளியாகிய பரிசுத்தவான்

தீர்மானமாய் சொன்னான். தேவனின் சித்தம், தீர்க்கதரிசனம் கூடமாறும்; ஆனால் அவரின் தீர்மானம் மாறாது. இந்த சொப்பனத்தின் அர்த்தத்தை பாபிலோனிலுள்ள சாஸ்திரியர், ஜோஷ்யர், கல்தேயர், குறிசொல்வோர் எல்லோரிடமும் ராஜா கேட்டான். நேரிடையாக தானியேலிடம் கேட்குமளவுக்கு ராஜாவின் விசுவாசம் வளரவில்லை. 2ம் அதிகாரம் மற்றும் 3ம் அதிகாரத்தில் வந்த விசுவாசம் அவனுக்குள் நிலைக்க வில்லை. இந்த காலகட்டத்தில், பலர் - விசேஷமாய் - கிறிஸ்தவர்களில் பலர், இப்படிப்பட்ட விசுவாச நிலையில்தான் இருக்கிறார்கள். தானியேல் 2ம் அதிகாரத்தில், சொப்பனம் சொன்னால் அர்த்தம் சொல்வோம் என்ற சாஸ்திரிகள், கல்தேயர், இப்போது, சொப்பனம் சொல்லியும் அர்த்தம் சொல்ல முடியவில்லை. அன்றைக்கும் தேவஆவியை உடைய தானியேல் தான் விளக்கினான். இன்றைக்கும், அவனிடம்தான் ராஜா ஓடிவந்தான். சொப்பனத்தைக் கேட்ட தானியேல், ஒரு நாழிகை (ஒருமணி) மட்டும் சிந்தித்து கலங்கினான். ("Then Daniel, whose name was பெல்தெஷாத்சர், was astonished (perplexed) for one hour and his thoughts troubled him" - See also தானி.7:19,28,27). ஏன் கலக்கம் என்று ராஜாவே கேட்டான். இந்த சொப்பனம், உம் பகைவர்களுக்கு உரித்தானால் நல்லது என்று தானியேல், இரக்கம் நிறைந்த பதிலளித்தான்.

**சொப்பனத்தின் விளக்கம்:-**

வானளாவிய உயர்ந்தமரம் ராஜாவைக் குறிக்கிறது. ராஜா தள்ளிவிடப்படுவார்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பார்; பசும் புல்லின் நடுவே தங்கி, ஆகாயத்துப் பனியிலே குனைந்து, மாடுகளைப்போல 7 காலங்கள் - 7 வருஷங்கள் புல் தின்பார். எதுவரை இப்படியிருக்கும்? உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தின் ஆளுகைசெய்து, தமக்கு சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை ராஜா அறிந்து கொள்ளுமட்டும் இப்படி நடக்கும் (தானி.4:25). ராஜா, பரமனின் அதிகாரத்தை அறிந்த பின், ராஜ்யம் நிலை நிற்கும் என்று தானியேல் விளக்கி (தானி.4:26), தேவன் சொல்லும் இந்த ஆலோசனையை உணர்ந்து, நீதியைச் செய்து, பாவங்களையும் அக்கிரமங்களையும் அகற்ற வேண்டும் என்ற இந்த இரட்சிப்பின் செய்தியை, அடிமை நிலையிலிருந்தும் கூட ராஜாவுக்கு தானியேல் தெரிவிக்கிறான் (தானி.4:27). இது, கடைசி நாட்களில் வாழும் நமக்கும் எச்சரிப்புக்காய் எழுதப்பட்டிருக்கிறது.

**7 காலங்கள் எப்படி 7 வருஷமாகும்?** இது கேள்வி. ஒரு சிலர் சொல்வது, தீர்க்கதரிசனத்தில் ஒருநாள் என்பது ஒரு வருஷத்தைக்

குறிக்கிறது என்கிறார்கள். இதற்கு ஆதாரமாய், எசே.4:6; எண். 40:34 போன்ற வசனங்களைச் சொல்வார்கள். அப்படியானால் இந்த 7 காலங்கள் = 7 வருஷம் என்பது, 7x 360 நாள் = 2520 வருஷம் என்பார்கள் சிலர், இதை இப்படியாய் calculate பண்ணி, கி.மு. 606 முதல் புறஜாதியார் காலம் நிறைவேறும் வரை செல்லும் என்கிறார்கள். (அவர்களின் கருத்து, அந்த மரம் இஸ்ரேல் ராஜ்யம் என்பதாகும்) அப்படியானால், 2500-606=1914லிலேயே புறஜாதியாரின் காலம் முடிந்திருக்க வேண்டுமே! இயேசு வந்து, அர்மெகதோனில் அந்திகிறிஸ்து அழிந்திருக்க வேண்டுமே! எனவே இந்த calculation எல்லாம் wrong. (இதை வைத்துதான் யேகோவா விட்னஸ் சபையார் இயேசு வந்துவிட்டார் என்று சொல்கிறார்களா?) உண்மையாகவே, சரித்திரப்படி இந்த ராஜா 7 வருஷங்கள் புல் தின்றானாம். எனவே 7 காலங்கள் என்பது 7 வருஷங்களைத்தான் குறிக்கிறது என்று எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் வெளி.12:14ல், "ஒருகாலமும் காலங்களும், அரைகாலமும்" என்பது, 1+2+1/2=3 1/2 வருஷங்களைக் குறிக்கிறது என அறிகிறோம். (see தானி.7:25; வெளி.12:6;11:14; 13:5). எனவே 7 காலங்கள் என்பது 7வருஷங்கள்தான்.

**இந்த தீர்மானத்தின் விவரம் நிறைவேறிற்றா என்று பார்ப்போம்:-**

ஒரு வருடம் கழித்து, ராஜா அரண்மனையில் உலாவி, "என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமைப் பிரதாபத்தைக் கொண்டு, ராஜயத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகாபாபிலோன் அல்லவா!" (தானி.4:30) என்று பெருமையான வார்த்தைகளைப் பேசினான். அந்நேரமே அவனது ராஜ்யபாரம் தள்ளப்பட்டது; மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான். தேவசித்தம் ராஜாவுக்கு, சொர்ப்பனம், தரிசனம் மூலம் காட்டியும், அவைகளை தேவமனுஷனைக் கொண்டு விளக்கிச் சொல்லியும்; தன் ராஜ்யத்தைக் குறித்த பெருமையில் அவன் இருந்ததால், அவனுக்கு சொன்னபடியே நிறைவேறியது.

அந்த 7 வருஷ முடிவில் அவனுக்கு புத்திவந்தது கெட்டகுமாரனைப் போல (லூக்.15:17). அதன்பின்,

1. உன்னதமானவரை தோத்தரிக்கிறான்.
2. தேவனுடைய ராஜ்யமே என்றென்றும் நிலைத்திருக்கும் என்று அறிக்கையிடுகிறான்.
3. தேவனின் ராஜரீகத்தை ருசித்துப்பார்த்து, தன்னுடைய குடிகளுக்கெல்லாம் நிரூபம் மூலம் பிரசித்தப்படுத்துகிறான்.

இதை வாசிக்கும் தேவஜனமே! கர்த்தரே ஆள்கிறவர்! (ஆண்டவர்). அவருடைய ஆளுகையை உணர்ந்து கொள்ளுங்கள்! உலகமகா சக்கரவர்த்தியாம் நேபுகாத் நேச்சாரே மனம் மாறும் பொழுது, கடைசியிலே ராஜாக்கள் எம்மாத்திரம்? தானியேலைப் போன்றோர் எழும்பட்டும்! இயேசுவே ராஜா என்று உலகமே சொல்லும் காலம் விரைவில் உண்டு! அல்லேலூயா! நீ உலகிற்கு ஒளியாகவும் பூமிக்கு உப்பாகவும் இருந்தால்தான் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கும்!

விசுவாசிப்போம்! வெற்றியைக் காண்போம்!

இயேசு சீக்கிரம் வருகிறார்!

❖ ❖ ❖

## 5ம் அதிகாரம் (சுவரில் எழுதப்பட்ட காரியம்..)

ராஜா நேபுகாத் நேச்சாரின் பேரன் பெல்ஷாத்சார் இரண்டாவது ஸ்தானத்தில், பாபிலோனைத் தலைநகராய்க் கொண்டு ஆண்டு வந்தான் (கி.மு.553-539). முதல் ஸ்தானத்தில் இருந்தவன், இவனது அப்பாவும், நேபுகாத்நேச்சாரின் முதல் மகனுமான போனிடஸ் ஆகும். தானி.5:2ல், நேபுகாத் நேச்சாரை "தகப்பன்" என்று எழுதியிருந்தாலும், அதன்பொருள் பிதா என்பதாகும் (ancestor). உதாரணத்திற்கு, தாவீதை இயேசுவின் தகப்பன் என்று லூக்.1:31,32ல். சொல்வதுபோல. பெல்ஷாத்சாரின் அப்பா, கோரேஸ் ராஜாவிடம் (பெர்சியராஜா இவர்; இன்னும் மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் உருவாகவில்லை) போர் நிமித்தம் போயிருந்த வேளையிலே (சரித்திரம் சொல்கின்றது), பெல்ஷாத்சார் தன் பிரபுக்களில் 1000 பேருக்கு பெரிய விருந்து வைத்தான். எருசலேம் தேவாலயத்திலிருந்து, நேபுகாத் நேச்சாரல் கொண்டு வரப்பட்ட, பொன் வெள்ளிப் பாத்திரங்களை தன் தேவனின் பண்டசாலையிலிருந்து எடுத்துவரச் சொல்லி, அதிலே ராஜாவும், பிரபுக்களும், அவனுடைய மனைவிகளும், வைப்பாட்டிகளும் திராட்சை ரசம் (மது) குடித்தார்கள். மட்டுமல்ல. அப்போது, பொன்னும் வெள்ளியும், வெண்கலமும், இரும்பும், மரமும், கல்லுமாகிய அவர்கள் தேவர்களைப் புகழ்ந்தார்கள்.

அந்நேரம், அரண்மனையின் சுவரிலே, மனித கையுறுப்பு தோன்றி எழுதுவதை ராஜா கண்டு கலங்கினான். தன் தாத்தா செய்தபடியே, ஜோஷ்யரையும், கல்தேயரையும், குறி சொல்கிறவர்களையும் அழைத்து,

இந்த எழுத்தை வாசித்து அர்த்தம் சொல்பவனுக்கு, இரத்தாம்பரமும், கழுத்திலே பொன் சரப்பணியும் தரிக்கப்பட்டு, ராஜ்யத்திலே, மூன்றாம் அதிபதியாய் இருப்பான் என்றான். ஒருவராலும் வாசிக்கவும், அர்த்தம் சொல்லவும் முடியாமல் போயிற்று. இதனால் ராஜா கலக்கம்; அவன் முகம் வேறுபட்டது. புரபுக்கள் எல்லாம் திகைத்தார்கள். இதைக் கேள்விப்பட்ட ராஜாத்தி, விருந்து சாலைக்குள் வந்து, நேபுகாத் நேச்சாரால், சாஸ்திரிகள், ஜோஷ்யர், கல்தேயர், குறி சொல்வோருக்கும். அதிபதியாக வைக்கப்பட்ட தானியேலுக்குள், சொப்பனங்களை, வியர்த்தி பண்ணுகிறதும், கருகலானவைகளை தெளிவிக்கிறதுமான, அறிவும் புத்தியும் விசேஷித்த ஆவியும், இருப்பதால், அவன் அர்த்தத்தை வெளிப்படுத்துவான் என்றான். அதன்படி தானியேல் வரவழைக்கப்பட்டான்; ராஜா, தானியேலின் ஞானத்தைப் புகழ்ந்து இப்போதும், நீ இந்த எழுத்தை வாசிக்கவும், இதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கவும், உன்னாலே கூடுமானால், நீ இரத்தாம்பரமும், கழுத்திலே பொற்சரப்பணியும் தரிக்கப்பட்டு, ராஜ்யத்திலே மூன்றாம் அதிபதியாய் இருப்பாய் என்றான் (தானி.5:16). தானியேல் அந்த வெகுமதியை ஒரு பொருட்டாய் எண்ணவில்லை (தானி.5:17). தானியேலின் வார்த்தைப்படியே அந்த வெகுமதி அவனுக்குக் கிடைக்கவுமில்லை. (see.மத்.15:28).

**தானியேல் சொன்ன அர்த்தமாவது:-**

"உம்முடைய பிதாவாகிய நேபுகாத் நேச்சாருக்கு, உன்னதமான தேவன், ராஜ்யத்தையும் கனத்தையும், மகிமையையும் கொடுத்தார். அவருடைய இருதயம் மேட்டிமையானது. மனுஷர்களின்று தள்ளப்பட்டார்; காட்டுக் கழுதைகளோடு சஞ்சரித்தார். உன்னதமான தேவன், மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனை அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று அவர் உணர்ந்து கொள்ளுமட்டும், மாடு போல் புல்லை மேய்ந்தார். நீர் இதையெல்லாம் அறிந்தும்,

1. உமது இருதயத்தை தாழ்த்தவில்லை.
2. பரலோகதேவனின் ஆலயப் பாத்திரங்களில் திராட்சை ரசம் குடிக்கிறீர்.
3. உன்னத தேவனை மகிமைப்படுத்தாமல், பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இரும்பும், மரமும், கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தீர்.

எனவே இந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்து." என்றான்.

"மெனே மெனே, தெக்கேல், உப்பார்சின்" என்பதே அந்த எழுத்து, **மெனே** என்றால் தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும் **தெக்கேல்** என்றால், நீ தராசிலே நிறுத்தப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும், **உப்பார்சின்** என்றால், உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தம்" என்று சொன்னான். (ஆங்கிலத்தில், God, numbered, weighed and divided என்று பொருள். உப்பார்சின் என்பது ஒருமை; "பேரேஸ்" என்பது பன்மை - தானி.5:28. இந்த எழுதப்பட்ட எழுத்தின்மொழி அராமிக் மொழியாகும்.)

அப்பொழுது பெல்ஷாத்சார், தானியேலுக்கு இரத்தாம்பரத்தையும், அவனுடைய கழுத்தில் பொற்சரப்பணியையும் தரிப்பிக்கவும், ராஜ்யத்திலே அவன் மூன்றாம் அதிகாரியாயிருப்பவன் என்று அவனைக் குறித்துப் பறைமுறையிடவும் கட்டளையிட்டான். அன்று ராத்திரியிலே ராஜா கொலை செய்யப்பட்டு, மேதியனாகிய தரியு என்பவன், பாலஸ்தீனாவுக்கு ராஜாவானான். எனவே, தானியேலுக்கு ராஜா சொன்னபடி நடக்கவில்லை. வெகுமதியைப் பற்றி, தானியேல் சொன்ன வார்த்தைப்படியே தானியேலுக்கு ஆயிற்று. (தானி.5:17) மட்டுமல்ல... தானி 2ம் அதிகார கனவுசிலைப்படி, 2வது ராஜ்யம் வந்திருக்கிறது. **தேவன் சொல்வதைத்தான் செய்வார்; செய்வதைத்தான் சொல்வார்.** தேவஜனமே! நம் தேவன் மேட்டிமை உள்ளோரை தாழ்த்துகிறார். தமக்குச் சித்தமானவர்களுக்கு ஆளுகை தருகிறார். தானியேல் போன்ற தம்முடைய பிள்ளைகளை புறஜாதியார் மத்தியிலும் உயர்த்துகிறார் என்று அறிகிறோம். இந்த தேவனின் நடைமுறை, செயல்பாடு, உலகம் முழுவதும் பொதுவான நீதி நியாயமல்ல. அப்படியானால், சதாம் உசேன், ஹிட்லர் போன்றவர்களை நம் தேவன் ஆளுகைக்கு விடுகிறாரா! **தம்முடைய பிள்ளைகளாகிய இஸ்ரேல் ஜனங்கள் சம்பந்தப்பட்ட ராஜ்ய ராஜாக்களைப் பற்றியதுதான் நம் தேவனின் இந்த நீதியும் நியாயமுமாகும்.** மட்டுமல்ல... உலகத்தின் மொத்த அரசியல், பொருளாதாரம், சமூகவியல் எல்லாமே, இஸ்ரேலை மையப்படுத்தியே நடந்து கொண்டிருப்பதால், வேதத்தில் சொல்லப்படும் இஸ்ரேலர் சம்பந்தப்பட்ட ராஜாக்களின் அடிப்படையில்தான் தேவன் உலக முடிவையே கொண்டு வருவார். ஆமென்.

❖ ❖ ❖

# 6ம் அதிகாரம் (சிங்கக் கெபியில் போடல்)

பாபிலோனை மேதிய சாம்ராஜ்யம் பிடித்துவிட்டது. இது தானியேல் 2ல் உள்ள சிலையின், பொன்னான தலைக்குக் கீழேயிருந்த, வெள்ளியாகிய மார்பாகும்.

**மேதிய ராஜாவாகிய தரியுவின் நாட்களில் நிமிக்கப்பட்டவர்கள்:-**

1. ராஜ்யத்தை ஆள 120 தேசாதிபதிகள்.
2. அவர்களைக் கண்காணிக்க 3 பிரதானிகள்
3. அதிலே தானியேல் ஒரு பிரதானி. அடிமையாகிய தானியேலுக்குள் விசேஷித்த ஆவி, வல்லமை இருந்ததால், ராஜ்யம் முழுமைக்குமே அதிகாரியாக வைக்க ராஜா எண்ணினான் (தானி. 6:3).

இதனால், தானியேலின் மேல் பொறாமை கொண்ட பிரதானிகளும், தேசாதிபதிகளும், தானியேலின் ராஜ்ய விசாரிப்பிலே குற்றம் காணத் தொடங்கினார்கள்; ஒன்றையும் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே கடவுளைப் பற்றிய ஆன்மீகக் காரியத்திலே குற்றப்படுத்த எண்ணி, ராஜாவிடம் கூடி வந்து,

"ராஜாவைத் தவிர எந்த தேவனையோ, மனுஷனையோ நோக்கி 30நாள் விண்ணப்பம் பண்ணினால், அப்படிப்பட்டவன், சிங்கக் கெபியிலே போடப்படவேண்டும்" என்கிற கட்டளையை, மேதியருக்கும், பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படியே மாற்றப்படாதபடி கையெழுத்திட வேண்டும் என்று வேண்டினார்கள். (மேதியரும், பெர்சியரும் இணைந்த, கூட்டு ராஜாக்கள் என்பது குறிப்பிடத்தக்கது). ஒரு பிரமாணம் ராஜாவால் முத்திரையிடப்பட்டால், அது ராஜாவால் கூட மாற்றமுடியாத பிரமாணமாயிருக்கும் என்பது மேதியபெர்சியரின் நடைமுறை. **இதற்கு உதாரணமாய்,** பெர்சிய அகாஸ்வேரு ராஜா, யூதருக்கு விரோதமாய்ப் போட்ட பிரமாணத்தை (எஸ்தர் 3:13), தன்மனைவி எஸ்தரின் விருப்பப்படியே மாற்ற முடியவில்லை என்பதை எஸ்தர் 8:8ன் மூலம் அறியலாம். எஸ்தர் 8:11, 12ல், ராஜா வேறொரு சட்டம் போட்டதால், பழையசட்டம் உயிரற்றுப் போயிற்று.

தரியு ராஜாவின் சட்டமும் கையெழுத்தானது. மதமாற்ற தடைச்சட்டம், தமிழ் நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் ஜெயலலிதாவால் வந்தபோது, பயந்து போன கிறிஸ்தவர்கள் போலில்லாமல், அடிமைத்தனத்திலிருந்த போதும், எப்போதும் போல், மேலறையில்

எருசலேமுக்கு நேராய் ஜன்னல்கள் திறந்திருக்க, தினமும் 3 வேளையும் முழங்காற்படியிட்டு தானியேல் ஜெபித்தான். இதைக்கண்ட தானியேலின் விரோதிகள் ராஜாவிடம் புகார் செய்தனர். இதைக்கேட்ட ராஜா, தானியேலின்மேல் அன்பும் நம்பிக்கையும் இருந்ததால், தானியேலைத் தப்புவிக்கும்படி தன்மனதை வைத்து, சூரியன் அஸ்தமிக்கும்வரை பிரயாசப்பட்டான். அந்த விரோதிகள் மறுபடியும் வந்து, ராஜாவின் எந்தக் கட்டளையும் மாறாத பிரமாணம் என்று அறிவீராக என்றார்கள்.

இதனால், ராஜாவின் கட்டளைப்படியே, தானியேலை சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். கெபியின் வாசல் ஒரு கல்லால் மூடப்பட்டு, ராஜா மற்றும் புரபுக்கள் மோதிரங்களினால் முத்திரையிடப்பட்டன. அப்போது ராஜா தானியேலை நோக்கி, "**நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார்**" என்றான். மனித ராஜாவால் முடியாததை, நம் தேவன் செய்வார் என்று புறஜாதியான் அன்றும் சொன்னான்; இன்றும் சொல்கிறார்கள். ஆனாலும், தானியேலின் விசுவாசம், என்றுமே பெரும்பாலான கிறிஸ்துவர்களுக்கு, இந்தக் கடைசி காலத்தில் இல்லை என்பது வருத்தப்படத்தக்கது.

ராஜா, இரவு முழுவதும் தூங்கவில்லை; போஜனமும் பண்ணவில்லை; கீத வாத்தியங்களும் முழங்கவில்லை. **காலமே** எழுந்து, சிங்கக் கெபிக்கு, **தீவிரமாய்ப்** போய், **துயரசத்தமாய்** தானியேலைக் கூப்பிட்டு, "நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை சிங்கங்களுக்கு தப்புவிக்க வல்லவராய் இருந்தாரா?" என்று கேட்டான். **என்னே ராஜாவின் விசுவாசம்!** இது எப்படி வந்தது? தானியேலின் நடக்கையினால் சாட்சி வாழ்க்கையினால்தான் - அல்லேலூயா!

**இதற்கு தானியேலின் பதிலைப் பாருங்கள்:-** "தேவனுக்கு முன்பாக நான் குற்றமற்றவன்; உமக்கு முன்பாகவும் நீதிக்கேடு செய்யவில்லை. அதனால் சிங்கங்களின் வாயை தேவன் கட்டிப் போட்டார்." இது எப்படி நடந்தது? உண்மையிலேயே கட்டினாரா? தானி. 6:23ஐ வாசியுங்கள்:- **தானியேல் தேவன்பேரில் விசுவாசித்திருந்தபடியால் அவனால் ஒரு சேதமும் காணப்பட வில்லை**" (see எபி.11:33 also). விசுவாச வல்லமை Power of faith - மகிமையளிக்கிறது; சிங்கத்தை தடை செய்கிறது.

இதை வாசிக்கும் தேவசனமே! தேவன்பேரில், தேவ வசனத்தின்பேரில் வைத்திருக்கும் விசுவாசத்தின் வல்லமையை, பலனை,

மகிமையைப் பார்த்தாயா? விசுவாசம் வெற்றியைத் தரும். Faith brings success. உன் விசுவாச வல்லமையின் அளவுப்படியே தேவனுடைய வல்லமையும் இணைந்து, நீ விரும்புகிறதற்கும் வேண்டிக் கொள்கிறதற்கும் மேலான காரியங்கள் நடப்பதைக் காண்பாய் (எபே.3:20).

இதைக்கேட்ட ராஜா மிகவும் சந்தோசப்பட்டு தானியேலை கெபியிலிருந்து தூக்கிவிடச் சொன்னான். தானியேல் மேல் குற்றம் சாட்டினவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் கெபியிலே போடச் சொன்னான். அவர்கள் கெபியின் அடியில் சேருமுன்னே, சிங்கங்களே பாய்ந்து, அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டது.

பின்பு தரியுராஜா ஒரு order போட்டான்:- என் ஆளுகைக்குள் உள்ள எல்லோரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக பயப்பட வேண்டும்; அவர் ஜீவனுள்ள தேவன்; அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய மகிமை முடிவு பரியந்தமும் நிற்கும். தானியேலை தப்புவித்த அவரே, தப்புவிக்கிறவரும், இரட்சிக்கிறவரும், வானிலும் பூமியிலும் அற்புதங்களையும், அடையாளங்களையும் (அதிசயங்கள்) செய்கிறவர் என்று எழுதி, அனைவருக்கும் ஒரு தாக்கீது அனுப்பினான்.

மேதியனாகிய தரியுவின் காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்ய காலத்திலும், தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது.

இதை வாசிக்கும் தேவ ஜனமே! தானியேலைப்போல, வல்லமையுள்ள - சாட்சியுள்ள, விசுவாச ஜீவியம் இருந்தால், மாறாத பிராமணத்திற்குரிய மேதிய - பெர்சிய ராஜாக்களை மட்டுமல்ல... அதற்கு மேற்பட்ட எந்த அரசரையும் மனம் மாறச் செய்து, நம் பக்கம் திருப்ப முடியும் என்றும், என்ன தீமையான காரியங்கள் நம்மை நோக்கி வந்தாலும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய், அவரிடத்தில் அனபுகூருகிறவர்களுக்கு, சகலமும் நன்மைகளுக்கேதுவாய் முடிப்பார் என்றும் அறிவீர்களாக! (ரோ.8:28).

❖ ❖ ❖

# 7ம் அதிகாரம் (மிருகம் - தரிசனம்)

7ம் அதிகாரம் முதல், இஸ்ரேலர்களுக்கும் புறஜாதிகளுக்கும் பாபிலோனிய சாம்ராஜ்யம் முதல் சம்பவிக்கப் போகிறவைகளைக்குறித்து, தீர்க்கதரிசனங்களாய் சொல்லப்பட்டுள்ளது. இந்த அதிகார தரிசனம், நேபுகாத் நேச்சாரின் பேரன், பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்தில் தானியேலுக்கு உண்டானதாகும். இந்த தானியேலின் தரிசனமும், நேபுகாத்நேச்சார் கண்ட 2ம் அதிகார தரிசனமும் கிட்டத்தட்ட ஒன்றுதான். ஆனால் தானியேலின் தரிசனத்தில், வரப்போகும் அந்தி கிறிஸ்துவைப்பற்றி விரிவாய்ச் சொல்லப்பட்டுள்ளது. **தானியேல் கண்டது மூன்று இராத்தரிசனங்கள்:-**

1. சிங்கம், கரடி, சிறுத்தை (தானி.7:2).
2. 4ம் மிருகம், 10 கொம்புகளையுடைய மிருகம், சின்னகொம்பு மிருகம் (தானி.7:7).
3. மனுஷகுமாரன் வருவதும், அவரது ராஜ்யம் நிறுவப்படுதலும் (தானி.7:13).

(தானி7:13,14ல் வரும் மனுஷகுமாரன் தேவனுக்கு சமமானவர்; பரலோகிலே தேவனுக்கு முன் இருக்கிறார்.) **ஆக மனுஷகுமாரன் பற்றிய காரியம் ஆதிமுதலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது**).

இப்படியாய் எழும்புகிற மிருகங்களெல்லாம், ஜனங்களிலிருந்து தான் எழும்புகின்றன. இவைகளை கண்ட தானியேலுக்கு, சஞ்சலமும், கலக்கமும் ஏற்பட்டது (தானி.7:15). சமீபத்தில் நின்ற தேவதூதன் இந்த தரிசனத்தை விளக்குகிறான் (தானி.7:16) தானியேலுக்கு, 4ம் மிருகம்பற்றியும் 10 கொம்பு பற்றியும் சின்னக் கொம்பு பற்றியும் அறிய ஆசை. அதை அந்த தேவதூதன் விளக்குகிறான் (தானி.7:23-27).

**இதைப்பற்றி விளக்கமாய்ப் பார்ப்போம்:-**

| **தானி. 7** | **தானி. 2** | **ராஜ்யத்தின் பெயர்** | **வசன ஆதாரம்** |
|---|---|---|---|
| சிங்கம் | பொன்னான தலை | பாபிலோன் | எரே. 4:7; ஆபகூக் 16,8 |
| கரடி | வெள்ளியான மார்பு | மேதிய-பெர்சிய | தானி. 8:20 |

| | | | |
|---|---|---|---|
| சிறுத்தை | வெண்கலமான வயிறு-தொடை | கிரேக்கம் | தானி.8:21,22 |
| கெடியும் பயங்கரமான மிருகம் | தொடை-கால் | ரோமர் | தானி.7:23 |
| 10 கொம்பு | பாதம்-விரல் | 10 ராஜாக்களடங்கிய Revivel Rome kingdom (அந்தி கிறிஸ்து for $3^1/_2$ years) | தானி.7:24; வெளி.13:13; 17:8; (இயேசு உயிர்த்ததுபோல வெளிப்படல்) வெளி.17:8-11ல் உள்ள 7 வது ராஜா. |
| சின்ன கொம்பு (3ல் 1) | - | Independent ராஜா (அந்திகிறிஸ்து for last $3^1/_2$ yrs) | வெளி.17:8-11ல் உள்ள 8வது ராஜா |

**குறிப்பு:**

1. சிறுத்தை 4 தலைகளை உடையதாயிருக்கும் (தானி.7:8) என்பது, கிரேக்க சாம்ராஜ்யம் அலெச்சாண்டருக்குப் பிறகு 4 பிரிவாய்ப் பிரியும்.
2. தொடை கால் என்பது, ரோம ராஜ்யம் இரண்டு பிரிவாய் மாறும் என்று தானி. 2ல் சொல்லப்பட்டதுதான். அந்த கிழக்கித்திய, மேற்கித்திய ரோம ராஜ்யங்கள் இப்போது இல்லை.
3. மறுமலர்ச்சி ரோம ராஜ்யம், 10 விரல் - 10 ராஜாக்களோடு மீண்டும் "மிருகமாய்" எழும்பும். தற்போதுள்ள EEC, ECM போன்ற ராஜ்ய அமைப்புகளுக்கு ஒரே நாணய சட்டம், வியாபாரச் சட்டம், அரசியல் ஒழுங்கு இருப்பதுபோல, இந்த வரப்போகும் மறுமலர்ச்சி ரோம ராஜ்யம் அமையும். தற்கால "யூரோ நாணய முறை" ஒரு எடுத்துக்காட்டு.
4. இந்தப் பத்து ராஜாவில் உள்ள 3 ராஜாக்களை தள்ளிவிட்டு ஒரு கொம்பு - ராஜா எழும்புவான்.

5. இந்த 10 கொம்பு - 10 ராஜா, முதல் $3^1/_2$ ஆண்டுகளும், 1 கொம்பு - 1 ராஜா, கடைசி $3^1/_2$ ஆண்டுகளும் எழும்பி ஆளும் மிருகம் - அந்திகிறிஸ்து ஆகும். (தானி.9:27; 7:25)

6. கரடியாகிய மேதிய - பெர்சிய ராஜ்யத்தின் கீழ், பாபிலேன், லிதியா, எகிப்து போன்றவை இருக்கும். இவைதான் தானி.7:5ல் உள்ள மூன்று விலா எலும்புகள்.

இந்த வரப்போகும் அந்திகிறிஸ்து என்ன செய்வானென்று அந்த தேவதூதன் சொல்வதைப் பாருங்கள்:- (தானி.7:23-25).

1. உன்னதமானவருக்கு விரோதமாய்ப் பேசுவான் இன்றைக்கும் இந்த ஆவி பல ராஜாக்களிடமும் சபையிடமும் உள்ளது (1 யோ.4:1-3).

2. உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்குவான். அவர்கள்தான், இரத்த சாட்சியாய் மரிக்க இருக்கும், இரகசிய வருகையில் கைவிடப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் மீதமான இஸ்ரேலர்கள்.

3. காலங்களை மாற்றுவானல்ல; மாற்ற நினைப்பான். இப்பொழுதே ரோம சர்க்கார், இரவு 12 மணிக்குத்தான் அடுத்தநாள் பிறக்கிறது என்று கொண்டு வந்தது உலகமெங்கும் ஏற்கப்பட்டிருக்கிறது. ஆதி. 1ன்படி, மாலையில் சூரியன் அஸ்தமித்தாலே அடுத்த நாள் பிறக்கும். நமது கிராமப் பழக்கமும் அப்படித்தான். மேலும், Lunar system முறைப்படிதான், வேதத்தில் மாதத்திற்கு 30 நாளென்றும், வருடத்திற்கு 360 நாளென்றும் இருந்தது. யூத, முஸ்லீம், தமிழர் போன்ற பல காலண்டர்கள் இப்படித்தான். ஆனால் ரோம சர்க்காரோ solar system படி, வருடத்திற்கு $365^1/_4$ நாட்கள் என்று காலங்களை மாற்றியது. வரப்போகும் அந்திகிறிஸ்து இனி என்ன செய்யப்போகிறானோ!

4. பிரமாணங்களையும் மாற்ற நினைப்பானாம். இப்போதே ரோமன் கத்தோலிக்க சபை, விக்ரக ஆராதனை கூடாது என்ற 2ஆம் பத்துக்கற்பனையை எடுத்துவிட்டு, 10வது கற்பனையை, 9,10 என்று இரண்டாய் மாற்றிவிட்டது. மட்டுமல்ல 4ம் கற்பனையில் உள்ள ஓய்வுநாள், சனிக்கிழமை என்பதை மாற்றி, ஞாயிற்றுக்கிழமை என்று ஆக்கிவிட்டது. வரப்போகும் அந்திகிறிஸ்து என்ன செய்யப் போகிறானோ!

**(குறிப்பு:-** அந்தி கிறிஸ்துவின் காலத்தில், கிறிஸ்தவ சபை இல்லாததால் (2 தெச.2) அவனின் பொல்லாத செயல்பாடுகள் எல்லாம் அவனது ஆளுகையில் உள்ள 10 ராஜ்யங்களுக்கும், இஸ்ரேலருக்கு மட்டும்தான். இந்த பிரமாணம், காலம், மாற்றம் எல்லாமே, இஸ்ரேலர் தாங்கள் கைக்கொள்ளும் நியாயப் பிரமாணத்துக்கு அடுத்ததாகத்தான் இருக்கும். அதிலே பிரதானமானது அவர்களின் பலியையும், காணிக்கையையும் ஒழிப்பதாகும் - தானி.9:27).

பரலோகிலே நியாயசங்கம் உட்கார்ந்தது (தானி.7:9, 11,12,26 பேது.4:17) பிதாவாகிய தேவன் நீதிபரராய் இருந்து, அந்திகிறிஸ்துவுக்கு தண்டனை விதித்தார். அவரருகே மனுஷகுமாரனுடைய சாயலானவர் வருகிறார். மனுஷசாயல் என்பதால், அவர் இயேசுவாகிய வார்த்தையானவர் என்று அறிகிறோம். அவருக்கு, கர்த்தத்துவமும், மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டு, சகலரும் அவரைச் சேவிக்கிறபடியால், இவர் பிதாவாகிய தேவனுக்கு சமமானவர் என அறிகிறோம் (தானி.7:14; பிலி.2:6-8). இந்த அந்திகிறிஸ்து, தரிசனத்திலே, எரிகிற அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான். இது அர்மகதோன் யுத்தத்தில் நடக்கப் போகிறது (வெளி.19:20). பரலோகிலே போடப்பட்ட தீர்ப்பை, இயேசுவானவர் பூமிக்கு வந்து நிறைவேற்றுவார்.

தரிசனப்படி, இதுவரை பூமியில் ஆண்ட, 4 புறஜாதி சாம்ராஜ்யங்களின் ஆளுகைகள், ஒன்றன்பின் ஒன்றாய் மாற்றப்பட்டாலும், முழுமையாய் புறஜாதிகளின் காலம் நிறைவேறும் வரைக்கும், அவைகள் குன்றிப்போய், வல்லமையின்றி, சாதாரணமாய் இருக்கும். பெருமையாயிருந்த அந்தசின்ன கொம்பாகிய அந்திகிறிஸ்துவின் ஆளுகை நீக்கப் போட்டபின் வானத்தின் கீழுள்ள எல்லா ராஜ்யங்களின் ஆளுகையும், ஒழிக்கப்பட்டு, ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தப்படி இஸ்ரேலருக்கும் (ஆதி.15:18-21), மீதி நமக்கும் கொடுக்கப்படும் (தானி.7:27) இந்த ஆளுகைதான் 1000 வருட அரசாட்சி (வெளி.20:4). சிலை மூலம் 4- பெரிய மிருகங்களை மட்டும் அறிந்திருந்த தானியேலுக்கு, புதிதாய் எழும்பப் போகிற சின்ன கொம்பாகிய அந்திகிறிஸ்துவின் அட்டகாச ராஜ்யத்தை ஒருவன் மூலம் (தேவதூதன்) அறிந்ததும், தானியேல் மிகவும் கலங்கினான். இஸ்ரேலர் மக்களுக்கு வரப்போகும் படுமோசமான காரியத்தால் முகம் வேறுபட்டது (வெளி.10ன் யோவானின் கசப்பு நிலைபோல). ஆனாலும் அதை அப்படியே மனதிலே வைத்துக் கொண்டான்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இப்போது இல்லாத - வீழ்ந்துபோன 4வது ரோம சாம்ராஜ்யம் (கால்), அதன் சகாக்களை உள்ளடக்கிய 10 ராஜாக்களைக் கொண்டு (10 விரல்) விரைவில் "Revival Rome Kingdom" (மறுமலர்ச்சி ரோமராஜ்யம்) என்ற பெயரில் எழும்பி, அதில் 10ல் 3ஐ தள்ளிவிட்டு ஒருவன், அந்த 10 கொம்புகளாகிய மிருகத்தைவிட பயங்கர அந்திகிறிஸ்துவாய் எழும்புவான் எனவும் அறிகிறோம். அந்த உபத்திரவ (10 ராஜா-மிருகம்), மகா உபத்திரவ (1 ராஜா - 1 கொம்பு) காலகட்டத்தில் நாம் இராதபடிக்கு இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட ஆயத்தமாயிருப்போம்! ஆமென்!

❖ ❖ ❖

## 8ம் அதிகாரம் (ஆட்டுக்கடா தரிசனம்)

பாபிலோனிய பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்தில், 10 கொம்பு - சின்ன கொம்பு ஆகிய அந்திகிறிஸ்துவைப் பற்றிய தரிசனம் தானி.7ல் கண்டு கலங்கியிருந்த தானியேலுக்கு, பெல்ஷத்சாரின் 3ம் வருஷத்தில் இந்த "வேறொரு தரிசனம்" (தானி.8:1) வெளிப்படுகிறது. இந்தக்காலம், பாபிலோன் ராஜ்யத்தின் முடிவுக் காலமாயிருப்பதால் வரப்போகும் மேதிய - பெர்சிய ராஜ்யம் குறித்தும், கிரேக்க ராஜ்யம் குறித்தும் இதிலே விளக்கமாய் காட்டப்பட்டுள்ளது. மேதிய - பெர்சிய ராஜ்ய தலைமையிடம், ஏலாமிலுள்ள சூசான் அரண்மனையாயிருக்கப் போவதால், இந்த தரிசனத்தை தானியேல் அங்கிருந்து காண்பதாக உள்ளது.

பாபிலோனை உள்ளடக்கிய, மேதிய பெர்சிய ராஜ்யத்தை ஆளப்போகும் காரியத்தை, இரண்டு கொம்புகளுள்ள ஆட்டுக்கடாவாக சித்தரிக்கப்பட்டுள்ளது (தானி.8:20). இதிலே முதலில் எழும்பும் மேதிய மன்னன் தரியும், பிற்பாடு எழும்பும் பெர்சிய மன்னன் கோரேசும் மிகவும் வல்லமையுள்ளவர்கள். இதிலே காணப்படும் உயரமான கொம்பு கோரேசை குறிக்கும். இந்த ராஜ்யத்தைத்தான் தானி.7ல், கரடியாய் காட்டப்பட்டுள்ளது. மேற்குப் பக்கத்திலிருந்து வந்த ஒரே கொம்புடைய வெள்ளாட்டுக்கடா, இந்த இரண்டு கொம்புகளையும் முறித்துப்போட்டது. இந்த வெள்ளாட்டுக்கடா கிரேக்க தேசமாகும் (தானி.8:21). **கடைசி கால சரித்திர சம்பவங்களில் வரும் ராஜ்யங்களின், ராஜாக்களின் பெயர்களை முன்கூட்டியே சொல்லும் தீர்க்கதரிசனம்**

**நம்முடையதாகும். இதனால்தான், இந்த வேதப் புத்தகத்தை, தேவனுடைய வார்த்தை என்று நம்புகிறோம்.** வெள்ளாட்டுக்கடா பெரிய கொம்பு அலெக்சாண்டரை குறிக்கிறது (see தானி.7:6). இந்த பெரிய கொம்பு முறிந்த பின்பு, அதாவது அலெக்சாண்டரின் மரணத்திற்குப் பிறகு, 4 கொம்புகள் எழும்பின. அதாவது, கிரேக்க ராஜ்யமானது மெசப்பதோனியா, சிரியா, எகிப்து, ஆசியாமைனர் என்று நான்கு ராஜ்யமாய்ப் பிரியும். இது கி.மு. 4ம் நூற்றாண்டில் நிறைவேறியது. இவைகளில் ஒன்றிலிருந்து, சின்னதான ஒரு கொம்பு எழும்பியது. தானி.11ம் அதிகாரம் படிக்கும்பொழுது, இந்தக் கொம்பு சிரியா தேசத்திலிருந்து எழும்பும் அந்தியோகஸ் எபிபேன்ஸ் (Antiochus Epiphanes) என்ற ராஜா என விளக்கமாய் அறியலாம்.

இந்த சின்னக் கொம்பும், தானி.7ல் வரும் சின்னக்கொம்பும் வேறுவேறு என முதலில் அறியவேண்டும். எப்படியெனில்,

1. தானி.7:8ல் வரும் சின்னக் கொம்பு. உபத்திரவ காலத்தில் எழும்புவதாகும். இங்கு வரும் சின்னக் கொம்போ, நான்காய்ப் பிரிந்த கிரேக்க சாம்ராஜ்யத்திலிருந்து எழும்புவதாகும்.

2. மறுபடியும் எழும்பப்போகும் 10 ராஜாக்களடங்கிய Revival Rome Kingdomவிலுள்ள, 3 கொம்புகளை பிடுங்கிப் போட்டு எழும்புவதுதான் தானி.7:8ல் வரும் சின்னக் கொம்பு. ஆனால், தானி 8ல் வரும் சினக்கொம்போ, 3வது சாம்ராஜ்யமான கிரேக்கத்திலிருந்து பிரிந்த 4 ராஜ்யங்கள் ஒன்றிலிருந்து எழும்புவதாகும்.

3. இந்த இரண்டுமே மகா கொடூரமானவைகள் என்பதால், இரண்டும் ஒன்றல்ல. (Compare தானி.7:25 and 8:10-12).

4. இந்த இரண்டுமே அன்றாட பலியை நீக்குவதால் இரண்டும் ஒன்றல்ல. (Compare தானி.8:10-12 and 11:31,36).

இந்த தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று, பரிசுத்தவானாகிய ஒருவன், இன்னொருவனிடம் கேட்டபோது, அவன் தானியேலிடம், 2300 இராப்பகல் வரை செல்லும் வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்தகரிக்கப்படும் என்றான் (தானி.8:14). இன்னும் விளக்கத்தை காபிரியேல் தூதன் மூலம் தானியேலுக்கு விளக்கப்பட்டது (தானி.8:19-26). இந்த தரிசனம் முடிவுகாலத்திற்கு அடுத்தது என்றும், பிரிந்துபோன கிரேக்க நான்கு ராஜ்யத்திலிருந்து எழும்பப்போகும், மூர்க்கமுகமும்,

சூதான பேச்சுமுள்ள, சாமர்த்தியமான ஒரு ராஜாவின் செயல் என்றும் சொல்லப்பட்டது. இந்த தரிசன விளக்கத்தால் சோர்வடைந்த தானியேல். சில நாள் வியாதிப்பட்டிருந்தான். அந்த தரிசனத்தின் முழுமையும் புரியாமல் திகைத்துக் கொண்டிருந்தான். எப்படியோ இது கடைசி காலமாய், இஸ்ரேலருக்குள் நடந்திருக்கிறது. ஆமென்.

**2300 இராப்பகல் பற்றிய விளக்கம் (தானி.8:14).**

தானியேலுக்கு கொடுக்கப்பட்ட தீர்க்க தரிசனங்களெல்லாம், இஸ்ரேலருக்கும், எருசலேமுக்கும் சம்பந்தப்பட்டது தானேஒழிய, கிறிஸ்தவ சபைக்கோ, கிருபையின் காலத்திற்கோ ஒருவகையிலும் சம்பந்தப்பட்டது அல்ல என்று முந்தி அறிய வேண்டும் (சபையைப்பற்றிய இரகசியம் பவுல் மூலம்தான் வெளிப்பட்டது என்று தெரிந்து கொள்ளுங்கள் - பாகம் I "மூலம் அறியலாம். எபே.3:6) எனவே இங்கே சொல்லப்பட்ட பரிசுத்தஸ்தலம் எருசலேம் என்று அறியலாம். சிலர், இதை, பரலோக பரிசுத்தஸ்தலம் என்று தவறாய் விளக்கமளிக்கிறார்கள். இந்த பூலோக எருசலேம் எப்படிப்பட்டதான பாதகத்துக்கும், அலங்கோலத்துக்கும் உள்ளாகும் என்று தானி.8:10-12 சொல்கின்றது. இப்படிப்பட்ட துரோகச் செயல் எதுவரைக்கும் இருக்கும் என்பதற்கான பதில்தான் தானி.8:14. இந்த தேவதூஷனத்தைச் செய்பவன், அந்திகிறிஸ்து என்று கள்ள உபதேசகர்கள் கணித்து, அது 2300 நாள் அதாவது 2300 வருஷம் வரை நடக்கும் (1 நாள் = 1 வருஷமாம்) என்று வியாக்கியானம் செய்து, அது கி.பி. 1844ல் முடிந்துவிட்டது என்றும், அன்று முதல் இயேசு, பரலோகிலுள்ள பரிசுத்த ஸ்தலத்தை விட்டு, மகாபரிசுத்தஸ்தலம் போய்விட்டார் என்றும் பிரசங்கிக்கிறார்கள். இந்த 2300 வருஷ கணிப்பை, தானியேலுக்கு, 9ம் அதிகாரத்தில் வெளிப்படப்போகும் 70 வாரக் கணக்கின் ஆரம்ப வருஷமான கி.மு. 445 லிருந்து ஆரம்பிக்கிறார்கள். என்னே பேதமை! முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுகிறார்கள். இயேசு, பரலோகம் போன முதல் நூற்றாண்டிலேயே பிதாவாகிய தேவனின், மகாபரிசுத்தஸ்தலத்தில், அவரின் வலது பாரிசத்தில் இயேசு அமர்ந்து இருக்கிறார் என்று வேதம் சொல்வது பொய்யா? (எபி.8:1; 9:24; ரோ.8:3) ஸ்தேவான்கூட மரிக்கும் போது இதைக் காண்கிறானே! அவர்களின் மனக்கண்கள் திறக்கட்டும் (2 கொரி.4:4). எனவே தானி.8:14ல் உள்ள பரிசுத்தஸ்தலம் பரலோக பரிசுத்த ஸ்தலமல்ல என்றும், அது இஸ்ரேலரின் எருசலேம் ஆலயமென்றும் அறிகிறோம்.

**இன்னும் விளக்கம்:-** மேலே சொல்லப்பட்டது சத்தியமானது. எப்படியெனில், பிரிந்து போன 4 ராஜ்யங்களில் ஒன்றான சிரியாவிலிருந்து

வந்த அந்தியோகஸ் எபிபேன்ஸ்தான் இவன் என்று சரித்திரம் சொல்கின்றது. இவனது ஆட்சி கி.மு.171-164 வரையாகும். இவனது ஆட்சிக்குள்ளேதான் 2300 நாள் காரியம் நடந்தேறுகின்றது. இவன் செய்த அட்டகாசத்தில்தான் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட்டது இஸ்ரேலர்களால். அதுவும் கி.பி. 70ல் அழிந்தது!

**என்ன அட்டகாசம்?**

1. பயங்கரமான பாழக்குகிற அருவருப்பாயிருந்த ராஜா இவன்.
2. யூதர்களை வெகுவாய் துன்புறுத்தினவன்.
3. எருசலேம் ஆலயத்தை நாசமாக்கினவன்.
4. பன்றிக்குட்டிகளை பலியிட்டவன்.
5. சேனைகளால் ஆலயத்தை மிதிக்க வைத்தவன்.
6. தன்னை வானரியந்தம் உயர்த்தினவன்.

**சிந்தனைக்கு:-** இவன் வரப்போகும் அந்திகிறிஸ்து என்றால், அந்த அந்தி கிறிஸ்துவுக்குப் பின் எருசலேம் - பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படுமா? இல்லையே... 1000 வருட ஆட்சிதான் ஆரம்பமாகும். அப்போது இயேசுதானே, ஒரு புதிய ஆலயம் கட்டுவார். (எசே.40-48) அது புதுப்பிக்கப்படும் ஆலயமல்ல கி.பி. 70ல் அழிந்துபோன ஆலயத்தில் இஸ்ரேலர் இனி கட்டப்போகும் ஆலயத்திற்குக் கூட வெளி 10ல் தூக்குநூல் பிடிக்கப்பட்டாயிற்றே!

❖ ❖ ❖

## 9ம் அதிகாரம் (70 வார தீர்க்கதரிசனம்)

7ம் அதிகார தரிசனம், பாபிலோன் ராஜா பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்தாலும், 8ம் அதிகாரதரிசனம், 3ம் வருஷத்திலும் தானியேலுக்கு வெளிப்பட்டது. இந்த 3ம் வருஷமே மேதிய பெர்சிய கையில், பாபிலோன் ராஜ்யம் போய்விட்டது (தானி.5:30,31). அகாஸ்வேருவின் மகன் தரியுதான் முதல்ராஜா. அவனது முதல் வருட ஆட்சிக்காலத்தில்தான் 9ம் அதிகார தரிசனம் நடந்தது. 8ம் அதிகார தரிசனத்திற்கும், 9ம் அதிகார தரிசனத்திற்கும், இடைவெளி ஒருவருடம் இருப்பதால், 8ம் அதிகார 2300 இராப்பகல் தரிசன விளக்கமோ அல்லது தொடர்ச்சியோ இந்த 9ம் அதிகாரதரிசனம் என எண்ண வேண்டியதில்லை.

இந்த வருஷத்தில் தானியேல், எரே.25:11; 29:30 போன்ற வசனங்களைப் படித்து எருசலேமின் பாழ்க்கடிப்பு 70 வருஷம் செல்லுமென்று உள்ளதே, அது எப்போது முடியும் என்பதை தியானிக்கிறான். இரட்டுடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து உபவாசத்தோடு, தேவனிடம் ஜெபிக்கிறான். அதற்கு கொடுக்கப்பட்டதுதான் 70 வார தீர்க்கதரிசனம்.

இஸ்ரேலர் நாடு கடத்தப்பட்டு பாபிலோனில் அடிமையாக்கப்பட்டது, கி.மு 604லிலும், கி.மு 597லிலும், கி.மு. 586லிலும் மூன்று பிரிவாய் நடந்திருக்கிறது. எஸ்றா 11:3ன் படி யூதர்களுக்கு விடுதலை கி.மு. 535ல். ஆக, எரேமியா சொன்னபடியே இது 70வது வருடத்தில் நடந்தது (கி.மு. 604-கி.மு 535=70). இந்த விடுதலையாகும் வருஷத்தை அறியத்தான், உபவாசம்பண்ணி, ஆண்டவரிடம் நெருங்கி ஜெபித்தான்.

இந்த தானியேலின் ஜெபம், 1 ராஜா 8:33-36ன் சாலமோன் ஜெபத்தைப் போன்றது. ஜெபத்திலே

1. துதிக்கிறான் (adoration).
2. பாவ அறிக்கை செய்கிறான் (confession - தானி.9:5-15).
3. வேண்டுதல் செய்கிறான் (petition - தானி.9:16-19).

பொதுவாக ஜெபங்களெல்லாம், இப்படித்தான், confession, adoration, petition, thanks giving என்று இருக்க வேண்டும். இயேசு கற்பித்த ஜெபமும் இப்படித்தானே! (மத்.6) இந்த ஜெபம் அவனுக்காக அல்ல; இஸ்ரேலருக்கான, இஸ்ரேலர் விடுதலைக்கான ஜெபம் (தானி.9:18,19). தானியேல் ஜெபம் பண்ணத் தொடங்கும்போதே, அவனுக்கு, அறிவை உணர்த்தி, சொல்ல வேண்டிய கட்டளை, பரலோகில், தேவனால் வெளிப்பட்டது அல்லேலூயா. அதை தானி.8:16ல் கொண்டு வந்த அதே காபிரியேல் தூதன் கொண்டுவந்தான். இதுதான் 70 வாரம் சம்பந்தமான புதிய தரிசனம். இது இஸ்ரேல் ஜனத்தின் மேலும், பரிசுத்த நகரத்தின் மேலும் உள்ளது (தானி.9:24). இதிலுள்ள எந்த தீர்க்கதரிசன காரியங்களும் புதிய ஏற்பாட்டு சபைக்கு உட்பட்டது அல்ல.

அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி, பரிசுத்த நகரம் எடுப்பித்துக்கட்ட தானியேல் சிந்தித்தான். தேவனோ, அந்த விடுதலைக்கும் மேலே, அவர்களுக்கு இறுதிவரை சம்பவிப்பதை சொல்கிறார். பாபிலோனிய விடுதலை தான் ஏற்கெனவே எரேமியாமூலம் முடிவாக்கப்பட்டாயிற்றே! இப்போதோ, தானியேல் விரும்புகிறதற்கும் வேண்டிக் கொள்கிறதற்கும் மேலாக, எபே.3:20ன் படி சொல்லிக் கொடுக்க விழைகிறார்! அல்லேலூயா!

**தரிசன விளக்கம்:-**

70வாரம் என்பது, "Seventy shabua" என்று உள்ளது. Shabua என்றால், 7 வருஷம். திரும்பக் கட்ட உத்தரவு, பெர்சிய அர்தசஸ்டா ராஜாவால் கி.மு.445ல் வெளியானது முதல் ஆரம்பிக்கிறது. (நெகே. 2; தானி.9:25). இதிலிருந்து, 69 shabua வாரம் x 7 வருஷம் = 483 வருஷத்தில், இயேசுவாகிய மேசியா வருவார். இந்த 483 வருஷத்திற்குப் பின் மேசியா சங்கரிக்கப்படுவார். (445-483=கி.பி.38ல் . இது Lunar system. தற்கால solar systemபடி பார்த்தால், இன்னும் 4,5 வருடங்கள் குறையும்). மேசியா சங்கரிக்கப்படுவது தமக்காக அல்ல; இஸ்ரேலருக்காகவே! (தானி.9:26). அதன்பின், தானியேல் காலத்தில் சீர்படுத்தப் போகிற எருசலேம் தேவாலயம் - ஏரோது ராஜாவால் புதுப்பித்துக் கட்டப்பட்ட தேவாலயம், கி.பி. 70ல் அழிக்கப்படும் (தானி.9:26). இந்த தீர்க்கதரிசன விளக்கத்தில், இரண்டு புரபுக்கள் வருகிறார்கள். ஒன்று பிரபுவாகிய மேசியா (தானி.9:25); இன்னொன்று வரப்போகிற பிரபு (தானி.9:26). இவன்தான் அந்திகிறிஸ்து இவனது ஜனங்கள்தான் - ரோமப் பேரரசு தான் எருசலேமை அழிப்பார்கள் என்றால், வரப் போகிறவனும் அவர்களிலிருந்துதானே வருவான்! அதனால்தான் Revivel Rome kingdom என்று தானி. 9:27ல் கடைசி ஒருவாரம் - ஒரு shabua - பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அந்திகிறிஸ்து செய்யும் காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. 70 வாரக்கணக்கை, ஒரே தொடர்ச்சியாய் கணக்கிட்டால், அது கி.பி.45ல் முடிகிறது. இந்த கி.பி.45க்குள் தானி.9:24ல் சொல்லப்பட்டவை எல்லாம் முடிந்தனவா? இல்லையே...! எப்படி?

1. மீறுதலை - அவபக்தியை, யாக்கோபை விட்டு அகற்றுவது இன்றுகூட முடியவில்லையே see ரோ.11:26,27).
2. பாவங்களைத் தொலைக்கிறது, இஸ்ரேலின் பாவத்தை seal பண்ணுவது, அதாவது, அதற்குக் காரணமான சாத்தானை கட்டிப்போடுவது இன்னும் நடக்கவில்லை (see வெளி.20:1-3).
3. மேசியாவை உதறித்தள்ளி விட்ட இஸ்ரேலின் அக்கிரமம் இன்னும் நிவர்த்திபண்ணப் படவில்லையே! (see சக.13:1).
4. இஸ்ரேலின் நித்திய நீதி இன்னும் நிறைவேறவில்லையே! (see ஆபகூக். 2:14).
5. இஸ்ரேலின் தரிசனமும், தீர்க்கதரிசனமும் தேவையில்லாத நிலை வருவது, அவர்கள் தேசமாய், தேவனோடு இணைந்தால்தானே! இன்னும் அவர்கள் இணையவில்லையே!

6. "Most Holy place" - எருசலேம் ஆலயம் அபிஷேகம் பண்ணப்படுதல் இன்னும் நடக்கவில்லையே! கி.பி.70ல் அழிக்கப்பட்டது இன்னும் கட்டப்படவில்லையே! (லேவி.8:10; எசே 41; எரே3:16; சக.6:12,13).

இவைகளெல்லாம் எப்போது நடக்கும்? இவைகளும், எருசலேம் அழிக்கப்படுவதும், கி.மு.445 முதல் தொடர்ச்சியாய் 70 வாரம் (அதாவது 490 வருஷம்) என்று வைத்தாலும், கி.பி.45க்குள் நடக்கவில்லையே! அப்படியானால், கடைசி ஒருவாரம் அதாவது 7வருஷங்கள், வரப்போகிற பிரபுவாகிய (தானி.9:26) அந்திகிறிஸ்துவின் கடைசி நாட்களோடு இவைகள் இணைந்தவை என்று அறியலாமல்லவா!

தீர்க்கதரிசன நிகழ்ச்சிகள் மற்றும் காலங்கள் எல்லாம் தொடர்ச்சியாய் வருவதில்லை என்பதை முந்தி அறியவேண்டும். Prophecies are all not continuous in all cases. see ஏசா.61:1-3 & லூக்.4:18-20; 1:31-33. எனவே 69வது வாரத்திற்கு பின்வரும் 70வது வார/ சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, உருவாகும் அந்திகிறிஸ்துவின் காலமாகும். இப்படி உண்மையை சிந்தித்தால், இது கத்தோலிக்கரால் கொண்டு வரப்பட்ட "Gap Theory" என்று சிலர் கூறுகிறார்கள். (69+1=70). அப்படியானால், ஏசா.61:1-3லும், லூக்.1:31-33லும், முதல் வருகையும், இரண்டாம் வருகைபற்றியும் சொல்லியிருப்பதிலே, Gap இருக்கிறதே, அங்கும் Gap theory ஐ தேவன் அங்கீகரித்திருக்கிறாரா? சிந்தியுங்கள். திரித்துவம் என்ற கொள்கையும் கத்தோலிக்கரிடமிருந்து வந்தது என்று கூடச் சொல்லும் கூட்டத்தாரும் உண்டு. யார் எந்த தியரி கொண்டு வந்தாலும், அது சரி என்றால், ஏற்று கொள்வது தவறில்லையே! இப்படித்தான் எது எப்படியோ, இவைகள் நடக்கப்போவது, 70வது வாரம் என்று எடுக்காமல், அந்திகிறிஸ்துவின் 7 வருஷகாலம் என்று வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாமே!

அந்த 7 வருஷம், இஸ்ரேலரோடு அந்திகிறிஸ்து உடன்படிக்கை பண்ணுவான் (தானி.9:27). கடைசி $3^1/^2$ வருஷத்தில், பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணுவான். இதுதான் 2 தெச.2:4ல் சொல்லப்பட்டதாகும். இந்தக் காலகட்டத்தில்தான், இஸ்ரேலருக்கான மகா உபத்திரவ காலமாகும் (எரே.30:7), அப்போதுதான், மேசியாவைப் பற்றிய விசுவாசம் அவர்களுக்கு வந்து, மனமாற்றம் வரும். 1,44,000 பேர், மீதமான இஸ்ரேலர் மற்றும் இயேசுவோடு நாம் ஒலிவமலையில்

இறங்கும்போது, இரட்சிக்கப்படும் இஸ்ரேலர் எனப் பெருகுவார்கள். ஆமென்! அல்லேலூயா! (ரோ.11:25-27; வெளி.12:17; 7:3,4; 1:7; 12:10).

தானி. 9:27ல், அவர் என்று தமிழில் போட்டிருப்பதால், அது அந்திகிறிஸ்துவை குறிக்கவில்லை; இயேசுவைத்தான் குறிக்கிறது என்று 7ம்நாள் சபையார் போன்றோர் சொல்கின்றனர். அப்படியானால், இயேசு ஒருவாரமாகவா இஸ்ரேலரோடு உடன்படிக்கை பண்ணினார்? அவர் வியாழன் இராவில் உடன்படிக்கை பண்ணினார் (மத்.2628); அதை வெள்ளி மாலை 3 மணிக்கு தன் இரத்தம் சிந்தி மரணத்தால் உறுதிப்படுத்தினார் (see எரே.31: ; எபி.8:10). அதற்குப்பின் 3 1/2 வருஷம் இஸ்ரேலரோடு அவர் பூமியில் இல்லையே! 40ம் நாளே பரலோகம் போய்விட்டாரே! அப்படியானால் 3 1/2 வருடம் உடன்படிக்கையை உறுதிப்படுத்துவது அந்திகிறிஸ்துதானே! மேலும், பலியையும் காணிக்கையையும் மேசியாவிற்கு நிழலாக, இஸ்லேருக்கு போதித்து வழி நடத்திய நம் தேவனே, அதை அழிப்பாரா? அவைகளை ஒழிப்பவன், மேசியாவிற்கு விரோதியான பாழக்குகிற அருவருப்பாகிய (மத்.24:15) அந்திகிறிஸ்துதானே! தானி.7:25ஐ செய்பவன் இவன்தானே! மட்டுமல்ல... தானி.9:27ல் அவன் என்று ஏன் இல்லை? இது கேள்வி. KJV ஆங்கிலத்தில் He என்று capital letterல் போடாமல், he என்று small letterல் போட்டதால், அவன் என்றுதானே பொருள். தமிழில் மொழி பெயர்த்தவர்களின் பிழைதான் அது. எப்படி, he என்றாலே, அவர் என்றும் சொல்லலாம்; அவன் என்றும் சொல்லலாம். இதுதான் ஆங்கில முறை. மட்டுமல்ல... ஏசா.22:22ல் அவன் என்று மேசியாவுக்கு தவறுதலாய் மொழிபெயர்க்கப்படவில்லையா? (see வெளி.3:7). சிந்தியுங்கள்.

இதை வாசிக்கும் தேவ ஜனமே! 70ம் வாரம் அல்லது கடைசி ஒருவாரம் காலகட்டத்தில்தான், தானி.9:24, 27 போன்ற வசனங்கள் இஸ்ரேலருக்குள் நிறைவேறும். இந்த ஒருவாரத்தில் (7 வருஷம்) நாம் இல்லாதபடிக்கு, இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட ஆயத்தமாவோம்!

❖ ❖ ❖

# 10 ம் அதிகாரம் (vision of wars)

தானி.10,11,12 அதிகாரங்கள் ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவை. நிறைய ஆவிக்குரிய சபைகளிலே

1) தானி. 1 முதல் 7ம் அதிகாரம் வரை சொல்லிக் கொடுத்துவிட்டு, 9ம் அதிகாரத்திலுள்ள 70 வார தீர்க்கதரிசனத்தை விளக்கிவிட்டு, அத்தோடு தானியேல் புத்தக விளக்கத்தை நிறுத்தி விடுவார்கள்.

2. 8ம் அதிகாரம் அதிகாரம் வரை விளக்கப்பட்டு, 9ம் அதிகார 70 வார தீர்க்கதரிசன விளக்கத்தோடு நிறுத்திவிடுவார்கள.

3. பெரும்பாலான சபைகளில் தானி.10,11,12 விளக்கப்படுவதே இல்லை.

இதனால், விசுவாசிகளை தன்வயப்படுத்த முனையும் கள்ள உபதேசகாரர்களுக்கு இந்த அதிகாரங்கள் மூலமாய், பாதைகள் திறந்துவிடப்படுகின்றது. இந்த கள்ள உபதேசப் பாதையை அடைக்கவே தேவன் நமக்கு விளக்கம் தருகிறார் அல்லேலூயா!

தானியேல் 9ம் அதிகார தரிசனம் வந்தபோது, பாபிலோனில், மேதிய தரியு ராஜாவின் முதலாண்டு ஆட்சி. அவனது இரண்டாண்டு ஆட்சிக்குப் பிறகு கோரேஸ் என்ற பெர்சிய ராஜாவின் ஆட்சி வந்தது. இந்த கோரேஸ், எஸ்தருக்கும், அஸ்டியாஜஸ்ஸுக்கும் (அகாஸ்வேரு) பிறந்தான். இவனுக்குள் எஸ்தரின் ஆவி இருந்ததால், இஸ்ரேலரின் ஆலயம் கட்டவும், இஸ்ரேலரின் விடுதலைக்கும் உதவினான். இந்த கோரேஸ்தான், தேவசித்தத்தை நிறைவேற்ற தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் என்று, இவன் பிறப்பதற்கு 175 வருஷத்துககு முன்பே இவனைப்பற்றி வேதம் சொல்லியிருக்கின்றது (ஏசா.44:28). இவனின் 3 வருட ஆட்சிக் காலத்தில்தான் இந்த 10ம் அதிகார தரிசனத்தை தானியேல் கண்டான். ஆக, 9ம் அதிகார தரிசனத்திற்குப் பிறகு 5 வருடம் கழித்து தானியேல் கண்ட இந்த பிரதானமான தரிசனத்தை, vision of wars - யுத்தங்களின் தரிசனம் என்று சொல்லலாம்.

இந்த தரிசனம் நீடித்த யுத்தத்திற்கு அடுத்ததாய் இருந்ததால், மூன்று வாரம் தானியேல், எந்த ஒரு ருசிகரமான அப்பம், இறைச்சி, திராட்சை ரசம் போன்றவை புசிக்காமல் பரிமளத்தையும் பூசிக்கொள்ளாமலும், அந்த தரிசனத்தினாலே துக்கித்துக் கொண்டிருந்தால் இந்த தரிசனம் இன்று வரைக்கும் முடிவடையவில்லை (தானி.11:35; 12:13), தானி. 1ம்

அதிகாரத்தில், ராஜாவின் அசைவ இறைச்சிப்போஜனம் சாப்பிடாதிருந்ததால், தானியேல் அசைவம் சாப்பிடாமல் இருந்ததுபோல், நாமும் சாப்பிடாதிருக்கலாம் என்று போதிக்கும் சபைகளும் உண்டு. அவைகள் இந்த தானி.10:3 ஐ வாசித்தால், அந்த ஆரம்ப பயிற்சி காலத்தில்தான் ராஜாவின் அசைவ இறைச்சி சாப்பிடவில்லை என்றும், அதன்பின் அரசாங்கப் பதவியில் இருக்கும் போது, தங்கள் இஷ்டப்படி இறைச்சி சாப்பிட்டான் என்றும் அறிகிறோம். அப்போது இறைச்சி சாப்பிடுவது பாவமல்ல (ரோ.14:21); அது தேவனின் விட்டுச் கொடுக்கிற சித்தமாகும் (permissive will). ஆனால், அவரது பரிபூரண சித்தம் நோக்கி (perfect will) பயணம் செய்வதே நம் வாஞ்சையாயிருக்கட்டும். (ஆதி.1:29,30).

**தரிசனம்:-** பெர்சிய கோரேஸ் ஆட்சியின் மூன்றாம் வருஷம் முதலாம் மாதம் 2:4ம்தேதி பாபிலோனிலுள்ள இதெக்கேல் என்னும் ஆற்றங்கரையிலிருந்து, மேசியாவைப் பார்க்கிறார் தானியேல் (தானி.10:5 with வெளி.1:13-15). இந்த ஆறு ஏதேனில் இருந்த மூன்றாவது கிளை ஆறு (ஆதி.2:14). (பாபிலோனிய கள்ள உபதேச ஆரம்பம் ஏதேனிலிருந்து என்பதற்காக ஆதார விளக்கங்களை இவைகளாலும் அறியலாம்). தானியேல் மட்டும் மேசியாவைப் பார்க்கிறான். அவனோடிருந்தவர்கள் யாரும் காணவில்லை. அவர்களெல்லாம் பயந்து ஓடி விட்டனர். இதைப் பார்க்கும் போது, தமஸ்குவுக்குப் போகும் சவுலை தேவன் சந்தித்தபோது, அங்கிருந்தவர்கள் யாரும் பார்க்கவில்லையென்றும், சத்தம் ஏதும் கேட்கவில்லை என்றும், அப்படியே கேட்டாலும் அவர்களுக்கு புரியவில்லை என்றும் அப்.9:7; 22:9 போன்ற வசனங்களில் சொல்லப்படுகிறது உறுதியாகிறது. மேசியாவைக் கண்ட உடனே தானியேல் உருவம்மாறி, வாடிப்போய், திடனற்றுப் போனான். மேசியாவின் சத்தம் கேட்டு, தரையிலே முகங்குப்புற விழுந்தான். தேவனால் அனுப்பப்பட்ட ஒருதூதன், அவனைத்தொட்டு தூக்கி நிறுத்தினான்.

(இதுவல்ல தானியேல் கண்ட யுத்தங்களின் தரிசனம் - vision of wars. தானி.10:1ன் படி ஏற்கெனவே அது வெளியாக்கப்பட்டது. அதன் அர்த்தங்களை அறிந்து கொள்ள தானியேல் முயற்சிக்கும் கால கட்டம்தான் இது.).

தானியேல் கண்ட தரிசனத்தின் பொருளை தெரிவிக்க, தேவனிடம் மன்றாடிய நாள் முதலே தேவன் பதிலளித்து விட்டாராம். அந்த பதிலை இந்த தேவதூதன் கொண்டு வருவதற்கு, 21 நாட்கள் ஆகியிருக்கின்றன.

இந்த இடைப்பட்ட காலத்தில், தானியேலை திடப்படுத்தவே மேசியா காட்சி கொடுத்திருக்கிறார் என்னே தேவ அன்பு! அல்லேலூயா!

கேளுங்கள் கொடுக்கப்படும்; என் நாமத்திலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதைப் பெற்றுக் கொள்வீர்கள் என்ற வார்த்தைகளெல்லாம் பொய்யல்ல. நாம் மன்றாடிய அன்றே பதிலளிக்கப்படுகிறது. ஒரு சிலர், பதிலைப் பெறாத நிலையில், தேவன் பதிலளிக்கவில்லை; இது தேவசித்தமில்லை என்றெல்லாம் தவறான அறிக்கை செய்து (Negative confession), அதன்படியே அவர்கள் பெறாமலே போய்விடுகின்றனர். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நம் தேவன் சொல்லுகிறதைச் செய்கிற தேவன்; செய்கிறதை மாத்திரமே சொல்லுகிற தேவன். தானியேலுக்கு பதில் வந்து சேர 21 நாட்கள் ஆயின. ஆனால் தானியேல் நம்பிக்கையோடு இருந்தான்.

**21 நாள் காலதாமதம் ஏன்?**

பூமியிலே பொல்லாத ஆட்சிகள் - ராஜ்யங்கள் - இருக்கிறது அல்லவா! இவைகளை ஆட்டிப் படைக்கிற பொல்லாத சேனைகள் வானமண்டலத்தில் இருக்கின்றன (எபே.6:12), பெர்சியா என்ற இரண்டாம் தர பொல்லாத ராஜ்யத்துக்கு மூலவனான பிசாசின் ஆவி, வானமண்டலத்தில் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு பொல்லாத ராஜ்யத்துக்கும், சமுதாயத்துக்கும், அமைப்புக்கும், ஏன் ஒவ்வாரு மனிதனுக்கும்கூட பிசாசின் ஆவிகள் வானிலே உள்ளன. பெர்சிய சாம்ராஜ்யத்திலுள்ள தானியேலுக்கு, தேவனின் பதிலை ஒரு தேவதூதன் கொண்டுவரும்போது, வானமண்டலத்திலுள்ள பெர்சியா தேசத்துக்கான பிசாசின் ஆவி, அவனோடு 21 நாட்கள் எதிர்த்து நின்றிருக்கிறான். அவனிடமிருந்து விடுதலை பெற்றுவர, பிரதான அதிபதிகளில் ஒருவனான மிகாவேல் உதவி செய்தான்.

தானியேலுக்கு கொடுக்கப்பட்ட தரிசனம், இஸ்ரேல் மக்களுக்கு சம்பவிப்பது என்றும், அதற்கு இன்னும் கூட நாட்கள் செல்லுமென்றும், வந்த அந்த தேவதூதன் தானியேலிடம் சொல்கின்றான். இப்படி அவன் சொன்ன உடனே தானியேல் பேச்சற்றுப் போனான். தேவ ஜனமே! அந்த தரிசனம் எவ்வளவு மகா கொடூரமாயிருக்கும் என்று உன் ஆவியில் உணர்கிறாயா?

அப்போது, மனுபுத்திரரின் சாயலான ஒருவன், தானியேலின் உதடுகளைத் தொட்டான். (இந்த ஆள், வார்த்தையாகிய தேவன் எனப் பலர் கணிக்கின்றனர்). **அப்போது தானியேல் வாய் திறந்து பேசியதைப்**

**பாடுங்கள்:-** தரிசனத்தினால் என் மூட்டுகள் புரண்டன; பெலனற்றுப் போனேன்; ஆகையால் என் ஆண்டவனுடைய அடியேன் என் ஆண்டவனோடே பேசக்கூடுவதெப்படி? (தானி.10:16,17). திரும்பவும் மனுஷரூபமான ஒருவன் தானியேலைத் தொட்டு, திடப்படுத்தினான். (இது மூன்றாம் முறை). “பயப்படாதே! திடம்கொள்! உனக்குச் சமாதானம் உண்டாவதாக” என்ற தேவ வார்த்தையை அவன் சொன்ன உடனே (தானி.1019), தானியேல் திடமானான். தேவ வார்த்தையே நம்மை எப்போதும் திடப்படுத்தும். ஆமென்.

**அந்த தேவதூதன் சொன்னான்:-** திரும்பவும் வானமண்டல பெர்சிய அதிபதியோடு யுத்தம் பண்ணப்போகிறேன்; நான் போனபின் கிரேக்க தேசஅதிபதி வருவான்; சத்திய எழுத்திலே உள்ளதைச் சொல்கிறேன் என்றான் (தானி.10:20,21). இப்படியாய், சரித்திரச் சம்பவங்களை முன்கூட்டியே பெயர் போட்டுச் சொல்லும்படியான நம்தேவனின் தரிசனம் மகா மேன்மையானது. அதனாலேயே இந்த வேதத்தை விசுவாசிக்கிறோம். ஆமென்.

9ம் அதிகாரத்திலும் தானியேலை தூதன் பலப்படுத்தி, 70வார தரிசன விளக்கம் சொன்னான். 10ம் அதிகாரத்திலும் பலப்படுத்தி 11,12 அதிகாரங்களில், கடைசி நாட்களில் நடக்கும் சம்பவங்களை விளக்குகிறான்.

❖ ❖ ❖

# 11ம் அதிகாரம் (vision of wars - தொடர்ச்சி)

தானி 10ம் அதிகாரத்தில், கண்ட தரிசனத்தில் துக்கித்துக் கொண்டிருந்த தானியேலுக்கு, தேவதூதன் அளிக்கிற விளக்கம், 11 மற்றும் 12ம் அதிகாரங்களில் உள்ளது. இந்த விளக்கங்களெல்லாம் சரித்திர ரீதியாக பல நடந்து முடிந்தன; இனி நடக்க வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதுதான் அந்திகிறிஸ்துவின் ஆட்சி. **இதையெல்லாம் பார்க்கும் போது, நம் வேதம் சரித்திர ரீதியாகவும் குறைவில்லாதிருப்பதால், இந்த வேதவார்த்தைகளை இறை வேதம் என்று நம்புகிறோம். ஆமென்.**

**பொதுவான தரிசன சரித்திர நிகழ்வுகள்**

1. தானியேல் தற்போது அங்கம் வகிக்கும் மேதிய - பெர்சிய சாம்ராஜ்யத்தில் இன்னும் 4 ராஜாக்கள் எழும்புவார்கள்.

2. அதற்குப் பின்பு, பராக்கிரமமுள்ள கிரேக்க ராஜாவான அலெக்சாண்டர் வருவான் (தானி.11:3).

3. இவனுக்குப்பின், இவனின் ஆதிக்கம் தானி.8:22ன் படி நான்காய்ப் பிரியும்.

4. இந்த நான்கில் உள்ள சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையே யுத்தங்கள் (தானி.11:5-19).

5. தானி. 8:9ல் சொல்லப்பட்ட சின்ன கொம்பான சீரிய தேசராஜா, அந்தியோகஸ் எபிபேன்ஸின் அட்டகாசம் (தானி.11:20-35).

6. அதன்பின் அந்தி கிறிஸ்துவின் கொடூரங்கள் (தானி.11:36 முதல் 12:13 வரை).

இவைகளில் தானி.11:35வரை எல்லாமே சரித்திரப் பூர்வமாய் முடிந்து விட்டன. இனி நடக்க வேண்டியது அந்தி கிறிஸ்துவின் ஆட்சிதான். இந்த தரிசனமெல்லாம் முழுக்க முழுக்க இஸ்ரேலரைக் குறித்ததே என்று முன் பகுதியில் எழுதியிருக்கிறேன். இந்த 11ம் அதிகார தரிசன விளக்கத்தை, ஆவியானவரின் ஒத்தாசையோடு ஒன்றன்பின் ஒன்றாய் அறிந்து கொள்வோம்.

**தரிசன, ஆழமான சரித்திர விளக்கம்:-**

1. பெர்சிய தேச 4 ராஜாக்கள்

   (a) 2ம் கோரேஸ் (கி.மு.550-530) - see எஸ்றா 1:1; 2 நாளா 36:22,23.

   (b) கேம்பிசெஸ் (கி.மு.529-522).

   (c) 1ம் தரியு இஸ்டாஸ்பெஸ் (கி.மு.521-486) - see எஸ்றா 5:6.

   (d) Artra Xerxes (அர்தசஷ்டா) - கி.மு. 486-465. see எஸ்றா 4,7; 7:11-26. இவன் ஐஸ்வரியத்தில் பலமுள்ளவன். கிரேக்க ராஜ்யத்துக்கு விரோதமாய் எழும்பினான்.

2. இதற்குப்பின் மேதிய - பெர்சிய ராஜ்யத்தை, கிரேக்க அலெக்சாண்டர் பிடித்து, மூன்றாம் உலக மகா சக்கரவர்த்தி யானான். இவன் கி.மு.323ல் மரித்தான் (see தானி.7:6; 8:5-8; 21,22)

3. அதற்குப்பின் அந்த ராஜ்யம், அவனது தளபதிகளால் நான்காய் பிரிக்கப்பட்டன.

(a) தளபதி ஹேசன்டர் - மெஸிடோனியா பகுதி.

(b) தளபதி லிசிமாகஸ் - தீரேஸ் மற்றும் ஆசியர் மைனர் பகுதி.

(c) தளபதி 1ம் படோலெமி சோடேர் - எகிப்து பகுதி.

(d) தளபதி செலூகஸ் முதலாம் நிகேடர் - சிரியா மற்றும் மீதியான வடகிழக்குப் பகுதி.

3. எகிப்து பகுதி ராஜாக்களை, தென்திசை ராஜா என்றும், சிரியா பகுதி ராஜாக்களை, வடதிசைராஜா என்றும் வேதம் சொல்கின்றது. இந்த இருவருக்குமிடையில்தான் அடிக்கடி யுத்தங்கள் வரும்.

4. எருசலேம், ஆதியில் தென்திசை ராஜாவான, எகிப்தின் கீழ்தான் இருந்தது.

5. எகிப்திய முதலாம் படோலெமி சோடருக்குப்பின் (கி.மு.323-285), 2ம் படோலெமி வந்து கி.மு. 285 - 246 வரை ஆண்டான். இவன் முதலாம் படோலெமியைவிட பலவான்.

6. சிரிய செலூகஸ் முதலாம் நிகேடருக்குப் பின் (கி.மு.312-281), அந்தியோகஸ் 1ம் சேடர் ஆண்டார் (கி.மு.281-261).

7. யுத்தக்காரர்களாய் இருந்த, இந்த இரு தென்திசை - வடதிசை ராஜாக்களும், தென் திசை ராஜாவான 2ம் படோலெமியின் மகளின் திருமணத்தில் சம்பந்தியாய் ஒன்று சேர்ந்தனர் (தானி.11:6) (திருமண சரித்திரம் கூட, தரிசனத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பாருங்கள்).

8. அதன்பின் தென் திசை ராஜாவுக்கு (எகிப்து) புயபலம் இல்லாமல் போனது. எனவே வடதிசை ராஜாவுக்கு (சிரியா) எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தான்.

9. ஆனாலும் ஒரு ராஜா தென்திசையிலிருந்து எழும்பினான். அவன், சிரியாவிலிருந்த வெள்ளியும் பொன்னும், அவர்கள் தெய்வங்கள் எல்லாவற்றையும் கொள்ளையிட்டுப்போனான்.

10. இப்படியாய் இருராஜ்யம் போரிட்டுக் கொண்டிருந்தன.

11. ஒரு கட்டத்தில் எகிப்தின் வசமிருந்த எருசலேம், சிரியா வசம் போய்விட்டது.

12. வடதிசை ராஜாவுக்கு பெலனில்லாமல் போன காலக்கட்டத்தில், அவன் தென் திசை ராஜாவோடு ஒப்பந்தம் பண்ணி தன் மகள்

**கிளியோபட்றாவை** கொடுத்தான். அவள் மூலமாய் தமக்கு சாதகங்கள் வருமென்று எண்ணினான். அவளோ தன் அப்பாவுக்கு சாதகமாக இல்லை (தானி.11:17).

இப்படிப்பட்ட கால கட்டத்தில்தான் (கி.மு.175-164) அந்தி கிறிஸ்து போல மூர்க்கநெறி உள்ள அந்தியோகஸ் 4ம் எபிபேன்ஸ் என்பவன் சிரியாவிலிருந்து எழும்பி, யூதர்களை மிகவும் உபத்திரவப்படுத்தினான் (தானி.11:21-35). தானி.11:25-28 வரை அவனது எருசலேமின் முதலாம் முற்றுகையை விவரிக்கிறது. தானி.11:31-35 வரை, அவன் எருசலேம் ஆலயத்தைப் பாழ்படுத்துவது போடப்பட்டுள்ளது. இந்த ராஜாதான் தேவாலய பலிபீடத்தில், பன்றியைப் பலியிட்டு தீட்டுப்படுத்தினான் என்று சரித்திரம் சொல்கின்றது. இது தள்ளுபடி ஆகமம், 1 மெக்காபே 1:44-50ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த அந்தியோகஸ் ராஜாவோடு யுத்தம் - உபத்திரவம் - கிட்டத்தட்ட 4 வருடங்கள் நடந்தன. இதைத்தான் தானி.8:14ல் சொல்லப்பட்டுள்ளது. அதன் பின், பெர்சியாவில் இவன் மரித்துப்போனான். இவனுக்குப் பின்னும் சிரியாவிலும், எகிப்திலும் வந்த ராஜாக்கள் கி.மு.30ல் ரோமப் பேரரசால் பிடிபடும்வரை தொடர்ந்து ஆட்சியிலிருந்தார்கள். (ரோமப் பேரரசு கி.மு.63லேயே எருசலேமைப் பிடித்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது). யூதர்களின் உபத்திரவம்பற்றி தள்ளுபடி ஆகமம், மெக்கபே 1, 2 புத்தகங்களில் விளக்கங்கள் உள்ளன. தானி.7ல் வரும் சின்னக் கொம்பு இவனில்லை என்றும், தானி. 8ல் வரும் சின்னகொம்புதான் இவன் என்றும் ஏற்கெனவே நாம் பார்த்தோம். இந்த இரு கொம்புகளுமே யூதர்களை உபத்திரவப்படுத்துவதில், பாழக்குகிற அருவருப்பாய் செயல்பட்டு, பரிசுத்த ஸ்தலத்தைப் பாழாக்குவதில் சமமானவர்களே!

இவனுக்குப் பிறகு தன்னிஷ்டப்படி செயல்படும் ராஜா ஒன்று எழும்பப் போவதாக தானி.11:36 லிருந்து சொல்லப்பட்டுள்ளது. தேவ கோபம் தீருமட்டும் அவன் ஆட்சி கைக்கூடும் என்பதால், இவன்தான், சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு வரப்போகும் உலகின் கடைசி ராஜாவான அந்தி கிறிஸ்து என்று உணரலாம் (see தானி.9:26; ஏசா.10:23, 25).

**இந்த அந்திகிறிஸ்து பற்றிதரிசன விளக்கம்:-**

1. இவன் தேவாதி தேவனுக்கு விரோதமானவன் (தானி.11:36).
2. தன் பிதாக்களின் தேவர்களை (god of his fathers) மதிக்கமாட்டான். (தானி.11:37)

3. பிதாக்கள் மற்றும் ஸ்திரிகளின் சிநேகம் உள்ள மற்ற எந்த தேவர்களையும் மதிக்காதவன் (தானி.1:37ன் மூலபாஷை).

4. god of foot trusses - Roman Beast ஐ Honour பண்ணுவான் (See வெளி.13:11-18).

5. தானி.11:40-43ன் படி. இவன் வடதிசை சிரியாவிலிருந்து எழும்புவான். எனவே இவன் இஸ்ரேலிருந்து எழும்புகிறவனல்ல (See வெளி.13:1,2; 17:12-17).

6. இஸ்ரேலர் கட்டப்போகும் பரிசுத்த எருசலேம் ஆலயத்தில் சிங்காசனம் போடுவான் (தானி.11:45; 2 தெச.2:4).

7. இவனுக்கு இயேசுவின் 2ம் வருகையில் முடிவு உண்டு (தானி.7:11, 26,27; 9:27; 2 தெச.2:8; வெளி.19-21).

❖ ❖ ❖

## 12ம் அதிகாரம் (Vision of wars - தொடர்ச்சி)

தானி.10ம் அதிகாரத்தில் கண்ட தரிசனத்தின் விளக்கம் 11ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சிதான் 12ம் அதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ளது. தானி.7:25; 9:27; 12:7 வெளி.13:5ல் வரும் 7 வருட அந்திகிறிஸ்துவின் ஆட்சியின் மகா உபத்திரவகால நிகழ்வுகளோடு, இஸ்ரேல் மக்களுக்கு தொடர்ந்து சம்பவிப்பது. இங்கே சொல்லப்பட்டுள்ளது.

தானி.12:1ல், "அக்காலம்" - "At that time" என்று மூன்றுமுறை வருகிறது. அக்காலத்தில் நடப்பது என்ன?

1. தானி.11:45; 2 தெச.2:4ன் காரியம் நடக்கும் காலம். அதாவது, அந்திகிறிஸ்து தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் அமருவான்.

2. இஸ்ரேலருக்கென்று நிறுத்தப்பட்டிருக்கும் பிரதான தூதனாகிய மிகாவேல் எழும்பி, (தானி.10:21; வெளி.12:7-12) 2ம் வானத்தில் வாசமாயிருக்கும் சாத்தானோடு யுத்தம் செய்து, சாத்தானையும் அவன் தூதர்களையும் பூமிக்குத் தள்ளுவான் (வெளி.12:7-12).

3. இஸ்ரேலரின் மகா உபத்திரவ காலம் ஆரம்பமாகும் (எரே.30:6; தானி.9:27; மத்.24:15-22; வெளி.10:1; 19:21).

4. ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்ட அனைத்து இஸ்ரேலர்களும் 1,44,000 போன்றவர்களும், இரண்டு சாட்சிகளும் மறுரூபமாகி பரலோகம் எடுத்துக் கொள்ளப்படுவர் (ஏசா.66:7,8; வெளி.7:18; 14:1-5;11:) இந்த காரியங்கள் அனைத்தும் தானி.12:1ல் உள்ள "அக்காலத்தில்" நடைபெறுவதாகும்.

தானி.12:2ல், இஸ்ரேலர்களின் உயிர்த்தெழுதல்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் முழுவதும் இஸ்ரேலருக்குரியதென்றும், அதில் ஒன்றுகூட கிறிஸ்தவ சபைக்கு அல்ல என்றும் முதலில் அறிக. நித்திய ஜீவனுக்கென்று உயிர்த்தெழுதல் பற்றி தானி.12:1லேயே சொல்லப்பட்டதுதான். நித்திய சிந்தைக்கென்று உயிர்த்தெழுதல் என்பது வெள்ளை சிங்காசன - இறுதி நியாயத்தீர்ப்பில் நடப்பதாகும். இது உலகத்தார் அனைவருக்கும் பொதுவானதாகும். நித்திய ஜீவனுக்கும், நித்திய சிந்தைக்கும் நடக்கும் உயிர்த்தெழுதல்பற்றி சற்று பார்ப்போம்:-

மனித சரீரம் பூமியின் தூளினால் உருவாக்கப்பட்டதால், மரித்து அனைவரின் சரீரமும் பூமியிலே நித்திரை பண்ணுகிறது (பிர.3:19,20). ஆனால் மனிதனின் ஆவியும் ஆத்மாவுமோ, பரதீசிலோ, பாதாளத்திலோ இருக்கும் (லாசரு - ஐஸ்வரியவான் சரிதையைப் பாருங்கள்). யோ.5:28, 29ல் சொல்லப்பட்டபடியே, இங்கே சொல்லப்பட்ட இரண்டு பிரிவினரின் உயிர்த்தெழுதலும் ஒரே சமயத்தில் நடப்பதில்லை. நித்திய ஜீவனுக்கென்று உயிர்த்தெழுவோர் இரகசிய வருகையிலும், அந்திகிறிஸ்துவின் கடைசி 3 $\frac{1}{2}$ ஆண்டுகளிலும் இஸ்ரேலருக்கு நடக்கும். அதுதான் "அக்காலம்". இவர்கள் உயிர்த்து கிறிஸ்துவோடு, 1000 வருடம் அரசாளுவார்கள். (வெளி.20:4-6). நித்திய நிந்தைக்கென்று எழும்புவோர், நரகத்திற்குப் போகிறவர்கள் (வெளி.20:11,12).

தானி.12:3ன் படி "நீதிமான்களாகிய இஸ்ரேலர்கள் பிரகாசிப்பார்கள்" என்றால், பரலோகிலே தேவன் அவர்களுக்கு கிரீடங்கள் கொடுப்பார். ஜீவகிரீடம், மகிமையின் கிரீடம், மகிழ்ச்சியின் கிரீடம், நீதியின் கிரீடம் போன்றவை அளிக்கப்படும்; பூமியிலே 1000 வருட ஆட்சியிலே அவர்களுக்கான எல்லையிலே ஆளுகை தரப்படும்.

இப்படியாய் தரிசனத்தை விளக்கிய தேவதூதன், இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை புதைபொருளாக வைத்து, இந்த புத்தகத்தை முத்திரைபோடு என்கிறான். ஏனெனில் இது கடைசி காலத்திற்கு உரியது. கடைசி நாட்களில் அறிவு பெருகிப் போய், இந்த வார்த்தைகள்

ஆராயப்படுமாம். கடந்த 2016 ஆண்டுகளுக்குள், 18ம் நூற்றாண்டு முதல்தான் விஞ்ஞான அறிவு பெருகியது; புதிய கண்டுபிடிப்புகள் பெருகின. எனவே இது கடைசிகாலம். இப்போதுதான் முத்தரிக்கப்பட்ட தீர்க்கதரிசன புஸ்தகத்தை தியானிக்க வேண்டும் (see வெளி.22:10).

பின்பு தானியேல், ஆற்றுக்கு இரண்டு கரைகளிலும் நிற்கிற இரண்டு புருஷர்களைத் தரிசனமாய்க் கண்டான். சணல் வஸ்திரந்தரித்து, ஆற்றின் தண்ணீர்கள் மேல் நிற்பவரைப் பார்த்து, இந்த ஆச்சரியமானவைகளின் முடிவுரை எவ்வளவு காலம் செல்லும் என்று கேட்டான். இதற்கு 1260 நாட்கள் (ஒரு காலம் = 1 வருடம் + காலங்கள் = 2 வருடம் + அரைக் காலம் 1/2 வருடம் = 3 $^1/_2$ வருடம்) ஆகும் என்றும், அது பரிசுத்த இஸ்ரேலர் அந்திகிறிஸ்துவால் துரத்தியடிக்கப்படும் வரைக்கும் என்றும் விளக்கினார். இபபடி விளக்கினவர், ஜலத்தின்மேல் நிற்கிறவராய் இருப்பதால், இவர் ஆவியானவராக இருக்கலாம் என்று சிலர் கணிக்கின்றனர். (ஆதி.1:2). இதைக்கேட்ட தானியேலுக்கு ஒன்றும் புரியாமல், "இவைகளின் முடிவு என்னவாயிருக்கும்" என்று கேட்டான். அதற்கு வந்த பதில் தானி. 12:9-13ல் இருக்கிறது.

**பதில்:**-1. இந்த வார்த்தைகள் முடிவுவரை முத்தரிக்கப்பட்டிருக்கும். துன்மார்க்கன் இதை உணரமாட்டார்கள்; ஞானவான்களோ உணர்வார்கள்.

2. அன்றாட பலி அந்திகிறிஸ்துவால் எருசலேம் ஆலயத்தில் நீக்கப்பட்டு, அருவருப்பு ஸ்தாபிக்கப்படும் காலம் முதல் 1290 நாள் கடந்துபோகும். மொத்தம் 1335 நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்.

3. தானியேலே! நீ மரித்து இளைப்பாறு. நாட்களின் முடிவிலே உன் சுதந்திர தேசத்துக்கு எழுந்தரிப்பாய்.

அந்தி கிறிஸ்துவின் மகா உபத்திர காலம் (தானி.12:11,7; வெளி.2:14; 6:13:5,19:19-20) இஸ்ரேலருக்கு 1260 நாள் (3$^1/_2$ வருஷம்) என்று நாமறிவோம். ஆனால் இதிலிருந்து 75 நாட்கள் கூட்டி 1335 நாட்கள் வரை மேசியாவுக்காய் காத்திருந்து சேர வேண்டும் என்று சொல்லப் பட்டிருப்பதால், அந்த 75நாட்கள் என்ன நடக்கும்? இது கேள்வி.

1. அர்மெகதோன் பள்ளத்தாக்கில் யுத்தம் அந்திகிறிஸ்துவுக்கும், வடக்கு, கிழக்கு நாடுகளுக்கும் நடக்கும் (யோவேல் 3; சக.14; வெளி.19:11-21).

2. யுத்தத்தில் மரித்தோரை அடக்கம் பண்ணுவது ஆரம்பிக்கும் (எசே.39:8-22).

3. தேவன் ஒலிவ மலையில் காலடி வைப்பார் (சக.14:1-5).

4. அந்தி கிறிஸ்துவின் படைகள் சூழப்பட்டு, தேவனால் சின்னபின்னமாக்கப்படும் (எசே.39:2).

5. சாத்தான் அதள பாதாளத்தில் அடைக்கப்படுவான் (வெளி.20:1-3).

6. உயிரோடிருக்கும் இஸ்ரேலர்களை தேவதூதர்கள் கூட்டிச் சேர்ப்பார்கள் (மத்.24:31).

7. இஸ்ரேலரெல்லாம் இரட்சிக்கப்படுவர் (ரோ.11:25-26).

8. புறஜாதி தேசத்தார் நியாயத் தீர்பபுக்காய் கூட்டிச் சேர்க்கப்படுவர் (மத்.25:31-46).

9. எருசலேம் சுத்தகரிக்கப்பட்ட, 1000 வருட ஆட்சிக்காய் தேவாலயம் கட்டப்படும் (எசே.40:46; சக.6:12,13).

10. மிருகமும் கள்ள தீர்க்கதரிசியும் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே உயிரோடு தள்ளப்படுவர் (வெளி.19:20).

11. மிருகத்தைச் சேர்ந்தவர்கள் அழிக்கப்படுவர் (வெளி.19:21).

12. இரகசிய வருகையிலும், அந்திகிறிஸ்து ஆட்சியிலும் எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களுக்கு பூமியில் ஆளதேசம் ஒதுக்கப்படும் (தானி.7:18,27; 1 கொரி.6:2; வெளி.5:10; 11:15; ஏசா.2:24; எசே.47).

13. செடிகொடிகள் செழிப்பாகும்; பள்ளங்கள் நிரம்பிடும்; மிருகங்களின் குணம்மாறும்; எருசலேமிலிருந்து சுவிசேஷகர்கள் அனுப்ப ஆயத்தமாக்கப்படும் (ஏசா.22:4; 11:9; 52:7; சக.8:23).

14. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மீதமான ஏதோமியர், மோவாபியர், அம்மோன் புத்திரர் போன்றோரையும் கூட்டிச் சேர்ப்பார்.

இன்னும் ஏராளம் எழுதலாம்

தேவஜனமே! இந்த 75 நாட்களும், இயேசுவோடிருந்து, நடக்கப்போகிறதை, கண்டு களிக்கப் போகறீர்களா? ஒருவேளை வருகை தாமதமானால், நீ மரித்து, எப்போது நித்திய ஜீவனுக்காய் எழுந்திருப்பாய்? நிச்சயம் உண்டா உனக்கு? அல்லது உயிரோடு இரகசிய வருகையில் இணைவாயா? ஆயத்தமாயிருக்கிறாயா? இயேசு சீக்கிரம் வருகிறார்!

# "வெளிப்படுத்தின விசேஷம்" விளக்கவுரை

# நுழைவாயில்

நம்முடைய வேதத்தின் கடைசிப் புத்தகம் இது. தானியேல் - விளக்கவுரையின், நுழைவாயிலையும் சேர்த்து இந்தப் பகுதியையும் படிக்க வேண்டுகின்றேன்.

ஒரு காலத்திலே இந்தப் புத்தகம் எனக்கும் புரியாத புதிராக இருந்தது. மிருகம், வேசி, புதிய எருசலேம், ஏழு எக்காளம், ஏழு முத்திரை, அந்தி கிறிஸ்து, புதிய வானம், புதிய பூமி போன்றவைகளைப் படிக்கும் போதே, அர்த்தம் ஏதும் புரியாமல், இந்தப் புத்தகத்தை ஒதுக்கி வைத்தவன் நான். அப்படியிருந்த என்னையே, விளக்கவுரை எழுத வைத்த தேவாதி தேவனுக்கு, கோடா கோடி தோத்திரம் உண்டாவதாக! இதை வாசிக்கிற ஒவ்வொருவரும், என்னைப் போலவே அறியாத மற்றவர்களும் அறிவிக்கிற தூதுவர்களாய் மாற ஜெபிக்கிறேன். இதிலே எந்த சந்தேகம், கேள்விகள் வந்தாலும், தயவு செய்து என்னிடம் கேளுங்கள்; அல்லது அடியேன் நடத்தும் கூட்டங்களில் வந்து கேளுங்கள். நம் தேவன் பதிலளிப்பார்.

வேதத்திலே இது கடைசிப் புத்தகமாய் இருப்பதாலோ என்னவோ, பலர் இதை வாசிப்பதில்லை. மேலும் இதிலே பலவற்றைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் காண்ப்படுவதால், இந்தப் புத்தகம்பற்றி யாரும் அக்கறை எடுப்பதில்லை. ஆனால் நம் தேவனோ, சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை நமக்கு காட்ட வேண்டும் என்பதிலே ஆர்வமாயிருக்கிறார் (வெளி.1:1). இதனாலே, அவர் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்தார். இயேசுவோ அதை யோவனுக்கு சொல்கிறார்; பல காரியங்களை தம்முடைய தூதன் மூலமாய் யோவானுக்கு வெளிப்படுத்துகிறார். இயேசு, மனிதனாய் வாழ்ந்த காலத்தில் நிறையக் காரியங்களை வெளிப்படுத்த சித்தமானார். ஆனால் அன்றிருந்த மக்களின் சிந்திக்கும் ஆற்றல், ஏற்றுக் கொள்ளும் ஆற்றல், அவர் சொல்லக் கூடியவைகளை தாங்காது என்று அறிந்திருந்தார். “மறைவானவைகள் கர்த்தருக்கு உரியவை” (உபா.29:29) என்று பழைய ஏற்பாட்டு மக்களுக்குச் சொன்னார். நமக்கோ, லூக்.8:17ல் “வெளியரங்கமாகாத இரகசியமில்லை; அறியப்பட்டு வெளிக்கு வராத மறைபொருளுமில்லை”

என்றார். எப்படியாவது தேவ இரகசியங்களை வெளிப்படுத்தியே ஆகவேண்டும் என்ற வாஞ்சையினால் அவர் பரலோகம் போனபின்பும் கூட, தூதன் மூலமாய் யோவானுக்கு வெளிப்படுத்துகிறாரே அந்த தெய்வத்தின் உள்ளத்தைப் பாருங்கள்!

தானியேல் புத்தகத்திலே எழுதப்பட்டவை முழுக்க முழுக்க இஸ்ரேலர் சம்பந்தப்பட்டவை. அந்த நாட்களில், புதிதும் ஜீவனுமான மார்க்கம் - புதிய ஏற்பாட்டு மார்க்கம், இயேசுகிறிஸ்துவால் உருவாகும் என்பது இரகசியமாகவே இருந்தது (எபே.2:18-3:6). **தானியேல் புத்தகம்பற்றி, தேவன் சொன்னதைப் பாருங்கள்:-** "முடிவு காலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து இந்த புத்தகத்தை முத்திரைபோடு. ஏனென்றால் கடைசி நாட்களில் அறிவு பெருகிப்போகும். ஜனங்கள் அங்கும் இங்கும் ஓடி ஆராய்வார்கள்." (தானி.12:4). அதே தேவன், வெளிப்படுத்தினவிசேஷப் புத்தகம்பற்றி, "இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரை போடவேண்டாம். காலம் சமீபமாயிருக்கிறது" (வெளி.22:10) என்கிறார். அப்படியானால் இந்தக்காலம் கடைசிகாலம். எனவே இந்த நூலை கண்டிப்பாய் அனைவரும் அறிய வேண்டுமென்று தேவன் விரும்பி நமக்குக் கொடுத்திருக்கிறார். அல்லேலூயா!

அதனால்தான் இந்தப் புத்தகத்தை வாசித்தாலே பாக்கியவானாம்; இதை வேறொருவன் வாசிக்கக் கேட்டாலே பாக்கியவானாம்; இதிலே சொல்லப்பட்டவைகளை கைக்கொள்ளுகிறவன் பாக்கியவானாம் (வெளி.1:3). இந்த மூன்று பிரிவுகளில் நாம் எந்தப் பிரிவாய் இருந்தாலும் பாக்கியவான்கள்தான்.

இயேசு கிறிஸ்து மீண்டும் பூமிக்கு வரும் வரையுள்ள தீர்க்க தரிசனங்களின் முடிவே இந்தப் புத்தகம். இதற்குப்பின் புதிய தீர்க்கதரிசனம் ஏதுமில்லை. அப்படி ஏதாவது உண்டென்று சொல்லுபவர்கள், பொய்யரும் கள்ளத்தீர்க்கதரிசிகளுமாவார்கள். இப்புத்தகத்தை வாசிப்பவர்களுக்கு வரும் ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்து (வெளி.1:3), இதில் எதையாகிலும் சேர்ப்பவர்களுக்கோ, எடுப்பவர்களுக்கு வரும் சாபவார்த்தையுடன் (வெளி.22:7,10,18,19) இப்புத்தகம் முடிகிறது என்று அறிந்து கொள்ளுங்கள். சாத்தானின் முடிவு இப்புத்ததகத்தில் சொல்லப்பட்டிருப்பதால், மக்கள் அதை அறிந்துவிடாதபடிக்கு சாத்தான் தடைபண்ணுவதால், பலர் படிக்க விருப்பமில்லாமல் போகிறார்கள். நாமோ, இயேசுவின் நாமத்தினால் தடைகளை உடைத்து வெற்றி பெறுவோம்.

கிறிஸ்துவினிமித்தம் வரும் பாடுகளின் ஒன்று "நாடு கடத்தப்படுதல்." இயேசுவைப் பற்றிய சாட்சியாளனாகிய (வெளி.1:2) யோவான், கி.பி.95-96ம் வருடத்தில், டொமிஷன் என்ற ரோம சக்கரவர்த்தியால், பத்முதுவுக்கு நாடு கடத்தப்பட்டான் (வெளி.1:9) அங்குதான் இந்த விசேஷம் எழுதப்பட்டது, இது இயேசுவின் சத்தத்தால் வெளிப்பட்டது. (வெளி.10,11,18)

கிரேக்கத்தில் "APOKALUPSES" என்றும் லத்தீனில், "Revelatio" என்றும் உள்ளதை, Revelationஎ ன்று ஆங்கிலத்தில் உள்ளது. அதன் பொருள்:- "முன்பு மறைந்திருந்து, அறியப்படாது இருந்தவைகளை வெளிக்காட்டுதல் என்பதாகும்." (In Eng "APOCALYPSE"). யோவான் கண்ட தரிசனம், தானியேல் போல் விளக்கம் ஏதுமின்றி அப்படியே எழுதப்பட்டுள்ளது. அடிக்கடி பூமியும், பரலோகமும் மாறி மாறி தரிசனமாய் காட்டப்பட்டுள்ளது. இயேசுவை, பூமிராஜக்களுக்கு ஆளுநர், சபைக்கு மணவாளன், தலைவர், யூதா கோத்திர சிங்கம், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி, பிரதான ஆசாரியர், ராஜா, நியாயாதிபதி என்றெல்லாம் காட்டப்பட்டுள்ளது. பெரும்பாலும் யூதர்களுடைய பாரம்பரிய ரீதியில், ஆசரிப்புக் கூடாரம், உடன்படிக்கைப் பெட்டி, பலிபீடம் போன்றவைகளை வைத்து எழுதப்பட்டுள்ளது. இதிலே, முற்பிதாக்கள், பரிசுத்தவான்கள் ஆகியோரின் பொறுமை கனப்படுத்தப்படுகின்றது. வேதம், பரதீசு இழப்பில் (Paradise Lost - ஆதி.3) ஆரம்பித்தது; அந்த இழந்ததை மறுபடியும் பெறுதல் இதன் மூலம் முடிவடைகின்றது.

இயேசுவின் பகிரங்கவரை வெளியரங்கமாக சொல்லப்பட்டுள்ளது, ஆனால் இரகசிய வருகைபற்றி வெளிப்படையாய் குறிப்பிடாமல், அதன்பின் நடக்கும் காரியங்கள் அதிகமாய் விளக்கப்பட்டுள்ளது. தானியேலில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன காரியங்களுக்கு விரிவான விளக்கம், இந்தப் புத்தகத்தில் காணலாம்.

❖ ❖ ❖

## 1ம் அதிகாரம் (கண்டவைகள்)

ஆசியாவிலுள்ள 7 சபைகளுக்கும், பிதா, பரிசுத்த ஆவியானவர் (ஏழு ஆவிகள்), உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து மூலமாய் ஆசீர்வாதம் கொடுத்து எழுதப்படுகின்றது (யோ.1:4). ஆனாலும் உலகிலுள்ள அத்தனை

சபைகளுக்கும் உரியது இது. வெளி.2,3ல் சொல்லப்பட்ட 7 சபைகள் மட்டும், அப்போது இருக்கவில்லை; அஃதில்லாமல், கொலோசே, துரேவா, தெற்கப்போலி போன்ற பல சபைகள் இருந்தாலும் 7 என்பது முழுமையைக் காட்டுவதால் எல்லா கிறிஸ்தவ சபைகளுக்கும் இது மாதிரியாய் எழுதப்பட்டது என்று எடுத்துக் கொள்ள வேண்டும். நம்மை ராஜாவாகவும், ஆசாரியராகவும் ஆக்கிய தேவனை வெளி.1:6ல் துதித்துவிட்டு, அவரின் பகிரங்க வருகையை 'ஆமென்" என்று ஆணித்தரமாய் சொல்லி, விசேஷப் புத்தகத்தை தொடங்குகிறான் யோவான். அவரைக் குத்தின இஸ்ரேலர்கள் கண்டு புலம்புவார்கள் என்பதை, சக.12:9ன் படியான நிறைவேறுதலாக சொல்லியிருக்கிறார். இந்த வருகையில்தான் நாமும் அவரோடு ஒலிவமலையில் இறங்கி வருவோம் (சக.14:1) ஆமென்! அல்லேலூயா! வெளி.1:8ல் சொல்லப்பட்டவர், இயேசு என்று, வெளி.1:11, 18 போன்ற வசனங்களால் அறியலாம்.

யோவான் ஆவிக்குள்ளான நாள் கர்த்தருடைய நாள் (வெளி.1:10) என்று போடப்பட்டிருப்பதால், பலர், அது வாரத்தின் முதல் நாள் என்கின்றனர்; சிலர் ஓய்வு நாளாகிய சனிக்கிழமை என்கின்றனர். இரண்டுக்குமே வேத ஆதாரமில்லை. கிறிஸ்துவினுடைய நாள், கர்த்தரின் பரிசுத்த நாளாகிய ஓய்வுநாள், கர்த்தருடைய பெரிய நாள், போன்று பலவாறு வேதத்தில் உள்ளது. (2 தெச.2:2; ஏசா.58:13; செப்.1:4; யோவே1;15; 2 கொரி.1:14; பிலி.1:5). கர்த்தருடைய நாளை விரும்புவோருக்கு "ஐயோ" என்றும் உள்ளது (ஆமோ 5:18). வேதத்தில் பெரும்பாலும், உபத்திரவமும் 1000 வருட ஆட்சியும் உள்ளடக்கிய கர்த்தரின் இரண்டாம் வருகையின் நாளைக் குறிப்பதாகவே அதிகமாக உள்ளது.

எனவே வெளி.1:10ல் உள்ளதை, சனியோ, ஞாயிறோ என்று எண்ணாமல், பல ஆண்டுகளுக்குப்பின் கர்த்தரின் நாள் வரைக்கும் நடைபெற உள்ள காட்சியை யோவான் ஆவியிலே பத்மூ தீவில் கண்டதால், அந்த வரப்போகும் கர்த்தரின் நாளின் நிலைமையிலேயே - உணர்விலேயே - சிந்தனையிலேயே, கண்டான் என்று நிதானிப்பதே சரியாயிருக்கும். மற்றப்படி யோவானின் தரிசனங்கள் எல்லாம் ஒரு நாளில் கண்டவை அல்ல என்று முந்தி அறிய வேண்டும்.

**இந்தப் புத்தகத்தை** (1) யோவான் கண்டவைகள் (2) இருக்கிறவைகள் (3) இனி சம்பவிக்கப் போகிறவைகள் என்று மூன்று பகுதியாய் எழுதச் சொல்லியிருப்பதால் (வெளி.1;19), யோவான்

கண்டவைகள் இந்த 1ம் அதிகாரத்தில் பார்க்கலாம். எக்காள சத்தம் போன்ற இயேசுவின் சத்தம் கேட்டு, திரும்பும்போது, 7 குத்து விளக்குகளைப் பார்க்கிறான். இந்த 7 குத்து விளக்குகளும் இரகசியம் என்று வெளி.1:20 சொல்கின்றது ("யோவான் சொல்லும் இரகசியம்" என்ற செய்தியை அடியேனின், உங்களுக்குத் தெரியுமா? என்ற ஆராய்ச்சிப் புத்தகத்தில் வாசியுங்கள்). இந்த 7 குத்து விளக்குகளும் ஏழு சபைகளாம். இது யோவான் காலத்திலிருந்த ஆசியாவின் 7 சபைகள் என்றும் நிதானிக்கலாம் (வெளி.2,3ல் உள்ள 7 சபைகள் மட்டுமே அப்போது இருக்கவில்லை; கொலோசே, தெற்கப்போலி, துரோவா போன்ற சபைகளும் இருந்தன). வேதத்தில் 7 என்பது முழுமை என்பதால், இந்த 7 சபைகளும் உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ சபைகளின் "மாதிரி" என்று எடுத்துக்கொள்ளலாம். இந்த குத்து விளக்காகிய சபைகளின் மத்தியிலே, இயேசு உலாவுகிறார். குத்து விளக்கு என்பது Lamp stand - அதாவது "விளக்குத்தண்டு" எண்ணெயாகிய ஆவியானவரால் திரியாகிய வசனத்தின் மூலம், எரிந்து கொண்டிருக்கிற ஒளியாகிய விளக்குதான் இயேசு. ஆக, பரிசுத்த ஆவியானவரால், வசனத்தின்படி நடத்தப்படுகிற ஆவிக்குரிய சபைகளில், இயேசு ஒளிவிட்டு, உலாவுகிறதை யோவான் கண்டான். இவர், தமது வலது கரத்தில், 7 நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார் (வெளி.1:16) இந்த ஏழு நட்சத்திரங்களும், 7 சபையின் தூதர்களாம். முழுமையான எல்லா ஆவிக்கரிய சபைகளின், முழுமையான எல்லா ஊழியர்களையும், வலதுகரத்தில் - அதாவது வல்லமை ஸ்தானத்தில், இயேசு வைத்திருக்கிறார். ஆமென்.

இந்த இயேசுவை யோவான் எப்படி ஆவியிலே காண்கிறார் என்று பாருங்கள். மனுஷ குமாரனாய் இருந்து, மகிமையடைந்த நிலையில், பிரதான ஆசாரியராய் பரலோகிலிருந்து, உலகிற்கு மறுபடியும் நியாயாதிபதியாய், ராஜாவாய் வரப்போகிறவரை காண்கிறான். தரிசனமெல்லாம், காண்பவரின் அறிவுக்கும் உணர்வுக்கும் ஏற்றபடி காணப்படும் என்றும், 2பேது1:20ன் படி, தரிசனத்தில் காணப்பட்ட தெல்லாமே சுயத்தோற்றமான பொருளையுடையதாயிராது என்றும் நாமறிவோம். இப்படிப்பட்ட தரிசனங்களை வைத்து, யாருடைய ரூபத்தையும் எடைபோட முடியாது. பிரதான ஆசாரியனாய் காட்சியளித்திருந்தால் ஆசாரியர்கட்டும், பணிவிடைக்கான அரைக்கச்சையை கட்டியிருப்பார். அப்படியும் இல்லை. யோவான் கண்ட காட்சி ஒரு நியாயாதிபதியின் காட்சி. எப்படியெனில், நியாயாதிபதிகள் அணிகின்ற மார்பகப் பொற் கச்சையை அணிந்திருந்தார். இதனால்

இயேசு, பிரதன ஆசாரியர் பணியினின்று மாறி, நியாய விசாரண முடிந்து, கோபாக்கினை நாளில் நியாயந்தீர்க்கிறவராய் நிற்பதை உணரலாம்.

இவரது தலையும், மயிரும் வெண்பஞ்சு போலவும், உலர்ந்த மழையைப் போலவும் இருந்தன. ஆங்கிலேய நீதிபதிகள் தலையிலே வெள்ளைக் குல்லா இருப்பதுபோல இது உள்ளது. தானி 7:9 முதல் வரும் அதே மனுஷகுமாரனே இவர் என்று நிதானிக்கலாம். யோ.5:22ன் படி, இவருக்கே நியாயந்தீர்க்கும் அதிகாரம் உன்டென்று அறியுங்கள். வெண்மையான மயிர் முதிர்வயதை காண்பிப்பதல்ல; இவர்தான் நித்தியராயிற்றே! இது, அவரின் ஞானம், அனுபவம், குணாதிசயத்தைக் காட்டுகின்றது (நீதி.16:31). அன்பு ததும்பும் அவரது கண், அக்கினி ஜுவாலையாய் இருக்கிறது என்றால் அவரே பட்சிக்கிற அக்கினி; அவரே நியாயாதிபதி; அவருக்கு முன்பாக எல்லாம் நிர்வாணமும், வெளியரங்கமுமாம்! ஆமென்! அல்லேலூயா! மெல்லிய நீரோடை போன்ற அவரது சத்தம் பெருவெள்ள இரைச்சல்; நியாயாதிபதியின் ஆக்கினைத் தீர்ப்பின் தொனி. அந்தி கிறிஸ்துவையும், சாத்தானையும் தம் கால்களினால் மிதித்துப் போடத்தக்கதாக, அவர் கால்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலமாயிருந்தன (see வெளி.19:15). அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. எபி.4:12; எபே.6:17ல் உள்ள வசனமாகிய ஆவியின் பட்டயமல்ல இது; வெளி. 19:11-15ல் உள்ளவரின் வாயிலிருந்து வரும் பட்டயம். அதாவது, நியாயாதிபதியின் ஆக்கினைத் தீர்ப்பாகிய பட்டயம். அவர் முகம் சூரியனைப் போலிருந்தது. மல்.4:2ன் படி, அவர் நீதியின் சூரியனாய் மறுபடியும் வருவதையே குறிக்கும் (வெளி.21:23; மத்.17:2ஐ வாசியுங்கள்).

ஆக, கர்த்தரின் வருகையின் நாளின், நியாயாதிபதியாய் இயேசு வரப்போவதை யோவான் காண்கிறான். மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவராய் இருந்தது, தான் மரணத்தை ஜெயித்தவர் என்று சொல்லி, யோவானுக்கு ஆறுதல் கூறுகிறார். இதை வாசிக்கும் தேவஜனமே! அந்த நாளில் நாம் பூமியிலிருந்தால் என்ன ஆகும்? அதற்கு முன்பு அவருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட சபையாகிய நாம் ஆயத்தமாவோம்! மற்றவர்களையும் ஆயத்தப் படுத்துவோம்! யோவான் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளாகி கண்டதை, நாம், நம் உலக வாழ்க்கையில் காணாதிருப்போம்! மாரநாதா!

❖ ❖ ❖

# 2ம் அதிகாரம் ("இருக்கிறவைகள்")

யோவான் காலத்திலிருந்த 7 சபைகளைப்பற்றி எழுதப் பட்டிருந்தாலும், இந்த 7 சபைகளின் தன்மைகளையும், நிலைமை களையும் (character) பார்க்கும்போது, இவைகள் இயேசு வரும்வரை இருக்கப் போகும் சபைகளை, ஒவ்வொரு காலகட்டமாய், தொடர்ச்சியாய் சொல்லப்பட்டது என அறியலாம். மட்டுமல்ல.... இந்த 7 சபைகளின் குணாதிசயங்கள், காலகாலமாய் இருக்கும் ஒவ்வொரு ஆவிக்குரிய சபைகளிலும் இருக்கலாமென்றும் நிதானிக்கலாம். இந்த செய்திகள் சபையின் தூதனாம் ஊழியக்காரனுக்கே நேரிடையாய் சொல்லப் பட்டிருப்பது மிகவும் சிந்திக்கக் கூடிய ஒன்று. ஒவ்வொரு சபையின் பிரதிபலிப்பும் அந்த சபை போதகன் மேல்தான் இருக்கிறது என்பது மாறாப்பிரமாணம். **ஒவ்வொரு சபைக்கு சொல்லப்பட்டிருப்பதும், உன் சபைக்கும் இருக்கலாம்; கவனமாய் தியானி!** ஒவ்வொரு சபையாய்ப் பார்க்கலாம்.

**(1) எபேசு சபை:-**

ஊர் பெயரை வைத்து அழைக்கப்படும் சபை. மற்றப்படி, "கிறிஸ்துவின் சபை" என்ற பெயரில்லையேல் இது கிறிஸ்தவ சபை இல்லை என்றால், அது அறியாதவர்களின் கொள்கை. எபேசு, ஆசியாவிலுள்ள பட்டணம். இந்த சபையை பவுல் ஸ்தாபித்தான். வெளி.2:2,3ல் இந்த சபை புகழப்பட்டாலும் இதிலே ஒருகுறை உள்ளது. ஆதியிலே கொண்டிருந்த அன்பை அது விட்டுவிட்டது. அன்பிலே, பின்மாற்றத்திற்குள்ளான சபையாயிற்று. ஆனாலும் "நிக்கொலாய்" மதஸ்தரின் கொள்கையை வெறுத்தசபை (வெளி.2:6).

**யார் நிக்கொலாய் மதஸ்தர்?** NICO என்றால் மேற்கொள்ளுதல், தூரப்படுத்தல். Laos என்றால் சாதாரண மக்கள். தூரப்படுத்த வேண்டிய மிகவும் சாதாரண கீழ்த்தரமக்கள்; கள்ளர், பொய்யர். அப்.20:29,39ல் சொல்லப்பட்ட ஓநாய்கள்தான் இவர்கள். இந்த கூட்டத்தார், சபையிலே இருந்து கொண்டு, குருத்துவ ஒழுங்குப் பிரமாணம் என்று பழைய ஏற்பாட்டின் மாதிரியைப் பின்பற்றி, ஆசிரியர் (குரு), லேவியர், சாதாரண மக்கள் என சபையாரை வேறுபோட்டு, வித்தியாசப்படுத்துபவர்கள்; விக்ரகத்திற்கு பலியிட்டதை பலியிடுகிறவர்களேடே உண்ணுபவர்கள்.

**இந்த எபேசுசபை,** எதிலிருந்து விழுந்தது என்று உணர்ந்து மனந்திரும்ப வேண்டும். இல்லாவிட்டால், இயேசுவாகிய விளக்குத் தண்டு

நீங்கிவிடும் (வெளி.2:5) மனந்திரும்பி ஜெயங்கொண்டால், பரதீன் மத்தியிலுள்ள ஜீவமிருட்சத்தின் கனி கிடைக்கும். இந்த ஜீவ விருட்சத்தின் கனியை சாப்பிடக் கூடாது என்றுதான் ஆதாமும் ஏவாளும் ஏதேனிலிருந்து விரட்டப்பட்டனர். மறுபடியும் இந்தக் கனியைப் புசிக்கக் கொடுக்கப் போகிறார். இது, புதிய எருசலேமிலும் கிடைக்கும் (வெளி.22); இந்த பூமியிலும், இழந்துபோன அதிகாரம், வல்லமை மீண்டும் கிடைக்கும்; சம்பாதித்த சாபங்கள், நோய்கள், தோல்வி வாழ்க்கை மாறிப்போகும். எல்லாமே இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதலால் (கலா.3:13; 1 பேது.2:24; அப்.530;10:39;) இம்மையிலேயே ஜெயத்தை நூறத்தனை அனுபவிக்கலாம். அல்லேலூயா! இந்த சபையைப் போன்ற குணாதிசயம் உள்ள சபைகள் கி.பி.70 முதல் 170 வரை இருந்ததாக வேத சரித்திர வல்லுநர்கள் கணிக்கிறார்கள்.

**2. சிமிர்னா சபை:-** சிமிர்னா என்றால் கசப்பு கலந்தகாடி - Myrth - அதாவது மரணத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு தைலம் எனப் பொருள். இந்த சபை உபத்திரவப்பட்ட சபை என்பதால், இந்தப் பெயர் வந்தது. இந்த சபைக்கு பிசாசினால் 10 நாட்கள் உபத்திரவம் என்று சொல்லப்பட்டபடியே (வெளி.2:10) கி.பி.64ல் வந்த நீரோ மன்னன் தொடங்கி, டயோக்கி லிஷியன் வரையான (கி.பி.310) ரோமச் சக்கரவர்த்திகளால் ஏற்பட்ட 10 மகா கொடிய உபத்திரவங்களின் மிகக் கடுமையான, கடைசி 10 ஆண்டுகளை இது குறிக்கும். அல்லது டயோக்கி லிஷியன் என்ற சக்கரவர்த்தியின் காலத்தே ஏற்பட்ட உபத்திரவங்களின் மிகக் கடுமையான 10 ஆண்டுகளை குறிப்பதாகவும் எடுத்துக் கொள்ளலாம். இந்த உபத்திரவத்தில் இரத்த சாட்சியாய் மரித்தாலும் ஜீவகிரீடம் உண்டு. இரண்டாம் மரணமாகிய நரகம் இல்லை. இப்படிப்பட்ட அருமையான வாக்குத்தத்தம் ஜெயங்கொள்ளுகிற இந்த சபையாருக்கு அளிக்கப் பட்டுள்ளது. இது யோவான் காலத்திலிருந்த ஆசியா சபையானாலும், அதன் கிரியைகளும் தன்மைகளும் கி.பி. 170 முதல் 312 வரை இருந்த சபைகளுக்கு ஒப்பாயிருந்ததாக வேத சரித்திர வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

**3. பெர்கமுசபை:-** பெர்கமு என்றால் கறைபட்ட (உலகத்தோடு) கலந்துவிட்ட என்று பொருள். பெர்கமு என்ற இடம் சாத்தானின் இருப்பிடம் என்று சொல்லப்பட்டுள்ளது (வெளி.2:13) பாபிலோனியக் கள்ள உபதேசத்தின் (Balylonian cults) தலைமையிடம், பாபிலோனிலிருந்து பெர்கமுக்கு வந்துவிட்டதாக கருதப்படுகிறது. கல்தேயர் பரம்பரை ராஜா அட்டாலஸ் - III என்பவர், பெர்சியர்களுக்கு பயந்தோடி, பெர்கமுவில் தங்கிய காலத்தில் இப்படி நடந்திருக்கலாம். இந்த சபையைப்பற்றி

சொல்லப்பட்ட காரியங்களைப் பார்க்கும் போது, கி.பி. 312 முதல் 606 வரை இருந்த சபையைப்பற்றிச் சொல்லப்பட்டதாய் நிதானிக்கலாம். பெர்கமுவின் பிஷப் அந்திப்பா என்பவர் இரத்தசாட்சியாய் மரித்தபோது, சபையார், விசுவாசத்தில் உறுதியாயிருந்திருக்கிறார்கள் (இது Acts of Anthipa என்ற நூலில் உள்ளது).

பாபிலோனிய தலைமைப் பூசாரி மரிக்கும்போது, கி.பி.133ல் தன் பதவியை ரோமுக்கு கொடுத்தது முதல், பாபிலோனிய கள்ள உபதேசங்கள் ரோமில் பெருகின. நாளாக, நாளாக, பாபிலோனிய தலைமைப் பூசாரியே ரோமில் ராஜாவானான். இது கி.பி.376 வரை தொடர்ந்தது. கி.பி. 378ல் தமாஸஸ் என்ற "ராஜா + பூஜாரியால்" கள்ள உபதேசங்கள் பெருகின. சபையை உலகளாவ மேப்படுத்த எண்ணி, கான்ஸ்டான்டைன் நோபிள் செய்த காரியங்களால், பிலேயாமின் போதகமும் நிக்கோலாஸின் போதகமும் சபையில் நுழைந்துவிட்டன. புறஜாதி விழாக்களையும், ஆராதனைகளையும் சபையில் புகுத்தி, புறஜாதியாரை வசப்படுத்த எண்ணியவன் இவன். புறஜாதி மக்கள் winter solstice எனப்படும் பண்டிகை நாட்களான, டிசம்பர் 21 முதல் 25 முடியவுள்ள நாட்களில் உள்ள கடைசி நாளான சூரியக் கடவுளின் நாளோடு கிறிஸ்மஸ்ஸை இணைத்தான். இப்படியாய் இது கறைபட்ட சபையாயிருந்தது. **பிலேயாமின் போதகம் என்ன?** எண். 22 முதல் 25 வரை வாசித்து அறியலாம். யூதா 11ல் சொல்லப்பட்டபடி, பாலாக் ராஜாவிடம், பணத்துக்காக மட்டுமன்றி, Popularity, Fame, Appaluse போன்றவைகளுக்காக, தேவ வரத்தை வியாபாரம் பண்ணினான் (எண்.31:15-16; 22:5; 23:8). இஸ்ரேலர்களை மோவாபியப் பெண்களோடு சேரவைத்தான்; வனாந்திர யாத்திரையின் முக்கியத்துவத்தை கெடுத்துப்போட்டான்.

**இந்த சபையில் ஜெயங்கொள்வோருக்கு, கிடைக்கும் ஆசீர்வாதங்கள்:-**

1. **மறைவான மன்னா:-** அதாவது பழைய ஏற்பாட்டில் ஒருவருக்கும் விளங்கப்படாத இரகசியங்கள், வசன வெளிப்பாடுகள், கிடைக்கும். இதை இயேசுவின் மூலமும் (மத்.13), பவுல், யோவான் மூலமும் வெளிப்படுத்தியிருக்கிறார் என்ற செய்திகளை "உங்களுக்குத் தெரியுமா?" என்ற நூலில் அடியேன் எழுதியிருக்கிறேன். இரகசியங்கள் வெளிப்படும்போது விசுவாசம் பெருகும்.

2. **புதுப்பெயருடன் கூடிய வெள்ளைக்கல்:-** பண்டைய காலங்களில், கோர்ட்டில் குற்றமில்லாதவன் என்று நிரூபிக்கப்பட்டால், ஒரு குறிக்கல்லும், புதுப்பெயரும் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்படும்.

விளையாட்டு வீரர்களையும் இப்படியாய் கௌரவிப்பது உண்டு. இப்படியாய் தேவன், கல்லாகிய கிறிஸ்துவை தரிக்க வைத்து, கிறிஸ்தவன் என்றும் பெயரிட்டு அழைக்கிறார். இதனால் சாத்தானை ஜெயித்து (பெர்கமு) வெற்றி வாழ்வு வாழ முடியும்.

4. **தீயத்திரா சபை:-** இதுவும் சபை ஊழியனுக்குத்தான் சொல்லப்பட்டுள்ளது. இது யோவான் காலத்திலிருந்த ஆசிய சபையானாலும், இதிலே சொல்லப்பட்ட காரியங்களைப் பார்க்கும்போது, இது கி.பி. 606 முதல் 1520 வரையான சபைகளைப்பற்றியது எனக் கருதலாம். நியாயாதிபதி சொல்வதாய் ஆரம்பம் (வெளி.2:18). இந்த சபையின் கிரியைகள் மெச்சும்படியாய் இருந்தாலும் (வெளி.2:19) குறைகள் திகைக்கவைக்கக் கூடிய அளவில் உள்ளன. கள்ளத் தீர்க்கதரிசி, யேசபேல் என்பவளின் போதகத்திற்கு இந்த சபை உட்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இந்த பெயரோடு, இந்தச் சபையில், தீர்க்கதரிசி இருந்தாளோ தெரியவில்லை.

**வேதம் சொல்லும் யேசபேல் பற்றி:-** இஸ்ரவேல் ராஜா ஆகாபின் மனைவி. பாகாலின் பணிவிடை ஆசாரியனாயிருந்து, பேல்ஸ் நாட்டு ராஜாவைக் கொன்று, தீருதேசராஜாவான எத்பாகாலின் மகள் இவள். பாகால் வணக்கத்தை இஸ்ரவேலிலே நுழைத்து, நம் தீர்க்கதரிசிகளை கொன்று குவித்தவள் (1 ராஜா 16). இஸ்ரேலில் தன் மகன்கள் அகசியா, யோராம் காலத்திலும், விக்ரக ஆராதனையையும், தீர்க்கதரிசிகளை கொல்வதையும் செயல்படுத்தியவள்; யூதாவில் தன் மகள் அத்தாலியாவை யெகோராம் ராஜாவுக்கு மணமுடித்து, பாகால் வணக்கத்தை வளர்த்தவள். இப்படிப்பட்ட விக்ரக ஆராதனைக் கொள்கை நிறைந்த system சபைக்குள், பதிந்து விட்டதாலே, யேசபேல் என்ற பெண் பெயரை போட்டுள்ளதாகவும் கருதலாம். இந்த system தான் விக்ரக ஆராதனையான போப் மார்க்கம் எனலாம். யேசபேலின் உபத்திரவங்கள்தான் போப் சபையில் காணப்பட்டது.

தீயத்ரா என்றால் கட்டுப்பாடற்ற அஞ்ஞான சபை என்ற அர்த்தம் உண்டு. யேசபேலின் போதகத்தை பின் பற்றாத, சாத்தானின் ஆழங்களை அறியாதவர்களுக்கு தேவன் நிபந்தனையோடு ஆசீர்வாதம் கொடுத்துள்ளார் (வெளி.2:24-29). விடிவெள்ளி நட்சத்திரமாகிய இயேசு

- இயேசுவின் வார்த்தை - அவர்களோடு இருக்கும் (வெளி.22:16); ஆதி.1:28ல் கொடுக்கப்பட்ட அதிகாரம் திருச்சபைக்கு கிடைக்கும். அவனவனுடைய கிரியைகளின்படியே பலனளிப்பதாக தேவன் சொல்கிறார் (வெளி.2:23).

❖ ❖ ❖

## 3ம் அதிகாரம் ("இருக்கிறவைகள்")

பிதாவிடமிருந்து வாங்கி இயேசு சொல்வதை, ஆவியானவர் அனைத்து சபைகளுக்கும் விவரித்துச் சொல்கிறார். காதுள்ளவன் - மனக்காது திறக்கப்பட்டவன் - கேட்கக்கடவன்.

5. **சர்தை சபை:-** இது மரித்துப்போன சபை என்றழைக்கப்படுகிறது (வெளி.3:1). சபைச் சரித்திரம் எழுதுவோர், போப் சபையையும் கிறிஸ்துவ சபை என்றெழுதி, இந்த சபை, சபையின் சீர்திருத்த காலத்திற்கு ஒப்பாயிருப்பதாய் கருதுகின்றனர். அதனால் இதன் காலம் கி.பி.1520 - 1750 என்று கணக்கிடுகின்றனர். சர்தை என்றால் தப்பவைத்துக் கொண்ட ஒன்று என்று பொருள். எனவே மார்டின் லூதர் மூலமாய் வந்த சீர்திருத்த 95 விதிகளால் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று விளக்குகின்றனர். ஆனாலும் இதன்மூலம் ஆவிக்குரிய மாற்றம் ஏற்பட்டதாய் தெரிவில்லை. இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதலை அவமதிக்கும் - முதலாம் வருகையை அவமதிக்கும் குழந்தை ஞானஸ்நானம் கொடுப்பது தவறு என்று இந்த 95 விதிகள் கூறவே இல்லை. மற்றப்படி வேதப்புத்தகம் பரவவும், விசுவாசத்தால் நீதிமான் என அறியப்படவும் (ஆபகூக் 2:4). ஆராதனையை எளிமைப்படுத்தவும், அக்கால மக்களுக்கு இது வழிசெய்திருந்த போதிலும், வருகையை உறுதிப்படுத்த தவறியது. இதனால்தான், விழித்திரு, திருடனைப் போல் வருவேன் என்று வெளி. 3:2 3ல் எச்சரிக்கப்பட்டுள்ளது.

**திருடனைப் போல் வருதல் என்றால், இரகசியமாய் என்றல்ல;** திடீரென்று வருதல் என்பதாகும். சபையின் இரகசிய வருகைபற்றி அடியேனின் "தெரிந்து கொள்ளுங்கள்" - பாகம் 1, 2ல் உள்ள செய்திகளை வாசியுங்கள். தங்கள் இரட்சிப்பின் வஸ்திரத்தை அசுத்தப்படுத்தாமல் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு, ஆசீர்வாதம் சொல்லப்பட்டுள்ளது.

6. **பிலதெல்பியா சபை:-** பிலதெல்பியா என்றால் சகோதர சிநேகம் என்று பொருள். இந்த சபையிலே குறைகளை எதையும் தேவன் காட்டவில்லை. செத்த சபைக் காலத்திலிருந்து உயிர் மீட்சி பெற்ற சபையாய், கி.பி.1750 முதல் 1900 வரை இருந்த சபைக்கு இது ஒத்தது என்று கனிக்கிறார்கள். இந்தக்காலம், ஜார்ஜ் ஒயிட் பீல்ட், ஜான்வெஸ்லி, சார்லஸ் பின்னி, டி.எல்.மூடி போன்றவர்கள் மூலமாய் எழுப்புதல் வந்தகாலம். இவர்களெல்லாருமே, புராட்டஸ்டண்டு மார்க்கத்தை சேர்ந்திருந்தாலும், இவர்கள் மூலமாய் ஒரு சில சீர்திருத்தக் கருத்துகள் வெளிவந்ததால் இவர்களை மதிக்கிறோம். மற்றப்படி இவர்கள் எல்லோரும் ஆவிக்குரிய - பூரண சுவிசேஷ - சபையைச் சார்ந்தவர் அல்லர். அல்லாமலும் வெளி.3:8ன்படி, எந்த மனிதனாலும் பூட்ட முடியாதபடி திறந்தவாசல் இந்தச் சபைக்கு இருந்ததால்தான் (திறப்பின் வாசல் அல்ல) கி.பி.1793ல் வில்லியம் கேரி இந்தியாவிற்கு, கடற்பயணமாய் வந்து திறந்த வாசலைக் கண்டான். அதன்பின் பல மிஷினெரிகள் உலகமெங்கும் புறப்பட்டார்கள். உபத்திரவ காலத்திற்குத் தப்பி (வெளி.3:10) இரகசிய வருகையிலே எடுத்துக் கொள்ளப்படும் சபையாய் இது காணப்படுகின்றது. இந்த சபைக்கு ஆசீர்வாதங்கள் வெளி.3:9-12ல் உள்ளது. இந்த சபைபோல, வசனம் கைக்கொள்வோம்; அன்பு காட்டுவோம்.

7. **லவோதிக்கிய சபை:-** இது இக்கால, வெதுவெதுப்பான கிறிஸ்தவ சபைகளுக்குப் பொருந்தும் என்று கணிக்கைப்படுகின்றது. இந்த சபையிலே குறைகள் நிறைய உண்டு. இவர்கள், ஐஸ்வரியத்தின் மேலேயே குறி உள்ளவர்கள். சபைக்குள்ளே இருந்த இயேசு புறம்பாக்கப்பட்டு வாசற்படியின் வெளியில் நின்று தட்டும் நிலையாகிவிட்டது. உலகத்தோடு, ஒன்றிணைந்த முறைமைகள் இச்சபையில் உள்ளன. இந்த நிலை இயேசு வரும்வரை தொடரும். ஆனாலும் இந்த சபைக்கும் நிபந்தனையோடு கூடிய ஆசீர்வாதம் உண்டு (வெளி.3:20,21).

இதுவரை அதிகாரம் 2,3ல் சொல்லப்பட்ட 7 விதமான சபைகள், ஆசியாவில் யோவான் காலத்திலிருந்தாலும், அந்த சபைகளின் தன்மைக்கொத்த சபைகள், தொடர்ந்து சரித்திரத்தில் இருந்திருக்கின்றன என்பது வேத வல்லுநர்களின் கருத்து. நமது கடைசி காலத்திலுள்ள இந்த காலக் கட்டத்தில் 7 விதமான சபைத்தன்மையுடைய சபையார்

இருக்கிறார்கள் என்று நாம் ஒத்துக்கொள்ளலாம். இந்த 7 சபைகளிலும் சொல்லப்பட்ட எச்சரிப்புகளை சிந்தித்து, விசுவாசக் கிரியைகளில் நடந்தால் ஜெயமுண்டு; அவைகளில் சொல்லப்பட்ட அத்தனை ஆசீர்வாதங்களும் இந்த பூமியிலேயே சுதந்தரிப்போம். ஆமென். நாமெல்லாரும், பிலதெல்பியாபோல வசனத்தைக் கைக்கொள்வோம். திறந்தவாசல் காத்திருக்கிறது. அல்லேலூயா!

❖ ❖ ❖

# 4ம் அதிகாரம்

## (இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவை)

வெளி.1;19ல் சொல்லப்பட்டபடி, வெளி.1ல் யோவான் பரலோகில் கண்டவைகளையும், வெளி.2,3ல் இருக்கிற 7 சபைகளையும் தியானித்தோம். வெளி.4:1ன் படி, இவைகளுக்குப் பின்பு அதாவது, 7 சபைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை யோவானுக்கு காட்டப்படுகின்றது. வெளி.4ன் முதல் வசன ஆரம்பமும் முடிவும், இவைகளுக்குப் பின்பு என்றே வருகின்றது. மூல கிரேக்க பாஷையிலே, இது META TAUTA என்று உள்ளது. இதே வார்த்தைதான், யோ.3:22; 5:1;7:1 போன்ற வசனங்களில் வருகின்றது. **இதன் பொருள்:-** மேலே சொல்லப்பட்ட காரியங்களுக்குப் பின் நடப்பவை என்பதாகும். ஆக, வெளி.4 முதல் சொல்லப்படும் காரியங்கள், மேலே சொல்லப்பட்ட 7 விதமான சபைகளுக்குப் பிற்பாடு நடக்கும் காரியங்கள் எனலாம். அப்படியானால் வெளி. 4 முதல் சொல்லப்படும் காரியங்களில், சபை இருக்காது என உணரலாம். அதாவது, சபைக்கு, வெளி. 4க்குப்பின் நடக்கும் பூமிக்கடுத்தக் காரியங்களில் தொடர்பில்லை; இவைகளுக்கு முன்பே சபை எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்று அறியலாம்.

இயேசு கிறிஸ்துவால் உருவாக்கப்பட்ட மணவாட்டி சபை, 3ம் அதிகாரத்தோடு காணப்படாமல் போய், வெளி.19ல்தான் மீண்டும் பூமியில் பார்வைக்கு கொண்டு வரப்படுகின்றது. வெளி. 3ம் அதிகாரம் முடிவிலிருந்து சபை எடுக்கப்பட்டபின் (Secret Rapture) - caught up in the air (1 தெச.4:16-18), பிரதானமாய், யூதமக்களைப் பற்றியும், கைவிடப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் புறஜாதிகளைப் பற்றியுமே 19ம்

அதிகாரம் வரை சொல்லப்படுகின்றது. இந்த காலகட்டம்தான், தானி.9:27ல் சொல்லப்பட்ட ஒருவாரம் - 7 வருஷம் (கடைசி 70வது வாரம்).

பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலை யோவான் கண்டான் (வெளி.4:1) வெளி.1:10ல் கேட்ட அதே எக்காள சத்தத்தைக் கேட்டான். இயேசு கிறிஸ்துவின் சத்தம் அது. "பரலோகம் வா; இதற்குப்பின் நடப்பவைகளை காண்பிப்பேன்" என்று இயேசு, யோவானை அழைப்பதிலிருந்து, மணவாட்டி சபையார் பரலோகம் போனபின்னே நடக்கும் காரியங்கள்தான் இனி யோவான் காணப்போவது என்று உணரலாம். ஒளியான சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவன், ஒளியாகவே காட்சி தருகிறார் (வெளி.4:3; 1 தீமோ.6:16) சிங்காசனத்தைச் சுற்றி வானவில் இருந்தது. 24 மூப்பர்கள் சிங்காசனங்களில் இருந்தார்கள் (வெளி.4:3,4).

**வானவில்:-** வானவில் என்ற உடனே நோவா காலத்தில் தேவன் பண்ணிய உடன்படிக்கைக்கு அடையாளமான வானவில்லை நினைக்கின்றோம். அது அரைவட்ட வடிவமாயும், ஏழு நிறங்களிலும் இருக்கும் (ஆதி.9:13-17). ஆனால் சிங்காசனத்தை சுற்றியுள்ள வானவில்லோ முழுவட்டமாயிருக்கிறது. கிறிஸ்துவினால் சிலுவையில் நிறைவேற்றப்பட்ட பலி அங்கீகரிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட புதிய உடன்படிக்கைக்கு அடையாளமாயுள்ளது. அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றியதால் இது பச்சை நிறத்தை வெளிப்படுத்தும். பச்சை என்றாலே, பசுமை, செழுமை, களிப்பு, அன்பு, பொறுமை போன்ற எல்லா குணங்களையும் பிரதிபலிக்கும். கர்த்தரின், பூமியைப் பற்றி பரிபூரண சித்தத்தை வெளிக்காட்டுகிறது எசே.1:26-28ன் படி கர்த்தருடைய மகிமையின் சாயலுக்கு தரிசனமாயிருக்கிறது.

**24 மூப்பர்கள்:-** தானி.7:9,10ல் சிங்காசனங்கள் காணப்பட்டாலும், ஒன்றில்தான் மனுஷகுமாரன் இருந்தார். இங்கே வெளி.4:4ன்படி, சிங்காசனங்களில் மூப்பர்கள் இருந்தனர்; காலி ஏதுமில்லை. நாம் அறிவது என்ன? தேவனுடைய சபையார் பரலோகம் போய்விட்டனர் என்றும், அவர்களில் 24 பேர் மூப்பர்களாய், கிரீடங்களோடு சிங்காசனங்களில் இருக்கிறார்கள் என்றும் அறிகிறோம். வெளி.5:18 ன்படி இவர்கள் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள்; ஆசாரிய வெண்ணங்கி தரித்து ஆசாரிய ஊழியம் செய்கிறார்கள் (see 1 பேது.5:9) என்பதால், இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட சபை மூப்பர்கள் என்று திட்டமிட்டுச் சொல்லலாம். 24 என்பது, ஆசாரியத்துவ

முறைமைகளுக்கான எண்ணிக்கை என, 1 நாளா. 24:1-19; யாத்.19:5,6ல் காணலாம். தாவீது, ஆசாரியர்களை பவுசு பவுசுகளாக பிரித்தபோது, 24 தலைவர்களின் கீழ் அந்தக் குடும்பங்கள் ஆயின. அந்த 24 தலைவர்களும் ஆசாரியத்துவ முறைமைக்குட்பட்ட அனைவருக்குமே பிரதிநிதிகளானார்கள். அதுபோல, இங்கே பரலோகில் காணும் மூப்பர்களும் பழைய, புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களாகிய ஆசாரியத்துவ பிரதிநிதிகளுக்கு ஒப்பாவார்கள். அதாவது பழைய ஏற்பாட்டில் வரும் 12 கோத்திரங்களையும், ஆட்டுக்குட்டியானவரின் 12 அப்போஸ்தலர்களையும் சேர்த்து 24 பேர்கள் மூப்பர் எனப்படுவர். இது வெளி. 21:10-14ல் உள்ள புதிய எருசலேமின் அஸ்திபாரக்காரர்களாலும், வாசல்களாலும் மேலும் உறுதிப்படும். மேலும், இந்த மூப்பர்கள் நம்மைப்போல் மனிதப்பிறவிகள் தான் என்று வெளி. 5:5; 7:13 போன்ற வசனங்களில் வரும் "Gender" உறுதிப்படுத்துகிறது. மட்டுமல்ல சபையாருக்கு கிரீடங்களும், சிங்காசனங்களும், வெண் வஸ்திரங்களும் கொடுக்கப்படும் என்று வெளி.2:10; 5,18, சொல்வதால், இவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட சபையாருக்கு மூப்பர்கள் என்று உறுதிப்படுகிறது. இவர்கள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, உபத்திரவ கால பரிசுத்தவான்கள் மற்றும் 1,44,000 பேருக்கும் மூப்பர்களாவார்கள்.

வெளி.4:5ன் படி தேவன் அமர்ந்திருப்பது, கிருபையின் சிங்காசனமல்ல; நியாயத்தீர்ப்பின் சிங்காசனம். அதனால்தான் மின்னல்களும், இடி முழக்கங்களும், சத்தங்களும் புறப்பட்டன. இதே வசனத்தில் பரிசுத்த ஆவியானவர் இருப்பதாய் காட்டப்பட்டுள்ளதால், (தேவனுடைய 7 ஆவிகளாகிய 7 அக்கினி தீபங்கள்), பரிசுத்த ஆவியானவர் மணவாட்டியாகிய சபையை மணவாளனிடம் கொண்டு சென்றிருக்கிறார் என்று அறியலாம். சபை பூமியில் இல்லாததால்தான், பூமியில் ஆக்கினைத் தீர்ப்புதர, மனுஷகுமாரன் நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்தில் விற்றிருக்கிறார் என்று அறியலாம். சிங்காசனத்தின் முன் கண்ணாடிக் கடல் காணப்படுகின்றது. வெறுமனே காணப்படும் இந்த கண்ணாடிக்கடல், வெளி 15:2,3ல் அக்கினியோடு, உபத்திரவ கால இரத்த சாட்சிகளால் நிரப்பப்பட்டதாய் மாறுகின்றது. இது சாலமோன் தேவாலயத்தின் முன்பு கட்டப்பட்ட வெண்கலக் கடல் போன்ற தொட்டி எனலாம். இங்கே காணப்படுகின்ற,

1. **பரலோக சிங்காசனம்** மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும்

2. 24 மூப்பர் இருக்கும் பகுதி, தூபவர்க்கம் எழும்பும் மேடை, ஏழு அக்கினி துபங்கள் கொண்ட பகுதி **பரிசுத்தஸ்தலத்திற்கும்.**

3. கண்ணாடிக்கடலும், பலிபீடமும் உள்ள பகுதி **பிரகாரத்திற்கும்** ஒப்பிடும்படியாய் உள்ளது. சிங்காசனத்தை சூழ நான்கு ஜீவன்கள் இருக்கின்றன. (வெளி.4:6) யார் இவர்கள்?

**நான்கு ஜீவன்கள்:-** இந்த அதிகாரத்தில் வரும் ஜீவன்களும், வெளி11,13,17ல் வரும் மிருகமும் வித்தியாசமானவை. இவைகளுக்கு "zoon" என்றும், அந்த மிலேச்சத்தனமான மிருகத்திற்கு "THERION" என்றும் மூலபாஷையில் உள்ளது. வெளி.5:10ன்படி இந்த ஜீவன்கள் தேவதூதர்கள் அல்ல என்றும், 24 மூப்பர்களோடு சேர்ந்தவர்கள் அல்ல எனறும் அறியலாம். முதன் முதலாய் வேதத்தில் இத்தகைய ஜீவன்களை, கேருபீன்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி.3:24); அவைகள் பாதுகாவலுக்காய் வைக்கப்பட்டவை. யாத்.25:10-22ல், மகா பரிசுத்த ஸ்தலத்தில் இரண்டு கேரூபீன்கள், கிருபாசனத்தை காவல்புரிய வைத்ததாக அறிகிறோம். ஏசா.6:1-4ல் சேராபீன்கள் சிங்காசனத்துக்கு மேல் நின்றன; எசே.1-28ல் கேரூபீன்கள் சிங்காசனத்தை தாங்கிக் கொண்டிருந்தன. யோவான் சொல்லும் நான்கு ஜீவன்கள் சிங்காசனத்தின் மத்தியலும் சுற்றிலும் இருக்கின்றன (வெளி.4:9-11). எசேக்கியேல் கண்ட ஒவ்வொரு மிருகமும், நான்கு நான்கு முகங்களோடு கூடிய மனிதத்தோற்றம் தழுவியதான உருவமைப்பு கொண்டதாகும். (எசே.1:1-28; 10:1-22) ஆனால் யோவான் கண்ட ஜீவன்கள், நான்கு தனித்தனி மிருகங்களாய் உள்ளன. சிங்கம், காளை, மனுஷமுகம், கழுகுபோல உள்ளன. எசே.1:12ன்படி, சக்கரங்களின் மேல் செல்பவைகளாய், அவைகள் நான்கு செட்டைகளோடிருந்தன. தேவசிங்காசனத்தை எல்லா இடங்களும் சுமந்துகொண்டு பாதுகாவலாய் போகிறவர்களாய் இருந்தார்கள். ஆனால் இங்கே சக்கரம் இல்லை. ஏனெனில் இவைகள் உள்ள இடம் அசையாத பரலோகமல்லவா!

எண். 2ஐ வாசித்தால், நடுவிலே ஆசரிப்புக் கூடாரம் நிற்க, கிழக்குப்புறம் **சிங்க சின்னம்** அமைந்த கொடியோடு யூதாமுகாமும், மேற்குப்புறம் **காளை சின்னம்** அமைந்த கொடியோடு எப்பிராயீம் முகாமும், தெற்குப் புறம் **மனுஷ ரூபசின்னம்** அமைந்த கொடியோடு ரூபன் முகாமும், வடக்குப்புறம் **கழுகு சின்னம்** அமைந்த கொடியோடு தாண் முகாமும் நிற்பதைக் காணலாம். ஆக இவைகள், ஆசரிப்புக் கூடாரத்திற்கு "பாதுகாவலர்கள்" எனலாம். இதே 4 ரூபங்கள்

கொண்டவைதான், சிங்காசனத்தை சுற்றியிருந்ததால், இவைகளையும் "பாதுகாவலர்கள்" எனலாம். ஆனாலும், வெளி.5:8-14 வரை வாசித்தால், இந்த 4 ஜீவன்களும் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றும், தேவனால் ராஜாக்களும் ஆசாரியர்களுமாய் ஆக்கப்பட்டவர்கள் என்றும், பூமியிலே அரசாளுபவர்கள் என்றும் கணிக்க வாய்ப்புள்ளது. இப்படித்தான் 24 மூப்பர்களோடு சேர்ந்து தேவனைத் துதிக்கிறார்கள். இது சரியென்றால், இவர்கள் ஆதி.1:1,2ல் உள்ள பூமியில் வாழ்ந்த பரிசுத்தமுள்ள ஜீவராசிகள் என்றும், அந்த ஜீவராசிகள்தான் யோபுவின் காலத்தில் தேவ சந்நிதானத்தில் நின்ற தேவபுத்திரர்கள் என்றும் (யோபு1:6) சில வேதவல்லுநர்கள் கூறுகிறார்கள். ஆனாலும் வெளி.5:9,10ல் உள்ள ஜெபத்தில், எங்களை (us) என்பதை, "அவர்களை" என்றும் நாங்கள் (we) என்பதை, அவர்கள் என்றும், நான்கு ஜீவன்கள், 24 மூப்பர்களைப் பற்றித்தான் பாடுவதாக சில manuscriptகளில் இருக்கின்றன. எது எப்படியே, அந்த நான்கு ஜீவன்களும் "பாதுகாவலர்களா" அல்லது "இரட்சிக்கப்பட்ட ஜீவராசிகளா" என்பதை பரலோகம் போய்ப் பார்ப்போம் ஆமென்!

மேலும் இந்த 4ம் அதிகாரத்தில், சிங்காசனத்தில் வீற்றிருப்பவர் பிதாவாகிய தேவனென்பதற்கு வெளி.4:9,10 வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இயேசு கிறிஸ்து, மரித்தேன்! ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் (வெளி.1:18) என்பதால், "சாவாமையுள்ளவர்" "சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர்" பிதாவாகிய தேவன் என்பதால் (1 தீமோ.6:16; வெளி.4:9,10) சிங்காசனத்தில் வீற்றிருப்பவர் பிதாதான். மட்டுமல்ல... வெளி.4:1,2 ஐ வாசித்தால் எக்காள சத்தம் போல யோவானை அழைத்தவர் இயேசு என்பதால் சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்த ஒருவர் பிதாதான் என அறியலாம். பரலோக தரிசனம் கண்ட யோவான், வெளியிலும் அதையே காண்கிறான்.

❖ ❖ ❖

## 5ம் அதிகாரம்

இந்த அதிகாரம், "அன்றியும்" - "And" என்று ஆரம்பிப்பதால், இது அதிகாரம் 4ன் தொடர்ச்சியல்ல; 4ம் அதிகார தரிசனம் வேறு, 5ம் அதிகார தரிசனம் வேறு. (see ஆதி.1:1 & 1:2 - இடைவெளி) பரலோகத்தில் தேவனின் கையிலுள்ள 7 முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த

புத்தகத்தை திறக்கவும், முத்திரையை உடைக்கவும் ஒருவர் தேவையாகிறார். ஒருவரும் வராததால் யோவான் அழுகிறார். யூதாவின் சிங்கமும், தாவீதின் வேருமான இயேசு கிறிஸ்துவே அதற்காய் ஜெயங் கொண்டிருககிறார் என்று மூப்பர் ஒருவர் சொல்கிறார். சபை மூப்பர் இருப்பதால், சபை பரலோகம் போய்விட்டது என அறியலாம். அப்போதே ஆட்டுக்குட்டியானவர் புத்தகத்தை வாங்கினார் (வெளி.5:7 - இந்த வசனம், பிதாவும், இயேசுவும் இரண்டு ஆள் தத்துவம் என்பதை உணர்த்துகிறது).

உடனே நான்கு ஜீவன்களும், 24 மூப்பர்களும், இயேசுவுக்கு முன்பாக, விழுந்து வணங்கி, “பூமியிலே அரசாளுவோம்” என்ற புதுப்பாட்டையும் பாடினார்கள் (வெளி.5:8-10).

**இதிலிருந்து நாமறிகிறோம்:-**

1. இயேசு கிறிஸ்து ஸ்தோத்தரிக்கப்படத்தக்க மெய்யான தேவன்.
2. இந்த பூமியிலே, பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 24 மூப்பர்களடங்கிய சபையார் 1000 வருடம் ஆளுவார்கள். ஆமென், (See அப்.1:6; 15,17; வெளி.2:26,27; 11:15;20 3:21) தேவதூதர்களும், வானம் பூமியாவற்றிலுமுள்ள சிருஷ்டிகளும் துதித்தன. **இப்படிப்பட்டதான நிகழ்ச்சி நடக்க, அந்த புத்தகம் தான் என்ன? முத்தரிக்கப்பட்ட 7 முத்திரைதான் என்ன?** ஆவியானவர் சொல்லிக் கொடுப்பாராக!

எபே.1:13,14ஐ வாசியுங்கள் தேவனுக்கு சொந்தமாக்கப்பட்ட நாம் பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டுள்ளோம். எதற்கு? மீட்கப்படும் நாளுக்கென்று. ஆக நாமெல்லாம் சொந்தமாக்கப்பட்டாலும், விலைகொடுத்து வாங்கப்பட்டாலும், மீட்கப்பட வேண்டி உள்ளது. ரோ.8:22,23தான் (1 தெச.5:23) அந்த மீட்கப்படும் வேளை. “இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்” (லூக்.19:10). இழந்த நம்மைத் தேடினார்; இரட்சித்தார் ஆனாலும் மீட்கப்பட வேண்டிய ஒன்று உண்டு. அதுதான்... இந்த பூமியின் முழு சுதந்திரமும், சாவாமையும், நாம் விசுவாசத்தினாலே சிலவற்றைப் பெற்றும் முழுமையாய்ப் பெறாத காரியங்களாகும். இழக்கப்பட்ட சுதந்திரத்திற்கான அதிகாரப் பத்திரம் (Title Deed) - புத்தக சுருள் - இப்பொழுது தேவனுடைய கரத்திற்கு வந்துவிட்டது. அதைக் கொண்டு மீட்பு நடக்க, இன்னும் காலதாமதமாகிறது. ஆதாம் மூலம் இழந்து போனதை மீட்டெடுக்க, உடன்பங்காளியாய் இயேசு, பூமியில் மனிதனாய் பிறந்து, விலைக்கிரயம் கொடுத்து சிலுவையிலே மீட்புக்கானதை செய்து முடித்தார்

(1 பேது.1:18-20). ஆனாலும் அன்று விலைக்கு வாங்கினதை இன்னும் உரிமைப்படுத்திக் கொள்ளவில்லை. அந்த மீட்பின் நேரமும், கிரியையும், இந்த 5ம் அதிகாரத்தில்தான் வந்திருக்கிறது. இப்படிப்பட்டதான மீட்பு ரூத்.4:1-12ல் வருகின்றது. மேலும் எரே.32:6-12; லேவி 25:8-17ஐ வாசியுங்கள்.

**ஒருசிறிய விளக்கம்:-**

Redemption = மீட்பு (ரோ.3:24).

(1) GK பாஷையிலே Redemption க்கு Agorazo -To buy in the market (அடிமை மார்க்கெட்).

(2) Exagorazo -To buy & take out of the slave market.

(3) Lutroo - To loose or set free, Deliverence - Redemption.

(**குறிப்பு:-** பலி சம்பந்தமாய் "Redeem" என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் இல்லை. "Atonement" என்றுதான் உள்ளது).

இனி ஒவ்வொரு முத்திரையாய் உடைக்கப்படும். ஒரு முத்திரை உடைத்த உடனே அடுத்த முத்திரை வரை புத்தகச்சுருள் பிரிக்கப்பட்டு, ஏழு புத்தகச் சுருள்களும் ஒவ்வொன்றாய் வெளிக் கொணரப்படும். புத்தகச் சுருளில் என்ன உண்டு என்று, வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்படவில்லை. உடைக்கும் போது, பூமியிலும், பரலோகிலும் சம்பவிக்கும் காரியங்கள் மட்டுமே பின்வரும் அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

# 6ம் அதிகாரம்

வெளி 4 முதல் சபையானது இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு பரலோகில் இருக்கிறது என்றும், ஏழு முத்திரைகள் கொண்ட மீட்பின் பத்திரத்தை இயேசுவானவர் ஒவ்வொன்றாய் உடைக்கப் போகின்றார் என்றும் ஏற்கெனவே பார்த்தோம். ஒவ்வொரு முத்திரை உடைக்கும் போதும் பூமியிலே என்னென்ன காரியங்கள் நடக்கப் போகின்றன என்று இந்த அதிகாரம் விளக்குகின்றது. இரகசிய வருகையில் கைவிடப்பட்ட அனைவருக்கும் உலகத்தில் உபத்திரவமும், மகா உபத்திரவமும் உண்டு. கர்த்தரின் கோபாக்கினையும்

அத்தோடு இணைந்துவிடும். இந்த அதிகாரத்தைப் படிக்கும்முன்னே மத்.24ம் அதிகாரத்தில், எருசலேம் அழிவுக்கும், தேவனின் வருகைக்கும் உலகின் முடிவுக்கும் சொல்லப்படும் அடையாளங்களை வாசியுங்கள். வெளி. 6ம் மத்.24ம் ஒன்றையொன்று இணைந்தே காணப்படுகின்றன.

**முதல் முத்திரை உடைப்பு:-** பூமியில் அந்திகிறிஸ்து வெளிப்படுகின்றான். 2 தெச.2:7ன் படி அவன் வெளிப்பட தடைசெய்கிற, பரிசுத்த ஆவியோடு கூடிய சபை எடுக்கப்பட வேண்டுமல்லவா! ஆக, சபை பூமியில் இல்லாதபோது, அந்திகிறிஸ்துவாய் - அட்டகாசப் பேர் வழியாய் - அல்ல, தானி.11:21ல் வரும் அந்தியோகஸ் எபிபேன்ஸ்போல, முதலாம் நெப்போலியன் போல, சமாதானமாய் நுழைந்து, இஸ்ரேலருக்குள்ளே இச்சகம் பேசி, தன் ராஜ்யத்தை கூட்டிக் கொள்வான். விழுந்துபோன, நான்காம் உலக சாம்ராஜ்யமான பழைய ரோமப் பேரரசு, புத்துயிர் பெற்ற நிலையில் உலகில் தோன்றப்போகும் 10 கூட்டணி ராஜ்யங்களுக்கான தலைமையாய் (Revival Rome Kingdom) வெள்ளைக் குதிரை மேலுள்ள அம்புவீரனாய் வெளிப்படுவான். வெளி.13:1-8ல் சொல்லப்பட்ட மிருகமாய் $3^1/_2$ ஆண்டுகளுக்குள்ளேயே - அதன் இறுதியில் - பிசாசின் சத்துவம் கொண்டவனாய் மாறுவான்.

**2ம் முத்திரை உடைப்பு:-** அந்திகிறிஸ்துவின் ஆட்சி, பிசாசின் சத்துவத்தாலே ஆரம்பித்ததாலே யுத்தங்கள், மரணங்கள், கலகங்கள் எல்லாம் உச்சநிலை ஆகுமல்லவா! அதைத்தான் இரண்டாம் முத்திரை பரலோகில் உடைக்கும்போது, பூமியிலோ வரும் சிவப்புக்கு திரையிலுள்ளவன். நிறத்திற்கேற்றபடி, உலகம் சமாதானமின்றி, சஞ்சலமும், தவிப்பும், உயிர்ச்சேதமும் தீவிரித்தாடும் (see மத்.24:6,7).

**3ம் முத்திரை உடைப்பு:-** பூமியிலே, தொடர்ந்து பஞ்சம், பசி, பட்டினி காணப்படும். அதுதான் மூன்றாம் முத்திரை உடைக்கும் போது காணப்பட்ட, கறுப்புக் குதிரையின் மேலிருந்தவன். விலைவாசி விஷம்போல் ஏறிவிடும்; பொருளாதாரம் இருளாகும்; கறுப்பாகும். (See மத்.24:7).

**4ம் முத்திரை உடைப்பு:-** இப்போது, தரிசனத்தில் மங்கின நிறமுள்ள குதிரை வெளிப்படுகின்றது. இதன்மேல் ஏறியிருந்தவன் மரணம் என்றும் இவனோடு பாதாளமாகிய கல்லறையும் இணைந்தே வருகிறது. ஆக, யுத்தங்களாலும், கலவரங்களாலும் ஏற்பட்ட பஞ்சத்தின் விளைவால் நாட்டிலே ஜீரணிக்க முடியாத கொள்ளை நோய்கள் வந்து, பெரும்பாலானோர் மரித்துப் போவர் (see மத்.24:7,8).

**5ம் முத்திரை உடைப்பு:-** பலிபீடத்தின் கீழுள்ள, அதாவது பரதீசிலிலுள்ள, இரத்த சாட்சிகளின் ஆத்மாக்களைப் பார்க்கிறோம். சங். 35,55,59,94ல் உள்ளதுபோல, பழிவாங்க, அந்த ஆத்மாக்கள், தேவனிடம் கேட்பதால் (வெளி.6:9,10) அவர்கள் சபையாரல்ல - see அப்.7:60. (சபையார்தான் ஏற்கெனவே 24 மூப்பர்கள் தலைமையில் பரலோகில் இருக்கிறார்களே!) அந்திகிறிஸ்துவின் காலத்தில் இரத்தசாட்சியாய் மரித்த பரிசுத்தவான்கள் இவர்கள். (நம்முடைய நாட்களில் இரட்சிப்பின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்றது). இன்னும் உலகில் மீதமுள்ள இவர்களைப் போன்றவர்கள் அந்திகிறிஸ்துவின் மீதமுள்ள ஆட்சிக்காலத்திலே, இப்படியாய் இரத்தசாட்சி மரணத்திற்கேது வாவார்கள் என்று விளங்குகிறது (மத்.24:9-14).

**6ம் முத்திரை உடைப்பு:-** பூமியிலும் வானத்திலும் பௌதீக மாறுதல்கள் உண்டாகின்றன. அப்போது மக்கள் புலம்புவதைப் பாருங்கள் - வெளி.6:12-17. யாத்.10:21 23, மத்.27:45 போன்ற வசனங்களில் அந்தகாரம் உண்டானது போல நடக்கும். சகரி 14:1-7, ஏசா. 34:4ல் சொல்லப்பட்டது போல நடக்கும். கர்த்தரின் கோபாக்கினை நாள் அதுவே (வெளி.617; see மத்.24:29,30).

New Englandல், 19.5.70ம் நாள் முழுவதும் இருண்ட நாளாயிருந்தது. அது சூரிய கிரகண நாளுமல்ல. அன்று பறவைகளும், மிருகங்களும் தங்கள் கூடுகளுக்கு தானாகவே திரும்பின. பகலிலே நட்சத்திரங்களும் தோன்றின. அதேபோல், 13.11.1833ல் மாலை 3 மணிக்கு பெரிய வால் நட்சத்திரம் விழுந்தது; உலகமே அழியுமே என்ற பயமே இருந்தன. இப்படியாய், இதற்குமேலாய், பெருத்த, காணப்படாத - அதிசயங்கள், 6ம்முத்திரை உடைக்கும் கடைசி நாட்களில் நடக்கும்.

❖ ❖ ❖

# 7ம் அதிகாரம்

ஆறு முத்திரைகள் பரலோகில் உடைக்கப்படும் போது, பூமியில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தோம். ஏழாம் முத்திரை உடைக்கப்படும் முன்னே ஒருகாரியம் பூமியில் நடக்கப்போகிறது. அதுதான், தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரேலருக்கு முத்திரையிடுதல்; அந்திகிறிஸ்துவின் நாட்களில் அவனுக்கு உடன்படாத 1,44,000 இஸ்ரேலரை தேவன்

தனிமைப்படுத்தி, ஒதுக்கி வைப்பதாகும். ரோ.11:4-6ல் சொல்லப்பட்ட மீதியான பங்கில் இதுவும் ஒன்று (see also வெளி.12:14) ஆகாபின் காலத்தில், 7000 பேரை தேவன் ஒதுக்கி வைத்தது போலாகும் (1 ராஜா 19:18). விசுவாசிகளாகிய தமக்கு பரிசுத்து ஆவியினால் முத்திரை போடப்பட்டது போல (எபி.1:13,14) இவர்களுக்கு, பிதாவின் நாமத்தில் முத்திரை போடப்படுகின்றது. **பிதாவின் நாமத்தில் முத்திரை போடப்படும் இவர்கள் நிச்சயம் சபையார் அல்ல; சபையார்தான் ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்டனரே!** (1 தெச.4:16-18; 1 கொரி.15:51-57). கொலைகார காயீனுக்கு பாதுகாப்புக்காக அடையாளம் போட்டது போல! (ஆதி.4:15). இந்த 1,44,000 பேரிலும் முத்திரையிடுகிற தூதன், கிழக்கிலிருந்து வருகிறான். மல்.4:2ல் சொல்லப்பட்டது போல, இவர்கள் நீதியின் சூரியனை நோக்கி இருக்கிறார்கள் என அறியலாம். கர்த்தருடைய மகா பயங்கரமான கோபாக்கினை நாள் ஆரம்பமாகியிருக்கிறது; அந்திகிறிஸ்துவின் மகா உபத்திரவ காலம் தலை தூக்கப்போகிறது. இவைகளிலிருந்து பாதுகாப்புதான் இந்த முத்திரை அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்திலேயே போடப்படுகின்றது.

**யார் இந்த 1,44,000 பேர்:-** உலகத்திலுள்ள இஸ்ரேல் கோத்திரத்தார் எல்லோரையும் தேவனே கண்டு, கோத்திரத்திற்கு 12000 பேர் என்று சொல்லி, 1,44,000 பேர் முத்திரை போடப்படுகின்றனர். வெளி.7:5-7 வசனங்களில் சொல்லப்பட்ட 12 கோத்திரங்களில், தாண், எப்பிராயீம் என்ற இரு கோத்திரங்களும் இல்லை. அவைகளுக்குப் பதிலாக, லேவியும், யோசேப்பும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த இரு கோத்திரத்தாரும் ஏன் கைவிடப்பட்டனர்? உபா.29:18-21 ஐ வாசித்தால், துணிகரமாய் விக்ரக ஆராதனை தொடர்ந்து செய்பவனுக்கு சாபம் வரும்; அவன் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்கு குலைப்பார் என்று சொல்லியிருப்பதை அறிவோம். இரண்டாய்ப் பிரிந்த 10 கோத்திரமடங்கிய, இஸ்ரேல் சாம்ராஜ்யத்தாரோ, எருசலேமுக்கு ஆராதனைக்கு மக்களைப் போக விடாதபடிக்கு, தாணிலும், பெத்தேலிலும் கன்று குட்டிகளை உருவாக்கி, பலிசெலுத்த ஆரம்பித்ததினிமித்தம், அவர்கள் பெயர் தேவன் சொன்னபடியே, பாதுகாக்கும் கோத்திரத்திரர் லிஸ்டிலே இல்லாமல் ஆக்கிவிட்டார். இது நமக்கெல்லாம் ஒரு எச்சரிப்பு! ஆமென். இதனால் இந்த இரு கோத்திரத்தாரில் உள்ள மக்களெல்லாம், பாதுகாப்பின்றி, உபத்திரவப் பட வேண்டிவரும். ஒருவேளை, இவர்களுக்குள் மனமாற்றம் வந்திருக்கலாம் என்பதால்தான். 1000 வருட அரசாட்சியில் அவர்களுக்கு சுதந்திர வீதம் கொடுக்கிறார் நம் தேவன் என அறியலாம்

(see எசே.48:1-7) என்னே தேவ அன்பு! அவரால் முன் குறித்தவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ஒருநாளும் கைவிடப்படவே மாட்டார்கள். (மத்.28:20) அல்லேலூயா!

**பரலோக காட்சி:-** (வெளி.7:9-17). இந்த அதிகாரத்தில் இதுவரை பூமியிலே காட்சி; இனி பரலோகில் காட்சி. அதில் காணப்படுபவர்கள், இரத்தத்தால் தோய்த்தெடுக்கப்பட்டவர்கள் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் என்று வெளி. 7:14 சொல்கின்றது. சபையாருக்கும் உபத்திரவம் உள்ளது (யோ.16:33; அப்.14:22). ஆனால், சபையார், இந்த அந்திகிறிஸ்து கால உபத்திரவத்திலிருந்தும் தேவ கோபாக்கினையிலிருந்தும் தப்புவிக்கப் படுவார்கள் என்று வெளி.3:10; 2 பேது.2:9; 2 தெச.1:10 போன்ற வசனங்கள் சொல்வதாலும், இந்த மகா உபத்திரவம் இதுவரை காணாத ஒன்று என்றும் (மத்.24:21), அதுவும் இந்த உபத்திரவம் முடிந்தபின், சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியை கொடாதிருக்கும் என்பதாலும் (மத்.24:29; மாற்.13:24), இந்த உபத்திரவ காலத்திலிருந்து பரலோகம் வந்திருக்கும் இரத்த சாட்சிகள் சபையார் அல்ல, என்பது வெள்ளிடைமலை.

மேலும், இவர்கள் "Tribulation Period"ல் வந்தவர்கள் என்பதால், இவர்கள் "Salvation period"ஐ சார்ந்த சபையாரல்ல எனவும் அறியலாம். மொத்த உபத்திரவ காலம் 7 வருஷம் என்றும் (தானி. 9:27), அதிலே மகா உபத்திரவகாலம் இறுதி $3^1/_2$ வருஷம் என்றும் (எரே.30:7) அறிகிறோம். இந்த மகா உபத்திரவ காலம்பற்றி வெளிப்படுத்தல் அதிகாரம் 11 முதல் 18 வரை விளக்கப்பட்டுள்ளது. மேலும், New versionல், "வந்தவர்கள்" என்று இவர்களைப் போடாமல் (வெளி.7:14) "வருகிறவர்கள்." "வந்து கொண்டிருப்பவர்கள்" என்னும் கருத்திலுள்ள பதம் போடப்பட்டுள்ளது. இதனால், இவர்கள் 7 வருஷத்தின் எக்காலத்திலிருந்தும் வருகிறவர்களாய் இருக்கலாம். **ராஜ்யத்தின் சுவிசேஷத்தைக் கேட்டு இரட்சிக்கப் பட்டவர்கள் இவர்கள்.** மத்.24:14ன் படியான காலத்தவர்கள் இவர்கள். (கிறிஸ்தவ சபையே பழைய ஏற்பாட்டில் இல்லாததால், மத்.24,25 எல்லாமே இஸ்ரேல் மக்களுக்காக சொல்லப்பட்டது என்றும், அதிலே சொல்லப்பட்ட வருகை எல்லாம், இஸ்ரேலருக்கான 2ம் வருகை - பகிரங்க வருகை எனலாம். (மத்.24:31; எபி.9:27,28) **அதனால்தான் வெண் வஸ்திரம் தரித்துள்ளனர்.** இவர்கள் நிச்சயமாய் சபையார் அல்ல என்றும், சபையார்தான் உபத்திரவ காலத்திற்கு முன்பே எடுத்துக்கொள்ளப் பட்டாயிற்றே என்றும் மறுபடியும் உறுதியிடுகிறேன்.

இவர்களோடு, நமது 24 மூப்பர்களும், நான்கு ஜீவன்களும், தூதர்களும் சேர்ந்து சிங்காசனத்திற்கு முன்பாக ஆராதிப்பதால், இந்த நிகழ்ச்சி பரலோகில்தான் என உறுதியிடுகிறேன். வெளி.7:15 ன்படி இரவும் பகலும் ஆலயத்தில் சேவிப்பார்கள் என்று இருப்பதால், பரலோகில் இரவும் பகலும் கிடையாது என்று சொல்லி, இந்த நிகழ்ச்சி 1000 வருட அரசாட்சியில் நடப்பதாக சிலர் நிதானிக்கிறார்கள். அது தவறு. ஏனெனில் பரலோகில் ஆலயம் இருக்கிறது என்பது உண்மை (வெளி.11:19; 15:5-8; 16:1). மேலும் வெளி.15:16ல் சொல்லப்பட்டவைகள் பரலோகத்தோடு சம்பந்தப்பட்டவைகள் என்றும் அறியலாம். மேலும், கர்த்தரே வெளிச்சமானதால், நாள் கணக்கே கிடையாது (வெளி. 21:23). இரவும் பகலும் எனப் போடப்பட்டது, இடைவிடாமல் நித்தியம் நித்தியமாய், என்றென்றும் என்று அர்த்தமாகும். இப்படிப்பட்டதான கூட்டத்தைக் காட்டியதின் நோக்கமே, இனிவரப்போகும் அதிகாரங்களில், மகா உபத்திரவங்கள் நடக்கப்போகின்றது என்பதை உணர்த்தத்தான் என்றும் யூகிக்கலாம்.

❖ ❖ ❖

# 8ம் அதிகாரம்

பரலோகிலே 6 முத்திரைகள் உடைக்கும்போது, பூமியில் நடக்கப்போகும் ஆக்கினைகளைப் பார்த்தோம். ஏழாம் முத்திரையை உடைக்கும்போதோ பரலோகிலே அரைமணிநேரம் அமைதி ஏற்பட்டதாம். ஏன்? புலி பதுங்குவது பாய்வதற்குத்தானே! இந்த அமைதி, வரப்போகும் கோபாக்கினை மிகப் பயங்கரமானதாய் இருக்கப் போவதாய் காட்டுகிறது. 7வது முத்திரை உடைத்த உடனே, 7 எக்காளங்கள் ஊதப்படப் போகின்றது. ஏழாவது எக்காளம் ஊதும் போது, ஏழு கலசங்கள் ஏழு கோபாக்கினைகள் ஊற்றப்படப் போகின்றது. இவைகள் ஒன்றையொன்று தொடர்ந்து வருகின்றன. வாண வேடிக்கையில் ஒரு வாணம், வானில்போய் ஏழு பொறிகளாய் வெடிக்கும். அந்த ஏழாவது பொறி, மேலும் 7 பொறிகளாய் வெடிக்கும். இப்படியே தொடர்ந்து வெடித்துக் கொண்டு இருக்கும். இப்படிப்போல, 7வது முத்திரை, தொடர்ந்து வரப்போகும் சம்பவங்களைத் தொடர்வதாய் வரப்போகிறது.

பரலோக அமைதிக்குப்பின்னே 7 எக்காலங்கள் ஊதப்போகின்ற 7 தூதர்கள் வருகின்றனர். எக்காளம் என்றாலே, பொதுவாக யுத்தத்திற்கான

ஆயத்தம் என்றே அறியலாம். எக்காளம் ஊதுமுன்னே, வேறொரு தூதன் தூபம் காட்டும் பொற்கலசம் பிடித்து நிற்கிறான். "தூபம்" என்றாலே, பரிசுத்தவான்களின் ஜெபம் என நாமறிவோம் (see வெளி.6:9,10) அவனுக்கு சகல பரிசுத்தவான்களின் ஜெபங்களோடும் தூபம் காட்டும்படி, மிகுந்த தூபவர்க்கம் கொடுக்கப்பட்டது. இந்த பரிசுத்தவான்கள் யார்? இவர்களின் ஜெபம் என்ன? பலிபீடத்து நெருப்பினால் தூபக் கலசத்தை நிரப்பி, தூதன் பூமியில் கொட்டிய உடனே, சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின என்பதைப் பார்க்கும்போது, இந்த பரிசுத்தவான்களின் ஜெபம், "சீக்கிரத்தில் விடுதலை வேண்டும்" என்று வெளி.6:9,10ல் சொல்லப்பட்டது போல இருக்கும். எனவே, அப்படிப்பட்டோர் உபத்திரவ காலத்தில் பரலோகம் வந்து கொண்டிருக்கிற பரிசுத்தவான்களாக இருக்கலாம். பரலோக அமைதியை குலைத்து, சத்தங்களும், மின்னல்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும் பூமியின்மேல் ஏற்பட்டபடியே, 7வது எக்காளம் ஊதப்படும்போதும், 7வது கலசம் கொட்டப்படும் போதும் நடக்கும் (வெளி.1:19;16:18). இதனால் இம்மூன்றும் தொடர்ந்து ஒரே காலத்தில் நடப்பவை என்று அறிவோம்.,

**முதலாம் எக்காளம்:-** இது ஊதப்படும்போது, இரத்தங் கலந்த கன்மலையும், அக்கினியும் உண்டாகி, பூமியிலே கொட்டப்படும். அதனால் மரங்களில் மூன்றில் ஒருபங்கு வெந்து போயிற்று; பசும்புல்லெல்லாம் எரிந்து போயிற்று. யோவேல் 2:31ல் சொல்லப்பட்டது நடக்கிறது. இந்த எக்காளச் செயல்பாடு 7ம் எகிப்திய வாதைக்கு ஒப்பாயுள்ளது (யாத்.9:22-26).

**2ம் எக்காளம்:-** ஊதின உடனே, எரிகோள மலையே சமுத்திரத்தில் போடப்பட்டது. இதனால் சமுத்திரம், மூன்றிலொரு பங்கு இரத்தமாயிற்று. இது எகிப்திய முதல் வாதை போலுள்ளது (யாத்.7:19-21).

**3ம் எக்காளம்:-** 3ம் எக்காள தூதன் ஊதும்போது, ஒரு பெரிய எட்டி நட்சத்திரம், வானிலிருந்து வந்து, ஆறுகள், நீரூற்றுகள் மேல் விழுந்ததினால், மூன்றிலொரு பங்கு தண்ணீர் எட்டியைப்போல் கசப்பானது. அதனால் அநேகர் மரித்துப் போனார்கள்.

**4ம் எக்காளம்:-** ஊதும்போது, ஏற்கெனவே 6வது முத்திரை உடைப்பின்போது ஏற்பட்ட உலகின் பௌதீக மாறுதல்கள் உண்டாகும் (வெளி.8:12). லூக்.21:25-28ஐ வாசியுங்கள்.

இன்னும் மூன்று எக்காளம் ஊதவேண்டியிருக்கிறது. வேறொரு தூதன், இனி ஊதப்போகும் மூன்று எக்காள சத்தத்தின்போது, பூமியில் மகாபயங்கரமான ஆபத்து வரும் என்றும், பூமியிலுள்ளோருக்கு ஐயோ என்றும், பறைசாற்றுகிறான். இதனால், இனி மகாப்பயங்கரமாய் தேவனின் கோபாக்கினை வெளிப்படப்போகிறது என அறியலாம். அந்த நாள் மகாகொடிய நாள்! அந்த நாட்களில் நாம் இல்லாதபடிக்கு, இரகசிய வருகையிலே எடுத்துக்கொள்ளப்பட ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்கு வோம்!! இயேசு சீக்கிரம் வருகிறார்.

❖ ❖ ❖

# 9ம் அதிகாரம் (இரண்டு ஆபத்துகள்)

**முதலாம் ஆபத்து:-** 5ம் தூதன் 5ம் எக்காளம் ஊதும்போது, வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் பூமிக்கு வந்தது. இது யோபு.38:7ன் படி ஒருதேவதூதன். மேலும் வெளி.20:1-3ல் பாதாளக்குழிக்கு வருபவனும் தேவதூதனே என அறியலாம். இவன் பாதாளக்குழியை திறக்க வருகிறன்; அவனோ அடைக்க வருகிறான். இங்கே சொல்லப்படும் பாதாளக்குழியானது (Bottomless pit):-

1. அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலாகிய நரகம் (Hell) அல்ல; நரகம் இறுதி நியாயத் தீர்பபில்தானே வரும் (மத்.25:41).
2. யூதா,7; 2பேது.2:4 ல் சொல்லப்பட்ட விழுந்துபோன தூதர்களை கட்டி அடைத்து வைத்திருக்கும் அந்தகாரமும் அல்ல (Tartarus).
3. மரித்த பொல்லாத மனித ஆவிகள் இருக்கும் பாதாளமும் அல்ல (Hardes).

இதை அறியுமுன்னே, நமது பூமிக்கு 3 காலங்கள் உள்ளன என புரிய வேண்டும்.

1. ஆதாம் ஏவாளுக்கு முன்பிருந்த பூமி (ஆதி.1:1,2); ஜலத்தால் அழிந்த பூமி (2பேது.3:6).
2. ஆதாம் காலத்திலிருந்த நம்முடைய பூமி; நோவாவின் காலமும் தாண்டி, அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கும் பூமி (2 பேது.3:7; மல்.4:1; வெளி.20:7-9).
3. புதியவானம், புதிய பூமி (வெளி.21:1).

ஆதாமுக்கு முன்னிருந்த பூமியில் வாழ்ந்த பாவநிலையிலிருந்த ஜீவராசிகள், அந்த ஜலப்பிரளய அழிவின்போது சரீரமிழந்து (Disembodied), ஆவிகளாய் வைக்கப்பட்டுள்ள இடம்தான் இந்த பாதாளக்குழி என, வேதவல்லுநர்கள் கணிக்கிறார்கள். இந்த ஜீவ ராசிகளில் நல்ல நிலையிலிருந்தவர்கள் தான், யோபு 1:6; 2:1ல் உள்ள தேவபுத்திரர் என்றும், வெளி.4,5ல் உள்ள நான்கு ஜீவன்கள் என்றும் கணிக்கிறார்கள். இந்த பாதாளக்குழி திறக்கப்பட்டதும், பெருஞ்சூளையின் புகைபோல, புகை எழும்பி, சூரியனும் ஆகாயமும் இருளடையச் செய்தது. அதிலிருந்து வெட்டுக்கிளிகள் வந்தன. எகிப்தில் வந்த 8வது வாதை வெட்டுக்கிளிகள் போலல்ல இவைகள் (யாத்.10:2-20). அவைகள் வெட்டுக்கிளிகளாய் திரிந்தன, புல்பூண்டு சாப்பிட்டன. இவைகளின் உருவமோ, குதிரை, மனிதன், ஸ்திரி, சிங்கம் மற்றும் தேள் போன்றவைகளின், கூட்டிணைப்பாய் இருக்கின்றன. இவைகள் தாவர வஸ்துக்களை பட்சிக்காது. தேவனின் முத்திரை பதிக்கப்படாதவர்களை - அதாவது 1,44,000 பேர் அல்லாதவர்களை - சேதப்படுத்த, தேள், வெட்டுக்கிளி போல கொட்டுவதற்கு வருகின்றன. இவைகள் கொல்லமாட்டாது; வலியின் மிகுதியில் மக்கள் சாவைத் தேடினாலும் சாவு கிடைக்காது. யோபு 2:1-11, 30ல் சொல்லப்பட்ட குதிரை வீரர் சேனையும், இந்த வெட்டுக்கிளிகளுக்கு ஒப்பாயுள்ளது. இந்த தேள் - வெட்டுக்கிளிகளின் உபாதையை எந்த ஒரு தடுப்புச் சுவர் வைத்தும் தடுக்க முடியாது என்பதால், இவைகள் பாதாளக் குழியிலிருந்த அதன் தலைவனால் எழுப்பப்பட்ட ஆவிகளாய் இருக்க வேண்டும் என்று கணிக்கப்படுகிறது (see வெளி.9:10,11). இவைகளின் தலைவனின் பெயர் அபெத்தோன் (Heb); அப்பொல்லியோன் (GK) லூசிபர் போன்ற ஒருவகையான பொல்லாத ஆவிகளுக்குத் தலைவன். இந்த அதளபாதாளக் குழிக்குள்ளேயே, 1000 வருட ஆட்சியின்போது லூசிபரை அடைத்து வைக்கப் போவதால் (வெளி.20:1-3), ஒருவேளை இவன், லூசிபருக்கு கீழுள்ளவனா யிருக்கலாம் என்றும் எண்ணப்படுகின்றது. இந்த ஆவிகளின் வேதனை - ரோதனை - 5 மாதம் நடக்குமாம். சாதாரணமாய் வெட்டுக்கிளிகளின் காலம், மே முதல் செப்டம்பர் வரையிலான 5 மாதம் என நாம் அறிவோம். முதலாம் ஆபத்து இத்தோடு முடிந்தது.

**2ம் ஆபத்து:-** 5வது எக்காளம் ஊதும்போது முதலாம் ஆபத்து. 6வது எக்காளம் ஊதும்போது 2ம் ஆபத்து வருகிறது. ஆதி.2:14ல் உள்ள ஐபிராத்து நதிக்கரையிலிருந்துதான் சாத்தான், ஆதாம், ஏவாளைக்

கெடுத்தான் என்றும், பாபேல் கோபுரம் கட்டப்பட்டதும் அங்கிருந்து தானென்றும், பாபிலோனிய கள்ள உபதேசம் (Babylonian cults) என்றாலே ஐபிராத் நதி என்றும் வேத ஆராய்ச்சியாளர் போதிக்கின்றனர். இந்த ஐபிராத் நதியை கடந்து வந்ததால்தான் பிசாசின் "ஊர்" தேச ஆபிரகாம், "எபிரேயன்" என்று ஆனான் என வேதம் சொல்கின்றது. இந்த சாத்தானின் இருப்பிடமான, ஐபிராத் நதியண்டையிலே 4 தூதர்கள் கட்டப்பட்டுள்ளனர். இவர்கள் பிசாசின் ஆவிகள் அல்ல; எகிப்திலே தலைச்சன் பிள்ளைகளை கொல்ல வந்த சங்காரத் தூதன் போன்ற தேவனின் ஆவிகள். தங்கள் பணியை செய்யாதபடிக்கு அவர்கள் கட்டப்பட்டிருந்தவர்கள், இப்போது அவிழ்த்து விடப்படுகின்றனர். இந்த 4 பேரும் 20 கோடி குதிரைக்கு தலைவர்கள். இது அவர்களின், அபிரிமிதமான, அசாத்யமான, ஆச்சரியப்படத்தக்க வல்லமையைக் காட்டுகிறது. 2 ராஜா.2:11; 6-17; வெளி.19:14 போன்ற இடங்களில் வரும் சேனைகள் மற்றும் பூமியில் இருக்கும் எல்லா இராணுவங்களையும்விட வித்தியாசமானவையாகும். மேலும், குதிரையின் தலை சிங்கம்போலும், வாயில் அக்கினியும் புகையும் கிளம்புவது போலும், வால் பாம்பு போல மக்களை தீண்டுவது போலவும், சித்தரிக்கப்பட்டுள்ளது.

குதிரை வீரர்களும் இப்படியே சாத்தானின் தன்மையோடும் காணப்படுகிறார்கள். இந்தப் படையின் தாக்குதலால், பூமியில் மூன்றிலொரு பங்கு மக்கள் கொல்லப்படுகிறார்கள். கொல்லப்படாத மீதமுள்ள பொல்லாத கிரியைகளை உடைய மனிதர்களும் மனம் மாறவில்லை. இந்த 4 தூதர்களும், 1 மணி நேரத்திற்கும் 1 நாளுக்கும் 1 மாதத்திற்கும் 1 வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டவர்கள். இந்த 2ம் ஆபத்தை எவ்வளவு நேரத்திலும். இவர்களால் செய்து காட்ட முடியும் இவர்களுடைய செயல்கள் யாருடைய கண்களுக்கும் புலனாகாது; யாராலும் தடுக்கவும் முடியாது. அந்தோ! பயங்கரம்! அந்த மகா கொடிய நாள் நமக்கில்லை. அல்லேலூயா! இரண்டாம் ஆபத்து இன்னும் முடியவில்லை.

❖ ❖ ❖

# 10ம் அதிகாரம்

2ம் ஆபத்து முடியுமுன்னே, 4 காரியங்கள் இங்கே விளக்கப்பட்டிருக்கிறது.

**1. பலமுள்ள தூதன் :-**

இந்த தூதன், மேகத்தால் சூழப்பட்டவர்; சிரசின்மேல் வானவில்; முகம் சூரியன் போல; கால்கள் அக்கினி ஸ்தம்பம் இவைகளை வைத்து இவர் இயேசு அன்று அறியலாம். மேலும் சிங்கம் ஆர்ப்பரிப்பது போல இவர் ஆர்ப்பரிப்பதால், இது யூதா சிங்கம்தான் எனலாம் (வெளி.10:3; 5:5). மட்டுமல்ல. வெளி.1:12-16ல் சொல்லப்பட்ட நியாயாதிபதி இயேசு கிறிஸ்துவையும், இந்த தூதனையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த தூதன் இயேசு என்றே சொல்லலாம். வலது பாதம் சமுத்திரத்திலும், இடது பாதம் பூமியிலும் வைத்து, இனி காலம் செல்லாது என்று திட்டமாய்ச் சொல்கிறார். பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தேவதூதன் என்றே இயேசு அழைக்கப்பட்டிருக்கிறார் என்பதை நினைவு கூறலாம் (யாத்.3:2-18). "அவன்" (வெளி.10:1) என்று சொல்லப்பட்டிருப்பதால், இவர் இயேசு இல்லையா? ஏசா.22:22ல் "அவன்" என்று எழுதப்படவில்லையா? தானி.9:27ல் "அவர்" என்று அந்திகிறிஸ்துவை எழுதவில்லையா? இந்த தூதன் மூலமாய் பலகாரியங்கள் வெளிப்படுத்தப்பட்டவைகளைப் பார்த்தால், இந்த பலமுள்ள தூதன் இயேசு என்றே உறுதியிட்டுக் கூறமுடியும்.

**2. ஏழு இடி முழக்கம்:-**

கெர்ஜிக்கிற சிங்கம்போல பலமுள்ள தூதனாகிய இயேசு மகாசத்தமாய் ஆர்ப்பரித்தபோது 7 இடிமுழக்கங்கள் சத்தமிட்டு முழங்கின. அந்த சத்தங்களின் வார்த்தைகளை, யோவான் எழுத ஆரம்பிக்கும்போது எழுதாமல் முத்திரைபோடு என்று ஒரு சத்தம் கேட்டான். இது குறித்து தானி. 12:4-9ஐ தியானியுங்கள். 7 இடிமுழக்கங்களின் தூதும் முடிவு காலத்துக்குரிய சத்தியமாதலால் அதை இப்போதே எழுதாதே என்று யோவான் தடுக்கப்பட்டான். அப்படியாய் முடிவு காலத்திற்குரிய காரியம்தான் என்ன? **அதுதான் தேவ இரகசியம்**.

**3. தேவ இரகசியம்:-**

பலமுள்ள தூதனாம். இயேசு சொன்னதன் கருத்துதான் விளக்கம் (வெளி.10:6). 6 தூதர்கள் ஏற்கெனவே ஆறு எக்காளங்களை ஊதிவிட்டனர். 7ம் தூதன் எக்காளம் ஊதுகிறபோதுதான், தேவ இரகசியம்

நிறைவேறுமாம். தேவ இரகசியம் என்றால் Mistry of God. 1 தீமோ.3:16ஐ வாசியுங்கள். இது கிறிஸ்துவைப் பற்றியதே இரகசியம். இது அந்திகிறிஸ்துவின் இரகசியமாகிய அக்கிரமத்தின் இரகசியத்திற்கு. (Mistry of Ininguity) எதிரானது (see 2 தெச.2:7). இயேசு கன்னியின் வயிற்றில் பிறப்பது, மரிப்பது, மரணத்தை ஜெயிப்பது, பரலோகம் சென்று மறுபடியும் வருவது, இஸ்ரேலருக்கு ஆளுகை கொடுப்பது, திரியேகம், இரத்தம் சிந்தித்தான் பாவமன்னிப்பா? பிசாசை அழிப்பது, பிசாசு, பாவம். இரட்சிப்பு, அந்திகிறிஸ்துவின் ஆளுகை போன்றவற்றை அறிவதும் தேவ இரகசியமே! மனிதன் படைக்கப்பட்டதன் மர்மமே தேவ இரகசியத்தில் ஒன்று. படைக்கப்பட்ட ஒரு மனிதனையும், சாத்தானையும் அழிக்காமல், புதிய எருசலேம். புதிய பூமி, நரகம் போன்றவற்றில் வைத்திருப்பதும் ஒரு இரகசியமே! ஆமென். 7ம் தூதன் மூலமாய் 7வது எக்காளம் ஊதும்போதுதான், பலகாரியங்கள் உலகில் தொடர்ந்து நடந்து எல்லாவற்றுக்கும் முடிவு உண்டாகும்; **தேவ இரகசியம் பரலோகில் உள்ள நமக்கும் முழுமையாய் விளங்கும்; பூமியில் வாழும் இஸ்ரேலருக்கும் பூமிக்கடுத்தவைகள் புரியும்.** இப்படியெல்லாம் அறிந்து, தெரிந்து, புரிந்தால்தான் அவரின் இரண்டாம் பகிரங்க வருகையிலே அவர்கள் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். பூமியில் நடக்கும் அப்போதைய காரியங்களாலேயே தேவ இரகசியம் முழுமையாய் புரிந்துவிடும். **இந்த 7ம் தூதன் என்பது மனிதனல்ல; தேவ ஊழியரல்ல; தேவதூதன், ஆமென்!**

வெளி. 1:20ல் சொல்லப்பட்ட ஏழு நட்சத்திரம் - ஏழு சபை தூதர்கள்தான், முழுமையான கிறிஸ்தவ சபையின் ஊழியக்காரர்களாகும். எக்காளம் ஊதுவதோ, முத்திரைகள் உடைப்பதோ கலசங்களை ஊற்றுவதோ, சபை ஊழியர்கள் அல்ல. அவர்கள் தேவதூதர்களே! (தேவ ஊழியர்கள் பூமியிலிருக்கிறார்கள்; நடக்கும் காரியங்களோ பரலோகிலிருந்து).

**சிறுபுத்தகம்:-**

இது, வெளி.5ல் உள்ள "Title Deed" - அதிகார உரிமப்பத்திரம் - அல்ல. பலமுள்ள தேவதூதனாகிய இயேசு சொன்னபடி, அதை சாப்பிடும்போது அது இனித்தது; வயிற்றுக்குள் செய்தி, ஆட்டுக்குட்டியானவரின் இறுதி வெற்றிச் செய்தி, தேவராஜ்யம் பூமியில் நிறுவப்போகும் செய்தி ஆகியவை அடங்கியிருந்ததால், அதை சாப்பிட்டவுடன் (வாசித்தவுடன்) மகிழ்ச்சியாக - இனிப்பாக இருந்தது.

தானியேலின் 70வது வார கடைசி 3½ ஆண்டுகளில் சம்பவிப்பவைகளைக் குறித்த தொகுப்பு இதில் இருந்திருக்கும். அதை ஆழமாய் சிந்தனை செய்து பார்த்தபோது, மிருகமாகிய அந்திகிறிஸ்துவினாலும், தேவனின் போக்கினையினாலும், உலகிற்கும் இஸ்ரலேருக்கும் ஏற்படப் போகிற மகா உபத்திரவங்களை யோவான் கிரகிக்க முற்பட்டபோது, அது அவனின் ஆத்மாவை கசப்பாக மாற்றி விட்டது. இந்த புத்தகத்தில்தான் "தேவ இரகசியம்" வெளிப்படுகிறது. இதைத்தான் யோவான் அறிந்து உணர்ந்து, ஒவ்வொன்றாய், கோர்வையாய் எழுத வேண்டுமென்று, பலமுள்ள தூதனாகிய இயேசு, வெளி.10:11ல் பணிக்கிறார். இதுதான் முடிவு காலத்திற்கடுத்த ஏழு இடிமுழக்கங்களின் செய்தி.

இதை வாசிக்கும் தேவ ஜனமே! இனி, யோவான் இனிப்பாய் மற்றும் கசப்பாய் ருசித்து உணர்ந்த சம்பவங்களை, முடிவுகால நிகழ்வுகளை, 11ம் அதிகாரம் முதல், தான் 7 இடிமுழக்கம் மூலம் கேட்டபடியாய் இல்லாமல், ருசித்து உணர்ந்தபடியே எழுதியிருப்பதை ஆவியானவரின் ஒத்தாசையோடு பார்ப்போம். கேட்ட இடிமுழக்க சத்தத் செய்தியை எழுதியிருந்தாலும், அதிலே சில விடுபட வாய்ப்புள்ளதால் எழுத வேண்டாமென்று சொல்லி, அவரே சிறுபுத்தகத்தை கொடுத்து, புரிந்துகொண்டு, நமக்கு முழுமையாய் வெளிப்படுத்த கட்டளையிட்டார் (வெளி.10:11) அல்லேலூயா! இனி நாம் படிக்கப் போவது, இந்த இனிப்பும் கசப்பும்தான்; அதுதான் கடைசி 3½ ஆண்டுகள் நிகழ்ச்சி - மகா உபத்திரவ கால யாக்கோபின் இக்கட்டுகால நிகழ்ச்சி. வெளி. 5 முதல் 10 வரை உள்ளது, முதல் 3½ ஆண்டு உபத்திரவ கால நிகழ்ச்சி.

❖ ❖ ❖

# 11ம் அதிகாரம்

வெளி.10ல் வந்த, பலமுள்ள தூதனாகிய இயேசு கிறிஸ்து, பூமியிலுள்ள தேவனுடைய ஆலயத்தை அளக்க யோவானுக்கு கட்டளையிடுகிறார். பத்முதீவில் யோவான் தரிசனங்களைப் பெற்றது கி.பி.95ல். அப்போது எருசலேம் ஆலயம் இல்லை; அது கி.பி. 70ல் தீத்துராயனால் அழிக்கப்பட்டுவிட்டது. அப்படியானால், இங்கு சொல்லப்படும் ஆலயம் எது? எருசலேமில், யூதர்கள் கட்டப்போகிற (அந்திகிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்து) ஆலயமாகும் இது.

இதில்தான் அந்திகிறிஸ்து தன்னைத்தான் தேவனென்று சொல்லி, தன்னை வணங்கச் செய்வான் (2 தெச.2:3,4) இது சபை எடுபட்டபிறகு கட்டப்போவதாகும். இதிலே, புறஜாதிகளுக்கென்று பிரகாரம் இருப்பதால், இது சாலமோன் கட்டிய தேவாலயம் போல் ஆசாரியர்களின் பிரகாரம், புறஜாதிகள் பிரகாரம் என்று இருக்கும். எருசலேம் ஆலயமும், நகரமும் 42 மாதங்கள் புறஜாதிகளால் மிதிக்கப்படும் - அதாவது $3^1/_2$ வருஷம். இது லூக்.21:24ன் படி, புறஜாதிகளின் காலம் முடிவு பெறும் வரைக்கும் இருக்கும்; அதாவது, அர்மகதோன் யுத்தம் (3ம் உலக மகாயுத்தம்) ஆரம்பிக்கும் வரைக்கும் இருக்கும். யூதரோடு செய்த உடன்படிக்கையை அந்திகிறிஸ்து முறித்துப் போட்டு (தானி.9:27), அவன் செய்கிற மகாஉபத்திரவ காலம் இது (எரே.30:7). வெளி.10ல் யோவான் இனிப்பாய்ப் புசித்து, வயிற்றில் கசப்பை உணர்ந்த அந்த சிறு புத்தகத்தில் வெளிப்படுத்தப்படும் தேவ இரகசியம் இந்த கடைசி $3^1/_2$ ஆண்டுகளில் வெளிப்படப்போவதை யோவான் எழுதுகிறான்.

**இரண்டு சாட்சிகள்:-** அந்த பலமுள்ள தூதனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டு சாட்சிகள் 1260 நாட்கள் - $3^1/_2$ வருடம் - தீர்க்கதரிசனம் சொல்வார்கள். வரப்போகும் ராஜ்யத்தின் சுவிசேஷம் இவர்களால் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும் (see மத்.24:14; வெளி.11:7) யார் இவர்கள்? இரட்டுடுத்தியவர்கள்; தீர்க்கதரிசனம் சொல்பவர்கள்; அற்புத அடையாளம் செய்பவர்கள். எனவே இவர்கள் மனிதர்கள் என்றே அறிகிறோம். வெளி.11:4ல் இரண்டு ஒலிவ மரங்களும், இரண்டு விளக்குத் தண்டுகளும் இவர்களே என்று உள்ளதால் இவர்கள் மனிதர்களா? இது ஒரு கேள்வி. சக.4:1-14ஐ வாசியுங்கள். பாபிலோனின் சிறையிருப்புக்குப் பின்பு, எருசலேமையும் அதன் ஆலயத்தையும் எடுப்பித்துக்கட்ட, ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்ட யூதாவின் தலைவன் செரூபாபேலையும், பிரதான ஆசாரியன் யோசுவாவையும் ஆகாய் 1:1, 14; சக.3:1-7; 4:6 போன்ற வசனங்களில் குறிப்பிட்டிருப்பதால் வெளி.11:4ல் உள்ள இவர்கள் மனிதர்களே!

**யார் இவர்கள்?** இவர்களை எலியாவும் ஏனோக்கும் என்று ஒருசிலரும், எலியாவும் மோசேயும் என்று ஒருசிலரும் கணிக்கின்றனர். ஏற்கெனவே மரித்துப்போன மோசே, எபி.9:27ன் படி மறுபடியும் மரிக்கமாட்டார் என்பதால், இதிலே மோசேயை ஏற்கமுடியாது என்று பலர் வாதிடுகின்றனர். அப்படிப் பார்த்தால், லாசரு 2ம்முறை மரிக்கவில்லையா? யவீருவின் மகள், நாயீன் விதவையின் மகள், சாறிபாத் விதவையின்

மகள், தொற்காள், ஐத்தகு போன்றோர் மறுபடியும், 2ம்முறை மரிக்கவில்லையா? சிந்தியுங்கள். எபி.9:27; ஆதி.3:19ன் படி மனிதன் மரித்தே ஆக வேண்டும் என்பதால், மரிக்காமல் எடுத்துக் கொள்ளப்பட்ட, எலியாவும் ஏனோக்கும் மறுபடியும் வந்து மரிப்பார்கள் என்று ஒருசிலர் வாதிடுகின்றனர். அப்படிப் பார்த்தால், இயேசுவின் இரகசிய வருகையிலே, நாமெல்லாரும் நித்திரையடையாமலே பரலோகம் எடுத்துக் கொள்ளப்படுவோமே அது எப்படி? (1 கொரி.15:51). சிந்தியுங்கள். ஆக, எபி.9:27 என்பது ஒரு பொதுவிதி. அந்த விதியிலும் (Rule) விதிவிலக்கு உண்டு. மல்.4:5,6ன் படி, இவர்களில் ஒருவர் எலியாதான் என்பதில் ஆட்சேபமே இல்லை. மேலும், மழை பெய்யாதபடிக்கு தீர்க்கதரிசனம் சொல்லி, வரப்போகும் $3^1/_2$ ஆண்டுகளும் வானத்தை அடைக்க அதிகாரம் இருந்ததால் 1 ராஜா.17:1ன் படி, இதிலே ஒருவர் எலியா என்பது புலனாகிறது.

அடுத்ததாய், தண்ணீரை இரத்தமாக மாற்றுதல், சகலவித வாதைகளால் வாதித்தல் போன்ற அதிகாரங்கள் (வெளி.11:6) மோசேக்கு இருந்ததாக அறிகிறோம். இது ஏனோக்குக்கு இல்லை. மேலும் மத்.17:3ல் மறுரூப மலையில் காட்சி கொடுப்பவர்கள் எலியாவும் மோசேயும்தான். இந்த தரிசனம், வருகைக்கு அடையாளமாய் காட்டப்பட்டது என்று பேதுரு சொல்கிறான் (2 பேது.1:16-19). இதை வைத்துப் பார்த்தால், இரகசிய வருகையில் உயிரோடே எடுத்துக் கொள்ளப்படும் சபைக்கு மாதிரியாய் மரிக்காத எலியாவையும், மரித்து உயிர்த்தெழுந்து எடுத்துக்கொள்ளப்படும் பரிசுத்தவான்களுக்கு மாதிரியாய், மரித்த மோசேயையும் கணிக்கலாம். எது எப்படியோ, இரண்டு தீர்க்கதரிசிகள் வரப்போகிறார்கள் அந்திகிறிஸ்துவின் முதல் $3^1/_2$ ஆண்டுகளுக்குப் பிறகு! இவர்கள் யாராயிருந்தாலும் கவலையில்லை. அவர்களின் சாட்சியுள்ள வார்த்தைகள், இஸ்ரேல் மக்களை மனமாறச் செய்யும் என நம்புவோம். வெளி.19:10ன் படி, இவர்களின் தீர்க்கதரிசன ஆவி, இயேசுவைப்பற்றிய சாட்சியாயிருக்கும் என்று நிதானிக்கலாம்.

அவர்கள் இருவரும் தங்களின் சாட்சி வார்த்தைகளை சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்து ஏறுகிற மிருகம், அதாவது பிசாசின் ஆவியை உடைய அந்திகிறிஸ்து, அவர்களை கொன்று போடுவான். லோத்தின் கால சோதோமின் மக்களுக்கு ஒத்ததாயும், எகிப்தில் அடிமையாயிருந்த, இஸ்ரேல் மக்கள் அன்று நடந்து கொண்ட தன்மைக்கு ஒத்ததாயும் இருக்கும், கடைசி கால மக்களின் நகரமொன்றில்

அவர்களின் உடல் கிடக்கும். இன்று டி.வி. இருப்பதால், அதை உலகத்தார் எல்லோரும் காண்பர். அந்த நகரம் எது? எசே.23:3,4 8,19 போன்ற வசனங்களின் அது எருசலேமாகத்தான் இருக்கும். எப்படியெனில், அந்த நகரத்திலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலறையப்பட்டார் என்ற வசனம் (வெளி.11:8) இதற்கு ஆதாரமாய் இருக்கிறது. $3^1/_2$ நாள் வரைக்கும், அழிவின் பாதையிலிருக்கும் மக்கள், சத்தியத்தை உணராமல், இதைக் குறித்து சந்தோஷப்பட்டு களிகூருவார்கள். $3^1/_2$ நாளுக்குப் பின்பு, தேவனிடத்திலிருந்து, ஜீவஆவி அவர்களுக்குள் வந்து, அவர்கள் உயிர்பெற்றதைக் கண்டு, மக்கள் மிகவும் பயந்தார்கள். வானத்திலிருந்து ஏறிவாருங்கள் என்று சத்தம் கேட்ட உடனே, அவர்கள் வானத்திற்கு ஏறினார்கள். அப்போது பூமி அதிர்ந்தது. நகரத்தில் 10ல் ஒருபங்கு இடிந்தது. 7000 பேர் அழிந்தனர். மீதியானவர்களாகிய தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரேலரோ, தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஆக, 6ம் எக்காளம் ஊத ஆரம்பித்தது முதல் (வெளி.9:13) இந்த இரண்டு சாட்சிகள் வரை நடந்தவை இரண்டாம் ஆபத்து (வெளி.11:14). இனி தொடர்ந்து அர்மெகதோன் யுத்தம் வரை சம்பவிப்பது மூன்றாம் ஆபத்தாகும்.

7ம் தூதன், 7ம் எக்காளம் ஊதுகிறான். இதன் தொனி, வெளி.20:3 வரையிலுள்ள அத்தனை சம்பவங்களையும் உள்ளடக்கி விடுகிறது; தேவ இரகசியம் வெளிப்படுகிறது. (see வெளி.10:6) கிறிஸ்து பூமியின் ராஜ்யங்களை எடுத்து ஆளப்போகிறார் என்ற சத்தம் வானத்திலிருந்து கேட்கிறது. உடனே யோவான் வானத்தைப் பார்க்கிறான். அப்போது பரலோகிலுள்ள 24 மூப்பர்களும், தேவன் செய்யப் போவதை, சொல்லிச் சொல்லி துதிக்கிறார்கள். பரலோகில் தேவாலயம் திறக்கப்படுகின்றது. பரலோக மாதிரியின்படிதான், ஆசரிப்புக் கூடாரத்தை மோசே கட்டினான் என்பதை முதலில் நாம் அறிய வேண்டும் (எபி.8:15). எனவேதான் அங்கே உடன்படிக்கை பெட்டி காணப்பட்டது. மேலும் மின்னல்களும், சத்தங்களும் இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல் மழையும் அப்போது உண்டாயின என்பது (வெளி.11:19), கடைசிகால மூன்றாம் ஆபத்து பயங்கர சம்பவங்களுக்கு முன்னோடியாய் உள்ளது என உணரலாம்.

❖ ❖ ❖

# 12ம் அதிகாரம்

11ம் அதிகார முடிவில் பரலோகத்தைப் பார்த்துக கொண்டிருந்த யோவானுக்கு, இங்கே இரண்டு அடையாளங்கள் காண்பிக்கப்படுகிறது. அடையாளம் என்பதால் நடக்கப்போகும் காரியத்தைப் பற்றியது அல்ல என்றும், உருவகப்பாட்டினால் ஏதோ ஒன்றைக் குறித்து வெளிப்படுத்துவது என்றும் முதலில் அறியவேண்டும்.

**முதல் அடையாளம்:-** சூரியனை அணிந்து, பாதங்களின் கீழே சந்திரனும், சிரசின் மேல் 12 நட்சத்திரங்களும் கொண்ட ஒரு ஸ்திரீ. இது கன்னி மரியாளைக் குறிக்கிறது என்று ஒருசிலர் கூறுகின்றனர்.

**இவள் கன்னி மரியாளா?** இந்த ஸ்திரியின் பிள்ளை வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்தான், அவள் வனாந்திரத்திற்கு ஓடிப்போனாள் என்று வெளி.12.5,6 சொல்கின்றது. அப்படியானால், மரியாளின் ஆண் பிள்ளை இயேசு, பரலோகம் போனபின்னேதான் மரியாள் ஓடிப்போனாளா? இல்லையே... வேதப்படி, மரியாளும் யோசேப்பும் குழந்தையோடு அல்லவா ஓடிப் போனார்கள். (மத்.2:12,15). அதுவும் வனாந்திரத்துக்கு ஓடவில்லை; செழிப்புள்ள எகிப்துக்கு அல்லவா ஓடினார்கள்! அதுவும் இங்கே சொல்லப்படும் ஸ்திரீ தன் பாதுகாப்புக்காக ஓடினாள் (வெளி.12:13-15); ஆனால் மரியாளோ தன் பாதுகாப்புக்காக அல்ல; குழந்தை இயேசுவின் பாதுகாப்புக்குத்தான் ஓடினார்கள். மேலும் வெளி.12:2ன் படி, மரியாள், பிரசவ வேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாளா? இல்லையே! (பிள்ளைபெற சத்திரம் கிடைக்கவில்லை; அவ்வளவுதான்) எனவே இந்த ஸ்திரி மரியாள் அல்ல என அறிகிறோம்.

**ஆண்பிள்ளை எது?** இந்தப் பிள்ளை என்பது, இரகசிய வருகையின்போது, எடுபட்டுப் போகும், உண்மையான ஆவிக்குரிய சபை என்று சிலர் சொல்கின்றனர். வெளி.12:5ல் இருப்புக் கோலால் ஆளுகை செய்யும் ஆண்பிள்ளை என்றிருப்பதால், வெளி.2:27ன்படி இது தீயத்ரா சபையைப் போன்ற ஆவிக்குரிய சபையைத்தான் குறிக்கிறது என்று சிலர் வாதிடுகிறார்கள். அப்படியானால் வெளி. 12:2ன்படி, ஆவிக்குரிய சபை, உபத்திரவ காலத்தில் பூமியில் இருக்க வேண்டுமே! சங். 2:9ஐ வாசித்தால், இருப்புக் கோலால் ஆள்பவர் இயேசுதான். அப்படியே, வெளி. 2:27ல் சொல்லப்படுவது, இருப்புக் கோலால் ஆளும் இயேசுவின் வல்லமையை சபையார் பெற்று, அவரோடுதான் ஆளுவார்கள் என்பதுதான் உண்மை. மேலும், மொத்த கிறிஸ்தவ சபை இந்த ஸ்திரி என்றும், அவள் பெற்ற

பிள்ளைதான் ஆவிக்குரிய சபை என்றும் வேதம் எங்குமே சொல்லவில்லை. இயேசு, உலகில் ஒரே சபையை, அதுவும் ஒரே ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையைத்தான் சிருஷ்டித்தார் (மத்.16:18; எபே.2:15). உலகில் உள்ளவைகள் எல்லாம் கிறிஸ்தவ சபைகள் என்ற பெயரில், பெயருக்கு இருக்கலாமே ஒழிய, அவைகள், உண்மையிலேயே, இயேசு உண்டாக்கியிருக்கிற ஆவிக்குரிய சபை அல்ல.

கிறிஸ்தவ சபையானது கன்னிப் பெண்ணால், இயேசுவோடு விவாகத்துக்கு நியமிக்கப்பட்ட நிலையில்தான் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது (2கொரி.11:2; எபே.5:25-27). ஆனால் இந்த ஸ்திரியோ, கர்ப்பவதியாயிருந்து, பிள்ளை பெறும்படி, வருத்தப்பட்டு அலறுகிறாள். இந்த நிலையில் நம் கிறிஸ்தவ சபை எப்போதாவது காணப்பட்டதா? இல்லையே! மட்டுமல்ல... கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக வேண்டிய சபை, தாயாக எங்குமே சித்தரிக்கப்படவில்லை.

மேலும், பரிபூரண பரிசுத்தவான்களைத்தான், ஆண்பிள்ளை என்று வெளி.12:5 சொல்கின்றது என்று வாதிடுவோருக்கு ஒரு கேள்வி:- கைவிடப்பட்ட, பரிபூரணமில்லாத மற்ற கிறிஸ்தவர்களுக்கு, அந்திகிறிஸ்துவின் நாட்களில் வெளி.12:5 ல் சொல்லப்பட்டபடி அடைக்கலமும், ஆகாரமும் கொடுப்பாரா? அப்படிக் கொடுத்தாரானால் கைவிடப்படுபவர்களும் பாக்கியவான்கள் என்று ஆகுமல்லவா! வருகைக்கு தினந்தோறும் காத்திருந்து மனைவியாகப் போகும் பாக்கியவான்கள் தான், முழுசபையென்று வேதம் கூறுவது பொய்யாகுமா? அப்படி பொய்யாகிவிட்டால், வருகையிலே சபையார் யாரும் கைவிடப்படக் கூடாது என்று நாம் பிரசங்கித்து ஆயத்தப்படுத்துவது வீணல்லவா? எனவே இந்த ஸ்திரீ கிறிஸ்தவ சபை அல்ல என அறிகிறோம்.

**அப்படியானால் யார் இந்த ஸ்திரியும், ஆண்பிள்ளையும்?**

யோசேப்பின் சொப்பனத்தில் சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் என்னை வணங்கின என்று அவன் கூறுவதும், இங்கே சொல்லப்பட்ட ஸ்திரியைப்பற்றிய வர்ணனையும், கிட்டத்தட்ட ஒன்றாகவே தோன்றுகின்றது. யோசேப்பும் ஒரு நட்சத்திரம் எனக் கணிக்கும்போது, இந்த ஸ்திரியாகிய சபை இஸ்ரேல் சபையைக் குறிப்பதாக அறிய வாய்ப்புண்டு. மட்டுமல்ல...

இஸ்ரேல் சபையை மணமான ஸ்திரியாக வேதம் சொல்கின்றது (ஏசா.54:1). இஸ்ரேல் சபையை "தாய்" என்றே வேதம் கூறுகின்றது. மாம்சத்தின்படி, கிறிஸ்துவும் இஸ்ரேலில் பிறந்தார் என்று பவுல்

கூறுகிறானே! (ரோ.9:4,5) ஏசா.9:6,7ன் படியேயும் இஸ்ரேலருக்கு இயேசு பிறந்தார் என அறியலாம். இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியாகிய இயேசு (ஆதி.3:15) பிறக்காதபடி ஆதிமுதலே, பிசாசினால் ஆயிரமாயிரம் தடைகள் வந்தன என்று வேதம் திட்டமும் தெளிவுமாய்ச் சொல்கின்றதே! இதைத்தான் வெளி.12:2ல் சொல்லப்பட்டுள்ளது. ஆக, இந்த ஸ்திரி இஸ்ரேல் சபையே என்று அறியலாம். மட்டுமல்ல.. இந்த ஸ்திரி வெளி.12:14ன் படி $3^1/_2$ வருஷம் போதிக்கத்தக்கதாய் (ஒருகாலம் ஒரு வருஷம் + அரைக்காலம் அரைவருஷம் + காலங்கள் 2 வருஷம் = $3^1/_2$ வருஷம் = 1260 நாள் = 42 மாதம்) வனாந்திரத்திலுள்ள இடத்திற்கு, கழுகுபோல் துரிதமாகவும் தீவிரமாகவும் போகிறாள் (see யாத்.19:4). மத்.24:15-22ல் சொன்னபடி போகிறாள். இஸ்ரேலருக்கு அன்று அடைக்கலப்பட்டணம் இருந்ததுபோல, உபத்திரவகாலத்திலும் அடைக்கல ஸ்தலம் கொடுக்கப்படுகிறது. இயேசுவின் இரத்தப்பழியை, இஸ்ரேலர்களே ஏற்றுக்கொண்டதால் (see.மத்.27:25), அதற்காய் தேவன் அவர்களை அழிக்காமல், அவர்களைப் பற்றிய அநாதி தீர்மானத்தின்படி, பரிசுத்த ஆவியின் பின்மாரியாலும் மூன்று தேவதூதர்களாலும், இரண்டு சாட்சிகளின் ராஜ்ய சுவிசேஷத்தாலும், 1,44,000 முத்திரையிடப்பட்ட இஸ்ரேலர்களாலும், மனம் மாறிய இஸ்ரேல் மக்கள்மேல், அன்பின் தேவன் அன்பாயிருந்து, ஆறுதலும், பாதுகாப்பும் தருகிறார். நியாயப் பிரமாணப்படி பிரதான ஆசாரியன் மரிக்கும்வரை, இரத்தப்பழி கொண்டவன் பாதுகாப்பாய் அடைக்கலப் பட்டணத்தில் இருப்பதுபோல, ஆவிக்குரிய பிரதான ஆசாரியராகிய இயேசு வரும்வரை, இவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். ஆக, இந்த ஸ்திரி இஸ்ரேல் சபையையும், ஆண்பிள்ளை இஸ்ரேலில் பிறந்த இயேசுவையும் குறிக்கும் என அறிகிறோம்.(see சங்.2:9).

மேலும், வெளி.12:17ல் உள்ள, “ஸ்திரியின் சந்ததியான மற்றவர்கள்” (Remnent), கிறிஸ்தவ சபையார் என்று சொல்வோரும் உண்டு. அப்படியானால், கிறிஸ்தவ சபை உபத்திரவ காலத்திற்குள் செல்லுமா? 4ம் அதிகாரத்தோடு, கிறிஸ்தவ சபையைப்பற்றிய பூலோக நிகழ்ச்சிகள் முடிந்தது அல்லவா! வெளி.3:10; 1தெச.1:10; 5:9 போன்ற பல வசனங்களை தியானியுங்கள். இந்த மீதமானவர்கள், இஸ்ரேலர்கள்தான். இவர்கள், எருசலேமில் இஸ்ரேல் தேசத்தில் வாழாமல், உலகமெங்குமுள்ள புறஜாதியார் தேசத்தில் வாழும், இரட்சிக்கப்பட்ட இஸ்ரேலர்கள். இவர்களுக்கும் உபத்திரவ காலத்தில் தேவன் பாதுகாப்பு தருகிறார்.

**இரண்டாம் அடையாளம்:-** சிவப்பான பெரிய வலுசர்ப்பம் - பிசாசு (வெளி.12:0). இதற்கு ஏழு தலை, ஏழுமுடி, பத்துக் கொம்பு இருந்தது. ஏழு என்பது முழுமையையும், தலை என்பது ஆளுகையையும், முடி என்பது வல்லமையையும் குறிக்கும். பிசாசை, முழுமையாய், வல்லமையுள்ள ஆளுகை செய்பவனாய் காட்டப்படுகிறது. மேலும், அவன் கொலை பாதகனாய் இருப்பதால், இரத்தம் போல் சிவப்பாய் இருக்கிறான். (யோ.8:44). 10 கொம்பு என்பது 10 ராஜ்யமாகும். இந்த 10 கொம்புள்ள மிருகம்தான் (Revival Rome Kingdom) முதல் $3^1/_2$ ஆண்டுகள், சமாதானக் காரணன்போல இஸ்ரேலரோடு உடன்படிக்கை செய்து (தானி.9:27) ஆண்டது. இந்த ஆளுகையில், மேலே சொல்லப்பட்ட பிசாசு செயல்படப் போகிறான். அப்போதுதான் பிசாசின் அவதாரமாய், அந்தி கிறிஸ்துவால் இஸ்ரேலருக்கு இந்த 10 ராஜாக்களடங்கிய ராஜாங்கம் (Revival Rome Kingdom) காணப்படும். இது கடைசி $3^1/_2$ ஆண்டுகளில் நடக்கும். நாம் தானி.10:13ல் பார்த்தபடி, பூலோக ராஜ்யங்களுக்கு ஏற்ற ராஜாங்கம், 2ம் வானத்திலுள்ள பிசாசின் வசம் உண்டல்லவா! அந்தப்படி, உலகத்திலே வரப்போகும் பயங்கரமான அந்திகிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு ஏற்றபடி, பெரிய வலுசர்ப்பம் - லூசிபர் பிசாசே, 10 கொம்புகள் உடையது போல காட்சியளிக்கிறது.

இந்தப் பிசாசுப்பற்றி ஏசா.14, எசே.28ல் எழுதப்பட்டுள்ளது. இவன் தேவனால் தள்ளப்பட்டபோது, தேவ தூதர்களில் மூன்றில் ஒரு பங்கை தன்னோடு இழுத்துக் கொண்டு வந்து, வான மண்டலத்தில் தாபரிக்கிறான் (எபே.6:12). இஸ்ரேல் சபை, இயேசுவை பெற்றெடுக்கக் கூடாது என்றும், பிறந்த பின்னும் ஊழியம் செய்யக்கூடாது என்றும் தொல்லை கொடுத்தான். ஆனாலும் இயேசு ஜெயித்தார், மரித்து உயிர்த்துப் பரலோகம் போனார். பிசாசு தோற்றுப் போனான். இதுதான் வெளி. 12:5 வரை உள்ளது. வெளி.12:6 "And" என்று ஆரம்பிப்பதால், வசனம் 5க்கும் 6க்கும் continuity இல்லையென்றும், இரண்டு சம்பவங்களும் வேறு வேறு என்றும், இரண்டு சம்பவங்களுக்கும் இடையில் "Gap" உள்ளது என்றும் அறியலாம் (see ஆதி.1:1 & 1:2 in English). இந்த Gapல்தான் மத்.16:18ன் படி கிறிஸ்தவ சபை உருவாகி வளர்ந்து, அந்திகிறிஸ்துவின் முதல் $3^1/_2$ ஆண்டு ஆட்சி ஆரம்பிக்கும் போது, இரகசிய வருகையில் எடுபட்டுப்போனது (see 2 தெச.2). அதன் பின்தான், மனம் மாறிய இஸ்ரேல் சபை, பிசாசின் அவதாரமாகும், அந்திகிறிஸ்துவிடமிருந்து தேவனால் பாதுகாக்கப்படும். ஆமென். அதன் கடைசி $3^1/_2$ ஆண்டின் காலத்தில்தான், வானமண்டலத்தில் மிகாவேலின் சேனைக்கும்,

சாத்தானின் சேனைக்கும் யுத்தமுண்டாகிறது. அப்போதுதான் சாத்தானும் அவன் தூதர்களும், இரண்டாம் வான மண்டலத்திலிருந்து பூமிக்கு தள்ளப்படுவார்கள். சாத்தானோடு ஏன் யுத்தம்? இயேசு கிறிஸ்து, இரகசிய வருகையில் சபையை எடுத்துக் கொள்ளவரும்போது யுத்தம் இல்லையே ஏன்? இரகசிய வருகையில் இயேசு, மனுஷகுமாரனாய்த்தான் வருகிறார்; மகிமை பொருந்திய ராஜாவாய் முடிசூட்டி பூலோகம் ஆள வருவதில்லை. ஏனென்றால், மணவாட்டியாகிய சபை பரலோகம் போன பிற்பாடுதான், பூமிக்குரிய ராஜாவாய் ஆவார்; அப்போதுதான் 1 பேது.2:9; வெளி.1:6ல் ராஜாக்கள் என்று சொல்லப்பட்ட நமக்கும் ராஜமுடி சூட்டப்படும். இப்படியாய் முடிசூட்டப்பட்டுத்தான் 24 மூப்பர்கள் பரலோகில் இருப்பதை வெளி.4:4 சொல்கின்றது. அல்லேலூயா! 1 தெச.4:16-18ல் வாசித்தால், சபை "ஆகாயத்தில்" (Heaven) எடுத்துக் கொள்ளப்படுமாம்! ஆகாயம் என்பது நமக்கு வெளிப்படுத்தப்பட்டபடி 3 வானங்கள் என்பதால், இயேசு எந்த வானத்தில் இருந்து கொண்டு நம்மை அழைக்கிறாரோ தெரியவில்லை. கடைசி மகா உபத்திரவ காலமுடிவில் இயேசு, நம்மோடு, ராஜாதி ராஜாவாய், கர்த்தாதி கர்த்தாவாய், பூமிக்கு வருவது பகிரங்க வருகை (மத்.24:29-31; சகரி14:1-4; யூதா.14,15 வெளி.19:16). ஆதாமிடமிருந்த ஆளுகையை (ஆதி.1:28) தான் பெற்றுக்கொண்டு (லூக்.4:6) உலகத்தின் அதிபதியாம் பிசாசின் ஆளுகை மாறிப்போய், தேவனின் ஆளுகை வரப்போகிறது என்ற உடனே (வெளி.12:10), வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் மிகாவேல் தூதனோடு யுத்தம் செய்கிறான் சாத்தான்.

அன்றைய தேதிவரை பரலோகம் போய் பரிசுத்தவான்களைப்பற்றி கோள்மூட்டியாவன், தாழத்தள்ளப்பட்டான், (வெளி.12:10), அவன் கோள் மூட்டுவதால், கிருபையும் இரக்கமும் உள்ள நம் தேவன், நமக்கு நன்மைகளை செய்ய முடிவதில்லை. எனவேதான் நம் நடை, உடை, பாவனை எல்லாமே சாட்சியாய் இருக்க வேண்டுமென்று, வேதம் சொல்லுகின்றது. பரலோக, தேவனுடைய ராஜ்யம் (1000 வருட ஆட்சி) பூமியிலே உண்டாகப் போகிறது என்ற சத்தம் அப்போது வானத்தில் உண்டாகும். மரணம் நேரிடுகிறதாயினும், ஜீவனையும் பாராமல், ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலும், சாட்சியின் வசனத்தினாலும் சாத்தானை ஜெயித்த நாம் (வெளி.12:11) இப்போது பரலோகில் இருக்கிறோம். நம்மைப்போல பூமியிலுள்ள பாதுகாக்கப்பட்ட இஸ்ரேலரும் வாழ வேண்டும். பிசாசு பூமியில் தள்ளப்பட்டதால், பரலோகிலுள்ள நாம் களிகூருவோம். ஆனால் பூமியிலிருப்பவர்களுக்கு ஐயோ!

வானமண்டலத்திலிருந்து கொண்டே தற்போது இவ்வளவு அட்டகாசம் செய்யும் சாத்தான், பூமியிலே தள்ளப்பட்ட பின்பு எவ்வளவு மூர்க்கத்தனமாய், எப்படியெல்லாம் தொல்லை கொடுப்பான் பாருங்கள்!

இயேசு பிறந்து, மரித்து உயிர்ந்தெழுந்து இரட்சிப்பை நல்கி பரலோகம்போய், மறுபடியும் ராஜ்யத்தை ஸ்தாபிக்க - அதுவும் இஸ்ரேலருக்கு சொல்லப்பட்ட ராஜ்யத்தைக் கொடுக்க (ஆதி.15:18-21; 2 சாமு. 7:16) வரப்போவதால், இயேசுவைப் பெற்றெடுத்த இஸ்ரேல் சபையை, வலுசர்ப்பம், மிருகமாகிய அந்திகிறிஸ்துவின் மூலமாய் துன்பப்படுத்தும். அப்போதுதான் மனந்திரும்பிய இஸ்ரேல் சபைக்கு அடைக்கலம் தருவார். இஸ்ரேல் சபையை அழிக்க அன்றைக்கு பார்வோன் சேனையோடு வந்து, செங்கடலிலே அழிந்துபோனது போல, பாம்பின் அவதாரமான அந்திகிறிஸ்துவின் சேனைகள், அடைக்கலத்திற்காக கழுகுபோல் பறக்கின்ற இஸ்ரேல் சபையாரின் பின்னே அழிக்கப் போகும் போது, அந்த சேனை வனாந்திரத்தின் மணற்புயலினால் அடிபட்டு, அமிழ்ந்து போகும். எனவே, அந்த இஸ்ரேல் சபையாரை விட்டுவிட்டு, பூமியிலே பலநாடுகளில் சிதறியிருக்கும், இஸ்ரேலின் சந்ததியான மற்ற விசுவாசிகளுடன் யுத்தம் பண்ண ஆரம்பிப்பான். அவனது அதிகார எல்லைக்குள் இருப்போர் அனைவருக்கும் இது நடக்கும்.

அந்திகிறிஸ்து, இஸ்ரேலருக்கு செய்யும் மகாஉபத்திரவ கால அட்டகாசங்களையும், தேவனின் கோபாக்கினையையும், இனிவரும் அதிகாரங்களில் வாசிப்போம்.

❖ ❖ ❖

# 13ம் அதிகாரம்

11ம் அதிகாரத்தில், (இஸ்ரேல் மக்கள் இனி எடுப்பித்துக் கட்டப்போகிற எருசலேம் ஆலயம்) இஸ்ரேலரின் ஆலயம் அளக்கப்பட்டு, அதன் அழிவும் சொல்லப்பட்டிருப்பதால், யாக்கோபின் இக்கட்டுக்காலம் (எரே.30:7), அதாவது உபத்திரவ காலத்தின் கடைசி $3\frac{1}{2}$ ஆண்டுகள் ஆரம்பித்துவிட்டது என அறிகிறோம். ஆரம்பத்தில் தானி.9:27ன் படி இஸ்ரேலரோடு உடன்படிக்கை செய்த மிருகமாகிய அந்திகிறிஸ்து (Revival Rome Kingdom), இந்த கடைசி $3\frac{1}{2}$ ஆண்டுகளில்தான், இஸ்ரேலருக்கு எதிராய்

எழும்புவான் என்பதை, 11 மற்றும் 12ம் அதிகாரத்தில் கண்டோம். இஸ்ரேலரும் அவன் யாரென்று இந்த காலகட்டத்தில்தான் முழுமையாய் உணர்வார்கள். இந்த அதிகாரத்தில், அந்திகிறிஸ்துவாகிய மிருகத்தையும், வேறொரு மிருகத்தையும் பற்றி விளக்கமாக சரித்திரப் பூர்வமாக எழுதப்பட்டுள்ளது.

**1. மிருகமாகிய அந்திகிறிஸ்து:-**

இது சமுத்திரத்திலிருந்து எழும்பி வருகிறது. "சமுத்திரம்" என்றால், "நாடுகள் - Nations" என்று பொருள். அதாவது, தேசங்களிலிருந்து வரப்போகிறது. அதற்கு 7 தலைகள், 10 முடிகள், 10 கொம்புகள் உள்ளன (வெளி.12:3ல் உள்ள சாத்தானின் அவதாரமே இது). 7 என்றால் முழுமையையும், தலைகள், ராஜ்யங்களையும் குறிக்கின்றன. அதாவது முழுமையான ராஜ்யமாக இருக்கிறது என எடுத்துக் கொளள்லாம். 7 தலைகள் என்பதை 7 மலைகள் என்று எடுத்துக் கொண்டால், மீண்டும் எழும்பப்போகும் Revival Rome kingdom மறுமலர்ச்சி ரோமராஜ்யம் என்றும் கணிக்கலாம். இதற்கு ஆதாரமாய் 10 கொம்புகள் - 10 ராஜாக்கள் - 10 நாடுகள் - இருப்பதால், நேபுகாத்நேச்சாரின் சிலையில் உள்ள 10 விரல்களும் (தானி.2), தானியேல் கண்ட 4ம் மிருகத்துக்கான தலைமேலுள்ள 10 கொம்புகளும் (தானி.7) நம் நினைவுக்கு வருகின்றன. 10 முடிகள் என்பது இந்த 10 ராஜாக்களுக்கும் ஆளுகை உரிமை உள்ளது என அறியலாம். 4ம் சாம்ராஜ்யமான ரோமிலிருந்து வருவதால் - தொடர்ச்சியாய் வருவதால், இது நிச்சயமாய் 10 நாடுகளடங்கிய மறுமலர்ச்சி ரோம ராஜ்யம்தான் எனலாம். மேலும், இந்த 10 ராஜாக்களான மிருகத்திற்கு, உலகம் முழுவதும் ஆளுகை இல்லை. இந்த 10 நாடுகளின்மேலும், இந்த ராஜாக்களை சார்ந்துள்ள ராஜாங்கங்களின் மேலும் அதிகாரம் உண்டு என கருதப்படுகிறது.

இந்த மிருகத்தின் தலைகளின்மேல் தூஷணமான நாமம் இருக்கிறது. (வெளி.13:1). அது என்ன என்று பலர் ஆராய்கின்றனர். போப்பின் தலைமுடியில், "Vicarious Filli Dei" என்ற இலத்தின் பாஷை, "கிறிஸ்துவுக்குப் பதிலாளி" என்ற அர்த்தத்தில் இருப்பதால், போப் தான் அந்த மிருகம் என்கின்றனர். மட்டுமல்ல... இந்த "Vicarious Filli Dei" என்ற நாமத்திற்கான கணித கூட்டலை வைத்துப் பார்த்தால் (Numerical) 666 வருவதால் அவர்தான் அந்திகிறிஸ்து என்கின்றனர். அப்படிப் பார்த்தால், கி.பி.598ல் உலகம் முழுவதுக்குமான கத்தோலிக்க சபைக்கான போப் ஆக அதிகாரம் பெற்றவர் இன்றுவரை உயிரோடில்லை.

அவருக்கு பின்னாலே எத்தனையோ போப்கள் எழும்பியிருக்கின்றனரே! அப்படியானால், அந்திகிறிஸ்து பலபேரா? கிறிஸ்து ஒருவர் என்றால், அந்திகிறிஸ்துவும் ஒருவனாகத்தானே இருக்க முடியும்! தேவன், காயீனுக்கும், 1,44,000 பேருக்கும், நமக்கும் நல்ல அடையாள மிட்டிருக்கிறார். அதை யாரும் இன்னதென்று அறியமுடியுமா? அப்படியே, அந்திகிறிஸ்துவுக்கு தூஷணமான நாமம் - அடையாளம், பிசாசு இட்டால், அதுவும் ஒருவருக்கும் தெரியாது அல்லவா! அந்த தூஷணமான நாமத்திற்கு ஏற்றபடி அவனின் செயல்பாடுகள் இருக்கலாம். மேலும் வெளி.17ல் வரும், ஸ்திரியைப் பற்றி படிக்கும்போது (மகாபாபிலோன்), இந்த அந்திகிறிஸ்து, போப் என்று சொல்வது தவறு என்று அறியலாம்.

இந்த மிருகம் சிறுத்தையைப் போலவும் கால்கள் கரடியின் கால்களைப் போலவும், வாய் சிங்கத்தைப் போலவும் இருப்பதால், இது மிகவும் கொடூரமானது என அறிகிறோம். இந்த 10 ராஜ்யத்துக்கு சாத்தான் தன் அதிகாரத்தையும், தன்பலத்தையும், சிங்காசனத்தையும் கொடுக்கிறான். இங்கே சொல்லப்பட்ட அந்தி கிறிஸ்துவின் ராஜாங்கம், 10 ராஜாக்களை உடையதாயிருக்கிறது. தானி. 7ன்படி, இந்த 10லிருந்து எழும்பும் சின்னக்கொம்புதான், சிங்கிள் ராஜாவாக பயங்கரமான அந்திகிறிஸ்துவின் நாமத்தில் எழும்பும் என்றும், அதற்கும் பிசாசானவன்தன் வல்லமையையும் அதிகாரத்தையும், சிங்காரத்தையும் கொடுப்பான் என்றும் அறிகிறோம். இந்த single ராஜா, பழைய வீழ்ந்துபோன 4வது ரோம சாம்ராஜ்யத்தின் மறுமலர்ச்சி ரோம ராஜ்யத்திலிருந்துதான் (Revival Rome kingdom) எழும்புவானன்றோ!

10 ராஜ்யமடங்கிய மிருகமாகிய அந்திகிறிஸ்துவின் தலைகளிலொன்று காயப்பட்டு, சாவுக்கேதுவாகி, சொஸ்தமாக்கப் பட்டிருக்கிறது என வெளி.13:3 சொல்கின்றது. கி.பி.168ல் ஆரம்பமான ரோம சாம்ராஜ்யம், கி.பி 364ல் கிழக்கு,மேற்கு என்று இரண்டாய்ப் பிரிந்தது. பிரிந்த கிழக்கித்திய ரோம ராஜ்யம், கி.பி.1453லும், மேற்கித்திய ரோமராஜ்யம் கி.பி. 476லும் வீழ்ந்து போயின. இதைத்தான் காயமென்று வேதவல்லுநர்கள் கூறுகிறார்கள். Imperial Form of Govt ceased. இப்படி காயப்பட்டு, சாவுக் கேதுவான அந்த ராஜ்யம் மறுபடியும் உயிர்பெற்று வருவதை - அதாவது Revival Rome Kingdom எழும்புவதை - பூமியிலுள்ளோர் எல்லாம் ஆச்சரியமாயப் பார்த்து, அதைப் பின்பற்றுவார்கள். The Imperial form will be restored over a federated empire of 10 kingdom and after that there will be a

single empire again. (NOTE :- நேபுகாத்நேச்சார் சிலையில் இரண்டு கால், பின் 10 விரல் - 10 ராஜா இருப்பதை சிந்தித்தால் இந்த ரோம சரித்திரம் புரிந்துவிடும்.)

அந்த மிருகமாகிய அந்தி கிறிஸ்துவைப் பின்பற்றும் மக்கள், அதற்கு, அப்படிப்பட்ட அதிகாரம் கொடுத்த பிசாசையும் வணங்குவார்கள். மிருகம் விநோதமாய் (Composite), விகற்பமாய் (mysterions), மகாபயங்கரமாய் (Terrible) இருப்பதால் மிருகத்தையும் வணங்குவார்கள். பெருமையானவைகளையும், தூஷணங்களையும் செய்ய, பேச, 42 மாதம் - $3^1/_2$ வருடம் பிசாசு இடங்கொடுக்கிறது. தேவனையும், தேவநாமத்தையும் பரலோகத்தையும் தூஷித்து, இஸ்ரேல் பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணுவான்; இப்போதுதான், இவர்களுடைய பொறுமையும் விசுவாசமும் வெளிப்படும். உலகம் உண்டாகும் முன்பே, மேசியா வந்து மனிதர்களுக்காய் இரத்தம் சிந்த தேவன் தீர்மானித்து, அப்போதே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாய் நம் வார்த்தையானவர் ஆக்கப்பட்டிருக்கிறார். அவருடைய ஜீவபுத்தகத்தில், பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அந்த மிருகத்தை வணங்குவார்கள் (வெளி.13:8).

**2. மிருகமாகிய கள்ள தீர்க்கதரிசி :- (வெளி.13:11)**

கடைசி நாட்களில், கள்ள கிறிஸ்துகளும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி வஞ்சிப்பார்கள் என்று இயேசு, மத்.24:24ல் சொன்னபடி, முதலில் எழும்பிய மிருகம் அந்திகிறிஸ்து என்றும், இந்த மிருகம் கள்ளதீர்க்கதரிசி என்றும் உணரலாம். Revival Rome kingdoom - மறுமலர்ச்சி ரோம ராஜ்யத்தில், 10ல் மூன்று, 3ல் ஒன்று என்று எழும்பப்போகும் பலமான அந்திகிறிஸ்துவின் காலத்தில்தான். அதாவது கடைசி $3^1/_2$ ஆண்டுகளில் இந்த மிருகமாகிய கள்ள தீர்க்கதரிசி எழும்பும் என்று நிதானிக்கப்படுகிறது. வெளி.16:13; 19:20; 20:10ல் வலுசர்ப்பம், மிருகம், கள்ளதீர்க்கதரிசி என்று இருப்பதை கவனியுங்கள். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று திரித்துவம் ஒரே தேவனில் இருப்பதுபோல, ஒரே பிசாசும், வலுசர்ப்பம், மிருகம், கள்ளதீர்க்கதரிசி என்று திரித்துவம் வைத்திருக்கிறானென்றும், "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற புத்தகத்தில், அடியேன் விளக்கி உள்ளேன். இந்த கள்ளதீர்க்கதரிசி என்ற மிருகம், பூமியிலிருந்து (பூமியென்றால் உலகமக்கள்) எழும்பி, ஆட்டுக்குட்டியானவர் போல் காட்சி தரும். ஆனால் இதின் பேச்சு, நடை, பாவனை எல்லாமே சாத்தான்தான். வெளி.5,6ல் ஆட்டுக்குட்டிக்கு 7 கொம்பு; இதற்கோ இரண்டு கொம்பு. இதை வைத்து,

இந்த மிருகத்திற்கு இயேசுவைப்போல முழுமையான ஆளத்துவம் இருக்காது என அறியலாம். இவனுக்கும், அந்திகிறிஸ்துவுக்கும் உள்ள தொடர்பு, பரிசுத்த ஆவியானவருக்கும், கிறிஸ்துவுக்குமுள்ள தொடர்புக்கு சமமாகி, இவன், அந்திகிறிஸ்துவை வணங்கும்படி செய்வான்.

அதற்காகவே, அந்திகிறிஸ்துவுக்கு ஒரு சுரூபம் பண்ண வேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லி செய்யப்படும். அந்த சுரூபம் பேசுமாம். அதை வணங்காதவர்களை கொலை செய்யுமாம் (see தானி.7:25); அப்படியாய் அந்த சுரூபத்துக்கு வல்லமையின் ஆவியைக் கொடுக்குமாம். என்னே ஆச்சரியம்! மட்டுமல்ல... எலியாவின் காலத்தில் பாகால் தீர்க்கதரிசிகளுக்கு அக்கினியை இறக்க முடியவில்லை; ஆனால் அந்திகிறிஸ்துவின் கடைசி காலத்தில்,அவனை உயர்த்திக் காட்டும் மிருகமாகிய கள்ளத்தீர்க்கதரிசி, அக்கினியையும் இறங்கப்பண்ணி, அற்புதங்களைச் செய்யும். இதைப்படித்த பிறகும், யார் யார் மூலமாகவோ நடக்கும் அற்புதங்களையும், அடையாளங்களையும், பிசாசு விரட்டலையும், தீர்க்கதரிசனங்களையும் கண்டு கிறிஸ்தவன் ஓடுவானா? எந்த ஆவி அவைகள் என்று சிந்திக்கமாட்டானா? இதை வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன்.

அந்த நாட்களில் உள்ள அத்தனை பேரையும், தங்கள் வலது கைகளிலோ நெற்றிகளிலோ, மிருகத்தின் முத்திரையாவது, மிருகத்தின் நாமத்தையாவது, மிருக நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ள வேண்டுமென்றும், தரிக்காதவர்கள் ஒன்றையும் விற்கவும், வாங்கவும் கூடாது என்றும் கள்ள தீர்க்கதரிசி செய்வானாம். (வெளி. 13:16-18). என்னே கொடுமை இது! இங்கே தரிப்பது, முத்திரை அல்லது நாமம் அல்லது இலக்கம் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் பலர், நாமத்தின் இலக்கமாகிய "666" தான் தரிப்பிக்கப்படும் என்று பாரம்பரியமாய் தவறாய் பிரசங்கிக்கிறார்கள். அந்த மிருகத்தின் இலக்கம் மனுஷனுடைய இலக்கமாம்; புத்தியுடையவன் கணக்குப் பார்க்க வேண்டுமாம்; அதிலே ஞானம் விளங்குமாம்; அந்த இலக்கம் "666" என்கிறது வேதம். மிருகமே இன்னும் வெளிப்படவில்லை. சபையானது, இரகசிய வருகையில் எடுபட்டால்தான் அந்திகிறிஸ்து வெளிப்படுவான் (2 தெச.2:6,7). அதற்குள்ளேயே பலர், அவனின் பெயரை அனுமானித்து 666 என்றும் கணக்கிட்டுப் பேசுகின்றனர்; அப்படி வருபவர்தான் அந்திகிறிஸ்து என்றே முடிவு கட்டுகின்றனர். இது மகா தவறு; இது பிசாசின் ஆவியின் வேலை. ஒருநாள் வரும்; இரகசிய வருகைக்குப்பின் தான்

வெளிப்படுவான். Computer, Beast, போப் தலைகிரீடத்தில் உள்ளது, 666 குறியோடு பிறக்கும் குழந்தை போன்றவற்றை யெல்லாம் வைத்து, அந்திகிறிஸ்து என்று பலர், சுயமாய் கணிக்கின்றனர். சபை இருக்கும் வரை அவன் வெளிப்படமாட்டான் என்பது சத்தியம். அதுவரை, இப்படியாய் வெளிப்படுத்துவதெல்லாம் அந்திகிறிஸ்து ஆவியின் செயல் (1 யோ.4:3).

ஆக, 10 ராஜ்யங்களடங்கிய மிருகமும், அந்த பத்திலிருந்து எழும்பும் Single - ஒரு ராஜாவும், வரப்போகும் அந்திகிறிஸ்து என்றும், இந்த single அந்திகிறிஸ்துவுக்காக, கள்ள தீர்க்கதரிசி செயல்படுவான் என்றும் அறிக!

❖ ❖ ❖

# 14ம் அதிகாரம்

**இங்கே மூன்று விதமான காரியங்கள் காட்டப்பட்டுள்ளன.**

**1. 1,44,000 பேர்:-**

(இதைப்பற்றி விளக்கமாக வெளியரங்கமாகாத தீர்க்கத்தரிசனங்கள் என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறேன்). வெளி.7ல் பூமியில், பாதுகாப்புக்காக முத்திரையிடப்பட்ட, 1,44,000 இஸ்ரேலர்கள்தான், இங்கே பரலோகிலுள்ள சீயோன் மாலையிலிருக்கும் (எபி.12:22-24) ஆட்டுக் குட்டியானவரோடு நிற்கிறார்கள். இவர்கள் பூமியிலிருந்து பரலோகம் வந்துவிட்டார்கள் என்று வெளி.14:5 திட்டமும் தெளிவுமாய் உணர்த்துகிறது. இவர்கள் மணவாட்டி சபை இல்லை. ஏனெனில் மணவாட்டி சபைதான் வெளி.4க்குப் பின் பூமியிலே இல்லையே! இவர்கள் வெளி.7:3ன் படி, நெற்றியிலே பிதாவின் நாமம் தரிக்கப்பட்ட (வெளி.14:1) கோத்திரத்திற்கு 12000 என்று தேர்ந்தெடுக்கப்பட்ட, அந்திகிறிஸ்துவின் உபத்திரவ காலத்தில் அடைக்கலமாய் பாதுகாக்கப்பட்ட இஸ்ரேலர் என அறிகிறோம் (வெளி.12:13-16). நாம் இயேசுவின் நாமத்தால் கழுவப்பட்டு, இயேசுவைத் தரித்திருப்பவர்கள்; பிதாவின் நாமம் தரித்திருப்பவர்கள் அல்ல (1 கொரி.6:11; கலா.3:27; ரோ.13:14). இவர்கள் மணவாட்டி சபையின் இரகசிய வருகைக்குப்பின்னே, இஸ்ரேலரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட - மேசியாவை உபத்திரவ காலத்தில் விசுவாசிக்கத் தொடங்கிய - முதற்பலன் என்று சொல்லப்படுகின்றது (வெளி.14:5). இவர்களுக்குப் பின்னாலே இன்னும் பலர் இந்த $3\frac{1}{2}$ ஆண்டுக்குள் பரலோகம் வருவார்கள் என்று

வெளி.7:14 மூலம் அறியலாம். ("வருகிறவர்கள்"; வந்து கொண்டிருப்பவர்கள்").

இவர்கள் ஸ்திரிகளால் கறைபடாதவர்கள் என்பதால், இவர்கள் திருமணம் ஆகாதவர்கள் என்று சிலர் கணிக்கிறார்கள். அப்படியானால் திருமணம் என்பது கறையா? விவாகமஞ்சம் பரிசுத்தமுள்ளது அல்லவா! (எபி.13:4). முதன்முதலில் ஏதேனில் ஆணையும், பெண்ணையும் இணைத்தவர் தேவன்தானே! (ஆதி.1:28). அப்படிப்பார்த்தால் இந்த 1,44,000 பேரும் ஆண்களா? பெண்கள் இதில் பங்கடைய அருகதை இல்லையா? மேலும், "they are virgins" என்று வெளி.14:4 சொல்வதால், இந்த 1,44,000 பேரும் திருமணமாகாத கன்னிப் பெண்களா? அப்படியானால் ஆண் இஸ்ரேலர் பங்கடைய முடியாதா? "ஸ்திரீ" என்றால், தீர்க்கதரிசனத்தில் சபை என்று பொருள்; குழு, கூட்டம் என்றும் பொருள். ஸ்திரிகளால் கறைபடாதது என்றால், தவறான உபதேசமும், நடத்தையும் உள்ள சபைகளாலும், கள்ளக் கிறிஸ்துகள், கள்ளப் போதகர், கள்ள தீர்க்கதரிசி ஆகியோராலும் கறைபடாமல், தங்கள் ஆவி, ஆத்மா, சரீரம் எல்லாவற்றிலும் கற்புள்ளவர்களாக இருக்கும் ஆண், பெண் எல்லோருமேயாகும் (refer 1 கொரி.12; 1 தெச.5:23; யுதா.23; எபே.4:11; 2பேது.2). பரலோகிலே, ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் பின்னாலேயே போகக் கூடியவர்கள்.

**2. மூன்று தூதர்கள்:-**

மூன்று தூதர்கள், வானத்தின் மத்தியிலே பறந்து வந்து, அந்திகிறிஸ்துவின் கடைசி $3^1/_2$ ஆண்டுகளில் வாழும் மக்களுக்குச் சொல்லும் கடைசி செய்தியாகும். இது எச்சரிப்பின் செய்திதானே ஒழிய, இரட்சிப்பின் செய்தி அல்ல. இரட்சிப்பின் செய்தியைக் கொடுக்கும் நாம் தான், 4ம் அதிகாரத்தோடே இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டோமே! பூமியிலுள்ளோர், அதுவும் இரகசிய வருகையில் பங்குபெறாதவர்கள், நரகத்திற்குப் போய்விடக்கூடாது என்று தேவதூதர் மூலமாகவும், எச்சரிப்புக் கொடுக்கும் தேவஅன்பைப் பாருங்கள்!

வேதத்திலே,

1. ராஜ்யத்துக்குரிய சுவிசேஷம் (மத். 24:14)
2. இரட்சிப்பின் சுவிசேஷம்
3. மகிமையின் சுவிசேஷம்
4. நித்திய சுவிசேஷம் (வெளி.14:6)

எனப் பலவகையான சுவிசேஷங்கள் உள்ளன என்று அடியேனின் "சுவிசேஷங்கள் பலவிதம்" என்ற செய்தியை "தெரிந்து கொள்ளுங்கள்- பாகம் 1" என்ற நூலில் வாசியுங்கள்.

**முதலாம் தூதன்:-** ஆதியிலிருந்து சொல்லப்படும் நித்திய சுவிசேஷத்தை - படைப்பைப் பற்றிய சுவிசேஷத்தை - சொல்லி நியாயத்தீர்ப்பின் வேளை வந்தது என்று எச்சரிக்கிறான்.

**2 வது தூதன்:-** பாபிலோன் மாநகரம் வீழ்ந்தது என்று சொல்கிறான். சரித்திரப்படி இன்றைய தேதிவரை, பாபிலோன் மாநகரம் புதுப்பிக்கப்படவில்லை. வெளி.18:2ன் படி, அது பேய்களின் குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளின் காவல் வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளின் கூடுமானதாகும். குடியில்லாத மண்மேடான பாவம் நிறைந்த பழைய பாபிலோன் (எரே.51:37). மறுபடியும் எழுப்பிக் கட்டப்படும் என்றும், அப்படிக் கட்டப்பட்ட அந்த பாபிலோன்தான் வீழ்ந்து போகும் என்றும் (see ஏசா.13:20) தேவதூதன் அறிவிக்கிறான். பேதுரு காலத்தில் அந்த பகுதியில் ஒரு சபையே இருந்தது (1 பேது. 5:13). இந்த பாபிலோனை ஆவிக்குரிய ரீதியிலும் கணிக்கலாம். இதைத்தான் வெளி.17லும், 18லும் விளக்கப்பட்டிருக்கிறது. மேலும், பாபிலோன் நகரம் ஒன்றை பூமிக்கடியில் சதாம் உசேன் கட்டியிருப்பதாக பத்திரிகைகளில் வாசிக்கிறோம். எப்படியோ, தேவனின் கோபாக்கினையால் கட்டப்படப் போகும் பாபிலோன் (Physical as well as spiritual) வீழ்ந்து போகும்.

**3ம் தூதன்:-** (வெளி.14:9-11). அந்திகிறிஸ்துவை பின்தொடர் வோருக்கு, அந்திகிறிஸ்துவின் முத்திரை தரிப்போருக்கு இப்பூமியிலும் இளைப்பாறுதலிராது; நித்திய மரணமும் உண்டு என்று அறிவிக்கிறான். பூமியிலிருக்கும் மக்கள் அப்போதும் தேவன்மேல் விசுவாசம் கொண்டு, அந்திகிறிஸ்துவின் ஆக்கினையை தாங்கி பொறுமையோடிருந்தால், இரத்த சாட்சியாய்க் கூட மரிக்கும்நிலை வரும் என்கிறது. அப்படி மரிப்போர் பாக்கியவான்களென்றும், அவர்களின் விசுவாசக் கிரியைகளுக்கு, பரலோகில் பலனுண்டு என்றும் வெளி.14:13 சொல்கின்றது.

**3. ஆக்கினைத் தீர்ப்பு:-**

ஆவிக்குரிய விளைச்சலை இயேசு இரகசிய வருகையிலேயும், இரத்த சாட்சியாய் உபத்திர காலத்தில் மரித்தவர்கள் மற்றும் 1,44,000 பேர் வழியாகவும், அறுவடை செய்துவிட்டார். இப்போதோ பூமியினுடைய விளைவை அறுவடை செய்கிறார். நடக்கப்போகும் அர்மகதோன் யுத்த

முடிவையும் முன்கூட்டியே விளக்குவதாக வெளி.14:14-20வரை உள்ளது. (see வெளி.16:13-16; 19:17,18). மூன்று தூதர்களின் எச்சரிப்பின் தூதுக்குப் பின்னும், இஸ்ரேலிய பரிசுத்தவான்கள், வெளி.14:12ன்படி இருப்பார்கள்; அந்தி கிறிஸ்துவின் வழியில் நடப்போரும் இருப்பார்கள். இவர்களுக்குச் செய்யும் ஆக்கினைத் தீர்ப்புதான் இந்த பூமிக்குரிய விளைவின் அறுவடை. இங்கே அறுவடை மற்றும் ஆலை சேர்ப்பு இரண்டும் இணைந்தே வருகிறது. (இயேசு திராட்சை செடி; அவரது சீடர்கள் அதன் கொடி - யோ.15; அவர்கள் நல்லகனி கொடுப்பார்கள். இந்த அறுவடை வெளி.4க்கு முன்பே முடிந்தது. இப்படியாய் நல்ல கனியை அறுவடை செய்யத்தான். அறுவடை மிகுதி; வேலையாட்கள் கொஞ்சம், வேலையாட்கள் தேவை என்று இயேசு மத்.9:37,38ல் சொன்னார்.)

எகிப்திலிருந்து கொண்டு வரப்பட்டு கானானில் நடப்பட்ட, இஸ்ரேலாகிய திராட்சைச் செடியோ (சங்.80:8) நல்லகனி தரவில்லை (ஏசா.5:1-7). அதில் பெரும்பாலும் தனக்குத்தானே பூமியின் கனியைக் கொடுத்தது; ஆவியின் கனி இல்லை (ஓசி.10:1). வாங்க வந்தோரை யெல்லாம் இஸ்ரேலர் கொன்று போட்டார்கள்; எஜமானின் மகனையும் (see இயேசு) கொன்றார்கள் (மத்.21:33,34). எனவே இந்த பூமியின் கனியை, விளைவை, மனம்மாறாத இஸ்ரேலரை, இரத்தசாட்சியாய் மரிக்காத புறஜாதியாரை, கைவிடப்பட்ட கிறிஸ்தவர்களை அறுத்துத்தான் ஆலைகளில் - winepress - போடப்படும். (See ஏசா.63:1-6; 34:7,8) இது வெளி.19:15ல் அர்மெகதோன் யுத்தத்தில் நடைபெறுவதாகும். அப்போதுதான், 1600 ஸ்தாதி அல்லது பர்லாங் (2000 மைல்) இரத்தமாய் வழிந்தோடும். அந்த நாள் மிகக் கொடியநாள்; பூமியிலுள்ளோர் யாவரும் நடுங்கும் நாள்.

❖ ❖ ❖

# 15ம் அதிகாரம்

வெளி.4ம் அதிகாரத்திலிருந்தே சபை பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று என்று அறிந்தோம். 4ம் அதிகாரம் முதல், பரலோகிலும் பூலோகிலும், கடைசி 7 ஆண்டுகள் (தானி.9:27) அந்தி கிறிஸ்துவின் நாட்களில் என்ன நடக்கப் போகிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரே கோர்வையாய் நிகழ்ச்சிகள் சொல்லப்படாமல்,

அவ்வப்போது யோவானுக்கு காட்டப்படும் தரிசனங்களை நாம் வாசிக்கிறோம். இந்த 7 ஆண்டுகளில் அந்திகிறிஸ்துவின் அட்டகாச, மோசமான, மிருகத்தனமான ஆட்சி நடைபெறும் என்றும், தேவனின் கோபாக்கினையும் வெளிப்படும் என்று, அறிந்திருக்கிறோம். வெளி.11க்கு மேல் மகா உபத்திரவம் பற்றித்தான் பார்க்கிறோம். 6 முத்திரைகள் பரலோகில் உடைக்கும்போது, பூமியில் நடக்கப் போகும் காரியங்களைக் கண்டோம் - 7ம் முத்திரை உடைக்கும்போது, 7 எக்காளங்கள் ஊதுவதும், 7வது எக்காளம் ஊதும்போது 7 சலசங்கள் (வாதைகள்) ஊற்றப்படும் என்றும் அறிந்தோம். இந்த அதிகாரத்தில், தேவனுடைய கோபாக்கினை பூர்த்தியாகும்படியான, ஏழு வாதைகளை உடைய (7 கலசங்கள் - see வெளி.16) 7 தூதர்களை யோவான் காண்கிறான்.

வெளி.4:6ல், பரலோக சிங்காசனத்திற்கு முன்பாக தோன்றிய கண்ணாடிக்கடல் இங்கே காணப்படுகின்றது. இதிலே அக்கினி கலந்திருக்கிறது (வெளி.15:2). எனவேதான் இதனருகே, அந்திகிறிஸ்துவின் மகா உபத்திரவத்திலிருந்து - அக்கினிச் சோதனையிலிருந்து ஜெயங்கொண்டவர்கள், நிற்கிறார்கள். அவர்கள் தேவ சுரமண்டலங் களைப் பிடித்துக் கொண்டு, மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடுகின்றனர். எனவே இவர்கள் மகாஉபத்திரவ காலத்தில், மேசியாவை விசுவாசித்த இரத்த சாட்சியான இஸ்ரவேலராகவும், இரத்த சாட்சியாய் மரித்த கைவிடப்பட்ட கிறிஸ்துவர்களாகவும் இருக்கலாம்.

இதற்குப் பிறகு, உடன்படிக்கைப் பெட்டி உள்ள ஆலயம் பரலோகில் திறக்கப்படுகிறது. (வெளி.11:19ல் ஏற்கெனவே ஒருமுறை திறந்ததைப் பார்த்தோம்). இப்போது 7வது எக்காளம் ஊதப்படுகிறது. இதிலிருந்து வெளி.20:3 வரை மிகவும் பயங்கரமான காரியங்கள் பூமியில் நடக்கும் என்பதற்கு அடையாளமாய்த்தான் மறுபடியும் தேவாலயம் திறக்கப்படுகின்றது. ஏழு வாதைகளைக் கொடுக்கிற, தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் 7ஐயும், ஆசாரிய வஸ்திரம் தரித்த 7 தூதர்கள் பெற்றுக் கொண்டு புறப்படுகிறார்கள். அப்போது பரலோக தேவாலயம் புகையினால் நிறைந்தது. அன்று மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்திலும், சாலமோனின் ஆலயத்திலும், மேகம் - ஷெகினா மகிமை - நிரம்பியது (யாத்.40:34-36; 1 810-11). அது கிருபையைக் காட்டுகிறது. இங்கோ பரலோக தேவாலயப்புகை மற்றும் இரத்தம் நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்துகிறது (ஏசா.6:1-4; யாத்.19:18). இதிலிருந்து நாமறிவது

என்னவென்றால், இந்த நிகழ்ச்சிக்குப்பின், ஒரு இரத்த சாட்சியும், ஒருவனும் பரலோகம் போவதில்லை - போக வழியில்லை என்பதாகும். அல்லேலூயா! அந்த நாள் மகா கொடிய நாள்! நியாயத்தீர்ப்பின் நாள்!

❖ ❖ ❖

# 16ம் அதிகாரம்

பரலோக தேவாலயத்திலிருந்து, 7 கலசங்கள் (வாதைகள்) ஊற்றப்படப் போவதை வெளி.15ன் முடிவிலே அறிந்தோம். தானி.9:27ல் சொல்லப்பட்ட முதல் $3^1/_2$ ஆண்டுகள் நடக்கப்போகும் அந்தி கிறிஸ்துவின் அட்டகாசமும், தேவ கோபாக்கினையும், வெளி.6 முதல், முத்திரைகளோடு ஆரம்பித்து 7 எக்காளத்தோடு தொடர்ந்து வருகிறது. இந்த 7 சலசங்களும், கடைசி $3^1/_2$ ஆண்டுகளில், இயேசுவின் பகிரங்க வருகையின் காலக்கட்டத்தில் நடப்பதாய் எழுதப்பட்டுள்ளது. இந்த 7லே, 4 வாதைகள், எகிப்திலே தேவன் மோசே நாட்களில் கொடுத்தது என்று அறியலாம். எல்லா வாதைகளுமே, அந்திகிறிஸ்துவை வணங்குபவர்களுக்கும், அவனின் முத்திரையைத் தரித்திருப்பவர்களுக்கு மட்டுமே இருப்பதால் இந்த காரியங்கள் அந்திகிறிஸ்துவின் நாட்களில்தான் அமையும் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

**முதல் வாதை (முதல் கலசம்):-** பூமியிலுள்ள மனுஷருக்கு பொல்லாத கொடிய புண்கள் உருவாகும். இது எகிப்திய 6வது வாதை போன்றதாகும். இந்த நியாயத் தீர்ப்பெல்லாம் வெளி.14:6-11ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன முன்னுரையின் நிறைவேறுதலாகும்.

**2 ம் கலசம் (2ம் வாதை):-** இது சமுத்திரத்தில் ஊற்றும்போது, சமுத்திர பிராணிகள் யாவும் மாண்டதால், அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று. கடைசி $3^1/_2$ ஆண்டு மகா உபத்திரவம் இஸ்ரேலருக்கு, யாக்கோபின் இக்கட்டுக்காலமாய் இருப்பதால் (எரே.30:7), எல்லா சமுத்திரங்களிலும் ஊற்றப்படாமல், இஸ்ரேல் தேச கலிலேயாக் கடல் அல்லது மத்திய தரைக்கடல் பகுதியில் தான் நடக்குமென நிதானிக்கப்படுகிறது.

**3வது கலசம் (வாதை):-** ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றப்படுவதால், அந்த நீரெல்லாம் இரத்தமாய் மாறின. இஸ்ரேலர்கள், பரிசுத்தவான்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் இரத்தத்தையும் சிந்த

வைத்ததால் (மத்.23:35; 27:25) அவர்கள் குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் ஆக்கப்பட்டது.

**4வது கலசம் (வாதை):-** சூரியனின் மேல் ஊற்றப்பட்டதால் சூரியன் பயங்கர உஷ்ணத்தை வெளிப்படுத்தும். ஆகிலும், அக்கால மக்கள் எகிப்திய பார்வோன்போல கடினமனத்தோடு இருந்து, இந்த வாதைகளைச் செய்யும் தேவனை தூஷிப்பார்கள். இதிலிருந்து நாமறிவது என்ன? என்ன கஷ்டம், வியாதி வந்தாலும், அப்போதுள்ள மனிதர்கள், திருந்தி வாழ்வது என்பது கூடாத காரியம் என அறிகிறோம்.

**5வது கலசம் (வாதை):-** இது ஊற்றப்படும்போது, அந்தி கிறிஸ்துவின் ராஜ்யம் இருளடைந்தது. இது யோவேல் 2:1ன் நிறைவேறுதல். மத். 24ல் இயேசுவும் இப்படித்தான் கூறுகிறார். வாதைகள் பெருகப்பெருக, அவர்கள் தங்கள் பொல்லாத கிரியைகளை விட்டு மனந்திரும்பாமல், இருதயக் கடினத்தால் தேவனையே தூஷிப்பார்கள்.

**6வது கலசம் (வாதை):-** ஐப்பிராத்து நதியின்மேல் ஊற்றப்பட்டதால், அந்த நதி வற்றிப் போயிற்று. இதனால் கிழக்கு ராஜாக்கள் வர வழிவகைகள் கிடைக்கின்றன. எதற்கு வருகிறார்கள்? அர்மகதோன் பள்ளத்தாக்கில் அந்திகிறிஸ்துவுக்கும், இஸ்ரேலருடனும் நடக்கும் யுத்தத்திற்காக. ஐப்பிராத்து நதி வற்றிப் போனதால் இன்னும் இரண்டு காரியங்கள் நடக்க வாய்ப்பு உள்ளது.

1. அசீரியாவிலுள்ள மீதமுள்ள இஸ்ரேலர் தாயகம் வர வழி கிடைக்கிறது.
2. கிழக்குப் பகுதி தேசத்தாரும் நடைபெறப்போகும் தேசங்களின் நியாயத்தீர்ப்புக்காக ஒன்றாய் சேர்க்கப்பட உதவுகிறது.

அப்போது, அந்திகிறிஸ்துவின் வாயிலிருந்தும், சாத்தானின் வாயிலிருந்தும், கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலிருந்தும் மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு, அர்மகதோன் பள்ளத்தாக்கில் நடைபெறப்போகும் யுத்தத்திற்காக, பூலோகமெங்குமுள்ள ராஜாக்களையும், சேனைகளையும் கூட்டிச் சேர்க்கின்றன (வெளி.16:13,14). இரகசிய வருகையிலே, வெளி.4ம் அதிகாரத்திற்கு முன்னமே எடுத்துக் கொள்ளப்பட்ட நம்மோடு, 7 ஆண்டுகளுக்குப் பிறகு, இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாய், மகிமை பொருந்தினவராய் பூமிக்கு வந்து (மத்.24:30, 31) ஒலிவமலையில் காலடி வைத்து வரக்கூடிய பகிரங்க வருகையிலே நடக்கும் யுத்தம் இது. இந்த 3

ஆவிகளும், தவளைகளுக்கு ஒப்பானவை. **தவளைகளின் குணாதிசயங்களாவன!** 1. சேற்றின் புதை குழிகளிலிருந்து வருபவை. 2. மாலை நிழல் விழும்போது கிரியை செய்பவை. 3. நகர்ந்து கத்திக் கொண்டே, செவிகளை அடைக்கும் குரலில் சத்தம் தொனிப்பவை. இப்படியாய், வஞ்சிக்கிற ஆவிகள் (seducing spirits) கிளம்பி, பூமியின் ராஜாக்களையெல்லாம் தன் வசப்படுத்தி, தேவனுக்கு எதிராய் யுத்தம் பண்ண கூட்டிச் சேர்க்கும். இந்த ஆவிகளைப்பற்றி பவுலும், தீமோத்தேயுவுக்கு எழுதியிருக்கிறான். இந்த வஞ்சிக்கிற, அசுத்த ஆவிகளின் திட்டம், ஈடுபாடு, உள்நோக்கம் எல்லாமே, அன்று ஆகாப் ராஜாவின் சரிதையில் வெளிப்பட்டது போன்றே நடக்கும் (1 ராஜா. 22:20-38).

**7வது கலசம் (வாதை):-** ஏழாவது முத்திரை உடைக்கப்படும் போதும், 7வது எக்காளம் ஊதப்படும் போதும், 7 வது கலசம் ஊற்றப்படும் போதும் பூமியில் இடிமுழக்கம், மின்னல்கள், பூமியதிர்ச்சி போன்ற ஒரே விதமான காரியங்கள் சம்பவிக்கும். ஆனால் இப்போதோ கல்மழையும், உண்டாகும் (வெளி.11;19; 16:21). (7வது முத்திரை உடைக்கும்போது, 7 எக்காளங்களும், 7 கலசங்களும் உள்ளடக்கியே இருக்கும்). இந்த நிகழ்வு, அந்திகிறிஸ்துவின் 7 வருஷத்தின் கடைசி நாட்களில் நடைபெறும். 7வது முத்திரை உடைக்கும் முன்பு பரலோகில் அமைதல் உண்டாயிற்று (வெளி.8:1); 7வது எக்காளம் ஊதும் முன்னும், 7வது கலசம் ஊற்றும் முன்னும், பரலோகில் பெருஞ்சத்தம் - கெம்பீர சத்தம் - உண்டாயிற்று (வெளி.11:15; 16:17). 7வது கலசம் ஊற்றும்போது "ஆயிற்று" என்று வரும் குரல், அத்தோடு தேவ கோபாக்கினை நிறைவுறுகிறது என்று பொருள் தருகிறது.

அப்போது வரும் மகாபயங்கர பூமியதிர்ச்சி, ஒலிவமலை இரண்டாய்ப் பிளக்கும்; சவக்கடலின் மட்டம் உயர்ந்து அதன் தண்ணீர் செங்கடலில் கலக்கும் (எசே.47:1-12); மலைகள் சம பூமியாகும், தீவுகள் மூழ்கடிக்கப்படும்; புறஜாதிகள் தேசங்கள் அழிக்கப்படும் (ரோம், நேப்பில்ஸ், லண்டன், பாரீஸ், கான்ஸடாண்டி நோபிள் எல்லாம் அழியும்). கடைசியாய், மறுபடியும் எடுப்பித்துக் கட்டப்பட்ட மகாபாபிலோன் (see வெளி.18) வீழ்ந்து அழியும் (சகரி.14). எகிப்தில் ஏற்பட்ட 7வது வாதை (யாத்.9:13-35) மீண்டும் சம்பவிக்கும். (அதாவது, கல்மழை உண்டாகும் - see யோ.10:11). 7வது கலசம் ஊற்றப்பட்டதோடு தேவனின் கோபாக்கினி முடிவடைகிறது. அப்போதுதான் அர்மகேதான் யுத்தம் நடக்கும் (see வெளி.19:15; 2 தெச.2:8).

# 17ம் அதிகாரம் (Mystical Balylon)

ஆவிக்குரிய கிறிஸ்துவ சபை, இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, 6 முத்திரைகள் உடைக்கப்பட்டு, 7வது முத்திரை உடைக்கப்படும்போதே, 7 எக்காளங்கள் ஊதப்படப் போகின்றன என்றும், ஏழு கலசங்கள் ஊற்றப்படப் போகின்றன என்றும் ஏற்கெனவே பார்த்தோம். 7வது கலசம் ஊற்றப்பட்ட பின்னே பூமியில் நடக்கப்போகும் ஆக்கினைகளை இனி காணப்போகிறோம்.

ஏழுகலசங்களையுடைய 7 தூதரில் ஒருவன் யோவானுக்கு ஒரு இரகசியத்தைக் காட்டுகிறான் (வெளி.17:3-6). அதற்குப் பெயர், **மகாபாபிலோனாம்;** வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமமுடையவளாம். (இதுகுறித்து, "யோவான் சொல்லும் இரகசியம்" என்ற தலைப்பிலுள்ள செய்தியை ஆசிரியரின், "தெரிந்து கொள்ளுங்கள் - பாகம் 1" என்ற நூலில் வாசியுங்கள்). யார் இவள்? பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவின் சாட்சிகளின் இரத்தத்தினாலும், வெறிகொண்டவள். பூமியின் ராஜாக்களை எல்லாம், இவளோடு ஆவிக்குரிய வேசித்தனம் பண்ண வைத்தவள்; பூமியின் குடிகளை வேசித்தன மதுவால் வெறிகொண்டிருக்க வைத்தவள். அவள் மிருகமாகிய அந்திகிறிஸ்துவின் மேல் ஏறிநின்று, அந்திகிறிஸ்துவை ஆட்டிப் படைக்கிறாள். ஸ்திரி என்றாலே தீர்க்கதரிசனத்தில், சபையை-கூட்டத்தை - குழுவைத்தான் குறிக்கும். அந்திகிறிஸ்துவின் மேல் ஏறி 10 ராஜாக்களுடைய அமைப்பையே ஆட்டுவிக்கிறது என்றால், நிச்சயமாய் இது, இரகசிய வருகையிலே கைவிடப்பட்ட பெயர்க்கிறிஸ்தவ, கள்ள உபதேச கள்ளதீர்க்கதரிசன சபைகளின் கூட்டமாகத்தான் இருக்க வேண்டும். இந்த ஸ்திரிக்கு "மகாபாபிலோன்" என்று பெயரிட்டதிலிருந்து இது, பெயர்க் குழப்பம் நிறைந்த; குழப்பத்தை உருவாக்கும் சபை என தீர்மானிக்கலாம்.

ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாகிய சபை, பரம எருசலேம் என்னும் பரிசுத்த நகரப் பெயரோடு அழைக்கப்படுவதால் (வெளி.21:9-10), இந்த சபை, நிச்சயமாய் யாருக்கோ மணவாட்டி அந்தஸ்தில் இருக்கிறாள் என்று அறியலாம். **கிறிஸ்துவுக்கு மணவாட்டியாகிய நமது சபையைக் குறித்து, "இரகசியம்" என்று பவுல் எபே.3:1-6ல் சொல்வதால்** (see எபே.5:23-32) கிறிஸ்துவுக்கு எதிரான, பாபிலோன் என்ற நகரப்பெயரில், வேசி என்ற நாமத்தில், இரகசியம் என்று சித்தரிக்கப்படும் இந்த

ஸ்திரியாகிய சபை, நிச்சயமாய், கிறிஸ்துவுக்கு எதிராளியான, அந்திகிறிஸ்துவின் மணவாட்டியாகத்தான் இருக்க முடியும். ஆமென்.

மேலும், இந்த ஸ்திரி, தேவனுடைய பிள்ளைகளின் இரத்தவெறி பிடித்தவளாய், இருப்பதால், "இருண்டகாலம்" என்ற சபை சரித்திர ஆராயச்சியாளர்கள் சொல்லுகிற அந்த காலகட்டத்தில் உச்சாணியில் நின்று, ஒய்யாரமிட்ட, ரோமன் கத்தோலிக்க சபையாகக் கூட இவள் இருக்கலாம் என்று நிதானிக்கப்படுகிறது. மேலும், பாபிலோன் என்று அழைக்கப் படுவதால், குழப்பமான கொள்கைகளை உடைய கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்டண்டு சபைகளின் கூட்டு என்றும் சொல்லலாம். "வேசி சபை" என்பதால், போப் சபையிலும், புராட்டஸ்டண்ட் சபைகளிலும் உள்ள ஆவிக்குரிய வேசித்தனங்களாவன:-

1. மரியாள் வணக்கம் மற்றும் புனிதர், தேவதூதர் வணக்கம்.
2. விக்ரக ஆராதனை.
3. குழந்தை ஞானஸ்நானம் .
4. கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான பண்டிகைகள் கொண்டாடுதல்.
5. ஓய்வுநாளை ஆசரித்தல்; அதுவும் ஞாயிறுக்கு மாற்றி ஆசரித்தல்.
6. ஆசாரியத்துவ முறைப்படி யூனிஃபார்ம், செயல்முறைகள் எல்லாம் இன்னும் ஏராளம் உள்ளன.

மேலும், போப்பின் ஜோடிப்பில், இரத்தாம்பரம் மிகவும் முக்கியமானது. அவர் அணியும் பலவகை அங்கிகளில், ஐந்து இரத்தாம்பரத்தால் ஆனவை. மேலங்கி, முத்துக்களால் பதிக்கப்பட்டும், உயர்ந்த தலைப்பாகை, இரத்தினங்கள், பொன் ஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்டும் இருக்கும். சிவப்பு நிறமுள்ள (வெளி.17:3) மிருகமாகிய, 10 ராஜாக்களின் கூட்டான - அந்திகிறிஸ்துவாகிய மிருகத்தின் மேல் ஏறியிருக்கும் இந்த ஸ்திரியும் இப்படிப்பட்ட ஆடைகள் அணிந்திருப்பதால் (வெளி.17:4), இந்த ஸ்திரியாகிய சபை - அந்திகிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை - ரோமன் கத்தோலிக்க சபை - குழுமம் என்றே நிதானிக்கலாம். மேலும், கத்தோலிக்க போப், உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளின் அதிபதிகளை தம் கையில் வைத்திருப்பதுபோல, இவளும் மிருகத்தின்மேல் அதிகாரம் செலுத்துவதால் இவளை கத்தோலிக்க சபை என்று சொல்ல வாய்ப்பு உண்டு. எப்படியோ இந்த ஸ்திரீ, கைவிடப்பட்ட சபைகளின் கூட்டமென்றும், அதில் தலைமை வகிப்பது, ரோமன் கத்தோலிக்க சபை என்றும் உணர்கிறோம். இப்போதே

பெரும்பாலான கிறிஸ்தவ சபைகள் (ஆவிக்குரிய பெந்தகொஸ்தே சபைகள் உட்பட) ரோமன் கத்தோலிக்க சபையோடு இணைந்து செயல்படுவதும், வேதாகம திருத்தங்கள் செய்வதும் கண்கூடாய்ப் பார்க்கிறோமே!

இவைகளை எல்லாம் வாசிக்கும் நாம், ஏழாம் நாள், யேகோவா விட்னஸ் போன்ற பல சபைகள் சொல்வதுபோல, மிருகம், போப் அல்ல என்றும், அந்த போப் அந்திகிறிஸ்து அல்ல என்றும், "போப்" அந்த மிருகத்தை ஆட்டிப்படைக்கும் வேசித்தனமான கிறிஸ்தவ சபைகளின் கூட்டுத்தலைமை என்றும் திட்டமும் தெளிவுமாய் உணரலாம்.

இவைகளையெல்லாம் ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் யோவானுக்கு, இன்னும் தூதன், மிருகம் பற்றியும், ஸ்திரியின் முடிவுபற்றியும் சொல்வதைப் பாருங்கள். (வெளி.17:7); வெளி.17:8ஐ வாசித்தால், இந்த மிருகம் முன்னே இருந்ததாம் (அது தான் ரோம சாம்ராஜ்யம்); பின்பு இராமற் போனதாம் (இரண்டாய்ப் பிரிந்து, இரண்டும் வீழ்ந்தது); இனி பாதாளத்திலிருந்து எறிவந்து - அதாவது பிசாசின் வல்லமையோடு வந்தது இருக்கப் போகிறதாம் (அதுதான் Revival Rome Kingdom - see வெளி.13). அந்த மிருகத்திற்கு 7 தலைகள். 7 தலைகள், 7 மலைகள் என்று வெளி.17:9ல் சொல்வதால், ரோமபுரி 7 மலைகளாம். மட்டுமல்ல... வெளி.17:10ன்படி அவைகள் 7 ராஜாக்களாம். இவர்களில் 5 பேர் விழுந்தார்களாம். அவர்கள்தான் இஸ்ரேலர்களுக்கு விரோதமான, அசீரியா, எகிப்து, பாபிலோன், மேதிய பெர்சியா, கிரேக்கம் ஆகும். ஆறாவதான ரோம சாம்ராஜ்யம் யோவான் காலத்தில் இருக்கிறது. 7வது தான் வரப்போகும் 10 நாடுகளடங்கிய அந்திகிறிஸ்துவாகிய மிருகம் - Revival Rome kingdom (மறுமலர்ச்சி ரோமராஜ்யம்). "இருந்ததும் இராததுமாகிய எட்டாவது" தான், இறுதியில் எழும்பப் போகும் single அந்திகிறிஸ்து ராஜா (10ல்3; 3ல் ஒன்று). தானி.11:40-45ஐ வாசிக்கும்போது, இவன் வடதிசை சிரியாவிலிருந்து வருவான் என அறிகிறோம். இந்த சிரியா, கிரேக்கத்திலிருந்து எழும்பி, இஸ்ரேலை ஆண்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதைத்தான், முன்னே இருந்தது, இப்போது யோவான் காலத்தில் - இல்லை என்று வெளி.17:8லும், இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவது என்று வெளி.17:11லும் உள்ளதை சிந்தியுங்கள். இந்த 8வது ராஜாவாகிய மிருகம் வந்தபின் அவனோடு இணைந்து மற்ற எல்லா ராஜாக்களும் ஒற்றுமையாய் கொஞ்சகாலம் ஆள்வார்கள், (அதைத்தான் 1 மணிநேரம் என்று

போடப்பட்டுள்ளது - வெளி.17:12,13). இராஜாதி ராஜாவாய், கர்த்தாதி கர்த்தாவாய் இயேசு பூமிக்கு வரும்போது, எல்லாம் ராஜாக்களும், இந்த ஒருமை - singular - அந்திகிறிஸ்துவோடு இணைந்து, இஸ்ரேலரோடும், பின்பு இயேசுவோடும் யுத்தம் பண்ணுவர். இயேசு ஜெயிப்பார். அல்லேலூயா!

"மகாபாபிலோன்" என்னும் பேர்கொண்ட, வேசித்தனமான அந்த ஸ்திரீயாகிய சபை, மிருகத்தை கைக்குள்போட்டு, அதிகாரம் கொண்டிருந்த சபை, மிருகத்தாலே அழிக்கப்பட்டது (வெளி.17:16). அல்லேலூயா!

❖ ❖ ❖

# 18ம் அதிகாரம் (Physical Babylon)

இந்த அதிகாரம் "இவைகளுக்குப்பின்பு" என்று ஆரம்பிக்கிறது. எவைகளுக்குப் பின்பு? வெளி.17ல் போப் தலைமையிலான, புதிரான பாபிலோன் - Mystical Babylon - முடிந்ததற்குப் பிறகு இந்த அதிகார சம்பவம் ஆரம்பிக்கிறது. இங்கு விவரிக்கப்படுவது, எழுத்தின்படியான, political பாபிலோன் நகரமாகும். உலகத்திலே உன்னதமான நிலையிலிருந்து வீழ்ந்துபோன "பாபிலோன் நகரம், மீண்டும் எடுப்பித்துக் கட்டப்படுமா?" என்ற செய்தியை, ஆசிரியரின், "விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்!" என்ற நூலில் வாசியுங்கள். அல்லது ஆசிரியரின் கடைசிகால விடுதலை முழக்கம் - ஆகஸ்ட் 2002 மாத இதழில் வாசியுங்கள். இங்கே அறிவிக்கும் தூதர்களும் வேறு வேறு என்பதாலும், (See வெளி.14:8). இவைகளுக்குப் பின்பு என்று ஆரம்பிப்பதாலும், பழைய Mystical பாபிலோன் அழிக்கப்பட்டதாலும் இந்த அதிகாரத்திலுள்ள பாபிலோன் வேறுதான்; இது political பாபிலோனைக் குறித்தும், அதன் அழிவைக் குறித்தும் விவரிக்கிறது.

ஏசா.13,14; எரே.50, 51 அதிகாரங்களில் சொல்லப்பட்ட பாபிலோன் நகர அழிவைக் குறித்த அநேக தீர்க்கதரிசனங்கள் நிறைவேறாமல் இருக்கின்றன. ஏசா.13:20; எரே.31:43; 5:26 போன்ற வசனங்களை வைத்து, இந்த நகரம் அழிந்துவிட்டது என்று வாதிடுவோரும் உண்டு. சரித்திரப்படி அது அழியவில்லை. எப்படி?

1. அடிமைப்பட்டிருந்த யூதர்கள் பலர் அங்கிருந்து எருசலேமுக்கு வராமல் அங்கேயே வாழ்ந்தனர்.

2. கி.பி.60ல் அதே யூதர் மத்தியில், பேதுரு ஊழியம் செய்திருக்கிறார் (1 பேது.5:13).

3. தியோடோரேட் என்ற ஆராய்சியாளர், கி.பி.5ம் நூற்றாண்டின் மத்தியில் யூதர்கள் மட்டுமே பாபிலோனில் வாழ்ந்ததாக கூறுகிறார்.

4. அங்கே 3 பல்கலைகழகங்கள் இருந்தன என்றும்; "பாபிலோனியன் தல்மூத்" என்னும் யூதர்களின் அடிப்படை சட்டதிட்டங்கள் அங்கே உருவாக்கப்பட்டு உலகமெங்குமுள்ள யூதர்களால் அங்கீகரிக்கப்பட்டது என்றும் அறிகிறோம்.

5. கி.பி.912ல் இபுஹாங்கல் என்னும் ஆராய்ச்சியாளர், பாபிலோன் கிராமமாகவே காணப்படுகிறது என்கிறார்.

6. உன்னதமான நிலையிலிருந்து, தாழ்ந்து போன அந்த பாபிலோன், வளர்ந்து கி.பி.1100ல், "இது பள்ளிவாசல்கள்" என்றழைக்கும்படி சிறு பட்டணமானது.

7. பின்னும், கோட்டைச் சுவர்களால் சூழப்பட்டு, Hilla என்றழைக்கப்படும் இளைப்பாறுதல் ஸ்தலமாக மாறியது.

8. கி.பி.1898ல் இந்த ஹில்லாவில் 10,000 குடிமக்கள் வாழ்ந்தனராம்; சுற்றிலும் இது செழிப்பாயிருந்ததாம்; ஐபிராத் நதியின் இருமருங்கும் பேரீச்ச மரங்கள் வளர்ந்து செழித்தனவாம்.

இதனால், ஏசாயா, எரேமியாவில் சொல்லப்பட்ட முழு அழிவு இன்னும் நிறைவேறவில்லை என அறியலாம். ஏசா.13:9ஐ வாசித்தால், இரண்டாம் வருகையில்தான் இது பாழக்கப்படும் (See வெளி.16:17-19; with ஏசா.13:19,20; எரே.50:40; 51:43; 5:26).

பழைய பாபிலோன் திரும்ப எடுப்பித்துக் கட்டப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

1. முதலாம் நெப்போலியன் தயாரித்த "பாபிலோனிய புதிய நகரம்" அமைப்புக்கான திட்டவரைபடம் இன்னும் பாரீசில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

2. மெசப்பதோமியா, அசீரியா, பாபிலோனியா அடங்கிய பகுதிகளை செழிப்புமிக்க பிரதேசமாக மாற்ற, நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று 1850ல் ஐபிராத்து நதியை நில ஆய்வு செய்ய, ஆங்கிலேய அரசால் 1,50,000 டாலர்கள் ஒதுக்கப்பட்டன.

3. முன்னாள் ஜெர்மன் சக்கரவர்த்தி வில்லியம், ஐரோப்பாவை, பாபிலோன் மார்க்கமாக இந்தியாவுடனும், சீனாவுடனும், ஆகாய விமானப் போக்குவரத்தால் இணைக்க முயன்றார்.

4. துருக்கி தலைவர் அப்துல் ஹமீத், ஓர் இரயில் பாதை ஆசிய பாஸ்போரஸ் தொடங்கி, அலப்போ வழியாக திக்ரி நதிவரை அமைக்க சலுகை பெற்றார். அந்த ரயில் பாதையை தொடர்ந்து பாக்தாத் - பாபிலோன் வழியாக குவைத்தில் முடிக்க திட்டமிட்டனர்.

இதை எல்லாம் பார்க்கும் போது பாபிலோன் நகரம் மீண்டும் எழும்பும் என அறிகிறோம். சக.5:5-11 ஐ வாசித்தால், எழும்பப் போகும் இந்த பாபிலோனில்தான் வியாபாரம் பெருகப் போகிறது. 150 வருடத்திற்கு முன்பு சாதாரண சதுப்பு நிலமான சிகாகோ நகரம், தற்போது உன்னதமான நகரமாகவில்லையா? எருசலேம் தேவாலயம், அந்திகிறிஸ்துவின் ஒத்துழைப்போடு, மிகமிக குறுகிய காலத்தில் கட்டப்பட போகிறது அல்லவா! எல்லாம் நடந்தே தீரும். எழும்பப் போகும் இந்த நகரம், முன்பு போலவே செல்வச் செழிப்போடு பூமியின் வர்த்தகங்கள், ராஜாக்கள், எல்லோரும் தாபரிக்கும் ஸ்தலமாகவும், தெய்வ பயமும், தேவனுக்கேற்ற அறிவும் இல்லாமல் சாத்தானின் ஆளுகைக்கு உட்படும். இது ஒரே நாழிகையிலே பாழாய்ப் போகுமாம் (வெளி.18:10); இனி ஒருபோதும் காணப்படாமல் போகுமாம் (வெளி.18:21). எரே.50:40; ஏசா.13:19ல் சொல்லப்பட்டபடி அக்கினியால் சுட்டெரிக்கப்படுமாம் (வெளி.18:8,9,18).

பாபிலோனின் அழிவு சடுதியானதும், எச்சரிப்பற்றதாயும் இருக்கும். ஓர் பயங்கர புயல், நகரத்தை தாக்கும். இடியும் மின்னலும் விடாமல் ஏற்பட்டு தீக்குள்ளாக்கப்படும். அப்போது பயங்கர பூமியதிர்ச்சி, மையத்திலிருந்து ஓரம்வரை அசைப்பதால், ஓங்கி நிற்கும் மாடமாளிகைகள் கூட கோபுரங்கள், தொங்கு தோட்டங்கள் எல்லாம் சாய்ந்துவிழும்; எரிந்து உருகும் எரியும் துளையைப் போல, புகை வானளாவ எழும்பும். ஐபிராத்து நதியின் நீர், எரிகிற நிலக்கீலினுள் இறங்கியதால் ஏற்பட்ட மேகம் போன்ற நீராவிகள் பட்டணத்தை மூடும்; இரவில் வானம் அக்கினி ஒளிபோல காட்சிதரும். பாபிலோன் வியாபாரத்தில் ஐஸ்வர்யவான்களானவர்கள் யாவரும் (பூமியின் ராஜாக்கள், வர்த்தகர்கள், மாலுமிகள்), வாதையைக் கண்டு, பயந்து, தூரத்திலே நின்று அழுது துக்கிப்பார்கள். அந்த பாபிலோனின் கிரியைகளினிமித்தம் இரட்டிப்பாக தேவன் கோபாக்கினையை அனுப்பியதையும், பாபிலோன் இல்லாமல் போனதையும் கண்டு, பரலோகம் களிகூரும் (வெளி.18:20,24).

இங்கே, பாபிலோனை நகரமென்றும், அதிலுள்ளவர்களின் குணாதிசயங்களை வைத்து, அதை வேசித்தன பெண்ணாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. வெளி.17ல் வந்த Mystical பாபிலோன் அழிந்தது அந்திகிறிஸ்துவால்; இந்த பாபிலோன் தேசம் அழிந்தது தேவனின் கோபக்கினையால். எனவே இதுவேறு; அதுவேறு.

(மேலும் சதாம் உசேன், ஈரானில் மண்ணுக்கடியில், ஒரு பாபிலோன் நகரம் கட்டினார் என்று சொல்லப்படுவதையும் கருத்தில் கொள்க!).

❖ ❖ ❖

## 19ம் அதிகாரம்

இந்த அதிகாரம், "இவைகளுக்குப்பின்பு" என்றுதான் தொடங்குகிறது. நமக்கு தெரிந்தபடி, வெளி.4ம் அதிகாரமும் இப்படியே ஆரம்பித்தபடியால், 2,3ம் அதிகாரங்களில் சொல்லப்பட்ட 7 விதமான சபைகள், இரகசிய வருகையில் எடுக்கப்பட்டதற்குப் பின்பு நடப்பவை என்று அறிந்தோம். 18ம் அதிகார நிகழ்ச்சியான, புதுப்பித்துக் கட்டப்படும் பாபிலோன் நகரத்தின் அழிவானது, மகாவேசியான மதம் சம்பந்தமான Mystical பாபிலோனின் அழிவுக்கப் பிறகு (17ம் அதிகாரம்) நடப்பதுபோல, இந்த அதிகார சம்பவமும், Physical பாபிலோனுக்குப்பின் நடப்பதாகும்; 7ம் முத்திரை, 7ம் எக்காளம், 7வது கலசம் ஆகியவற்றுக்குப் பின்பு நடப்பதாகும். பரலோகிலுள்ள திரளான ஜனக்கூட்டத்தார், இந்த இரு பாபிலோன் அழிவுக்கும், இரண்டு முறை தனித்தனியாக அல்லேலூயா சொல்கிறார்கள். (இந்த இரு அழிவும், அந்திகிறிஸ்து மற்றும் தேவனால் வந்தது). புதிய ஏற்பாட்டில் முதன் முதலாக அல்லேலூயா (Praise ye the Lord - தேவனே உமக்கு துதி) என்று சொல்லப்படுவது இப்போதுதான். பழைய ஏற்பாட்டில் 24 முறையும், புதிய ஏற்பாட்டில் 4 முறையும் இது சொல்லப்படுகிறது. எபிரேயு பாஷையிலே "அல்லேலூயா - Halleluja" என்றும், Greek பாஷையிலே, அல்லேலூயா - Alleluia என்றும் உச்சரிக்கப்படுகின்றது.

வெளி.19:4ல் , 24 மூப்பர்களும், 4 ஜீவன்களும் தேவனைத் துதித்து, அல்லேலூயா பாடுகிறார்கள். ஏன்? சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் - வார்த்தை என்னும் நாமமுடையவர் பூமியை

ஆளப்போகிறார் என்பதால் (வெளி.19:6,13). ஆளப்புறப்படும்முன், அவருக்கு கல்யாண விருந்து பரலோகில் நடக்கிறது. மனிதனாய் பிறந்த ஒவ்வொருவருக்கும், வாழ்க்கையிலே உச்சக்கட்ட சந்தோசம் திருமணம்தான். அப்படியே மனிதரூபம் எடுத்த, வார்த்தையாகிய தேவனும் திருமணத்தை உச்சகட்டமாக்குகிறார். நம்முடைய வேதம் முழுமையும் இஸ்ரேலிய பண்பாட்டை ஒத்தே இருப்பதால், தமிழர் நாகரிகம் போல் அங்கே, திருமணம் என்ற சடங்கே இல்லை. நிச்சயதார்த்தம் பண்ணிய உடனே ஆணும் பெண்ணும் இணைந்து கொள்ளலாம் (யோசேப்பும், மரியாளும் அப்படித்தானே இணைந்தனர்). வசதிபடைத்தவர்கள், கல்யாண விருந்து என்று சொல்லி, மணவாளனும் மணவாட்டியும் இணைந்து செயல்படுத்துவார்கள். (இயேசுவாகிய மணவாளனுக்கு, மணவாட்டியாகிய சபையராகிய நாம், தண்ணீர் ஞானஸ்நானம் மூலமாய் நிச்சயிக்கப்பட்ட பிறகு, (1 பேது.3:21), எபே.5:25-27ல் திருமண நிகழ்ச்சியே நடக்காமல் கணவன் - மனைவியாய் சித்தரிப்பதைப் பாருங்கள். இதுதான் அவர்கள் பண்பாடு)

"கல்யாணம்" என்ற உடனே, ஈசாக்கு - ரெபேக்காள் இணைவது நமக்கு திருஷ்டாந்தம். "உன்னதப்பாட்டு" (சபையின் பாட்டு) சூலேம் மலைப்பகுதி பெண் இணைவது நமக்கு திருஷ்டாந்தம். மத். 22:1-14ல் வரும் 10 கன்னிகள் விஷயமும் ஆவிக்குரிய ரீதியில் நமக்கு திருஷ்டாந்தம். இந்தக் கல்யாண விஷயத்தில், மணவாட்டியாய், கிறிஸ்தவர்கள் மட்டுமே இருப்பர். கிறிஸ்துவுக்குள் மரித்து இரகசிய வருகையில் உயிர்த்தெழுந்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் இதிலில்லை. ஏனெனில் இஸ்ரேலர், ஏற்கெனவே நம் தேவனுக்கு மனைவியாகி, சோரம் போய்விட்டாள் (ஏசா.54:5-8). ஆனாலும் அவள் மனந்திரும்பி வரும்போது அவளை ஏற்றுக்கொள்வேன் என்று தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார் (எரே.3:1; ஓசி.2:1-23; 3:1-5). எனவே அவள் கன்னிப் பெண்ணுமில்லை; மனைவியாக்கவும் முடியாது. ஆனால் புதிய ஏற்பாட்டு சபையோ கன்னிப்பெண்; இவளுக்குத்தான் திருமணம் (2 கொரி.11:2). வெளி.19:7-9ஐ வாசித்தால் மனைவியாகிய மணவாட்டிதான் அலங்காரம் பண்ணுகிறாள் என அறிகிறோம். எங்கே அலங்காரம்? பரலோகிலே அலங்காரம் பண்ணுமுன் நம்மை தேவன் சோதித்து சர்டிபிகேட் தருகிறார் (see 1 கொரி.3:11-15, 1 பேது.1:7). இந்த அலங்காரம் பரிசுத்தவான்களாகிய நம்முடைய நீதியினாலே அலங்காரம். பெறப்போகும் கிரீடங்களுக்கேற்ப அலங்காரம். அதாவது நம்முடைய கிரியைகளுக்கேற்ற பலன்

(வெளி.22:12; ரோ.2:6; கொரி.5:10; ஏசா.40:10; யாக்.2:20). கிரீடங்கள் பல உள்ளன. அவைகளில் ஒருசில:-

1. அழிவில்லாத கிரீடம் (1 கொரி.9:25).
2. மகிழ்ச்சியின் கிருடம் (1தெசஇ2:19).
3. நீதியின் கிரீடம் (2 தீமோ. 4:8).
4. மகிமையுள்ள வாடாத கிரீடம் (1 பேது.5:4).

இந்த திருமணத்திற்கு - திருமண விருந்துக்கு - அழைக்கப்பட்ட பாக்கியவான்கள்தான், கிறிஸ்துவின் தோழர்களாகிய பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், அதற்கு முற்பட்டவர்களும் (யோ.3:29; மத்.9:15 - ளநந எபி.11:39,40). கல்யாணம் - கல்யாண விருந்து ஆகியவை இஸ்ரேலரைப் பொறுத்தவரை ஒரே நிகழ்ச்சி என்பதால், கிறிஸ்தவ சபையை - மணவாட்டியை - மனைவி என்றே வெளி.19:7 சொல்கின்றது (See வெளி.21:9) பரலோகில் நடக்கும் கல்யாண விருந்து ஒரு நாளில் அல்ல; 7ஆண்டுகள் நடக்கும். அல்லேலூயா!

**குறிப்பு:-** தேவதூதனையோ, ஊழியக்காரனையோ, பாதத்திலே விழுந்து யாரும் வணங்கக் கூடாது என்று வெளி.19:10; 22:8,9 போன்ற வசனங்கள் வெளிப்படுத்துகின்றன.

கல்யாண விருந்து முடிந்தபின் தேன்நிலவு நடக்குமல்லவா! அதுபோன்ற தேன்நிலவுதான் பூமியிலே 1000 வருட அரசாட்சி. இதற்காய் இயேசு வெள்ளைக் குதிரைமேல் வருகிறார்; வெளி.6:2ல் வருபவன் அந்திகிறிஸ்து; வெளி.19:11-13ன் படி இவர் வார்த்தையாகிய இயேசு. இவர், மணவாட்டியாகிய கிறிஸ்தவ சபையோடும், ஆபேல் முதற்கொண்டு உள்ள பரிசுத்தவான்களோடும், இராஜாதி ராஜாவாய், மகிமையோடு, நியாயந்தீர்க்கவும், பூமியை ஆளவும், வானத்திலிருந்து இறங்கி வருகிறார். இப்போதுதான் ஒலிவமலையில் கால் வைக்கிறார் (சக.14:4). இங்கு தான் அர்மகதோன் பள்ளத்தாக்கு உண்டு (வெளி.16:16). இப்படி அவர் வருவதைத்தான் மத்.24:30-31; யூதா 14,15ல் சொல்லப்பட்டுள்ளது. இதுதான் பூமிக்கு இயேசுவரும் 2ம் வருகை; பகிரங்க வருகை (எபி.9:27,28). ஏசா.11:1-4ல், இரண்டு வருகையையும் சேர்த்து சொல்லப்பட்டிருக்கும். இந்த அர்மகதோன் பள்ளத்தாக்கில் தான், அந்திகிறிஸ்துவும், கள்ளதீர்க்க தரிசியும், அந்திகிறிஸ்துவின் ஆட்களும் தேவ பிள்ளைகளோடு போராட எதிர்த்து நிற்கிறார்கள் (வெளி.19:19). இங்குதான் உலகின் 3வது உலகமாயுத்தம் நடக்கிறது.

அந்திகிறிஸ்துவின் ஆட்கள், கிறிஸ்துவின் வாயின் சுவாசத்தால் கொல்லப்படுவர். அவர்களின் மாமிசம் பறவைகளுக்கு அளிக்கப்படும். இதைத்தான் பூமியில் "மகாதேவனின் விருந்து" என்று வெளி.19:18 சொல்கின்றது. (see எசே.39:1-22). இதுதான் Moral corruption (மத்.24:28). மிருகத்தோடு இணைந்து, அர்மகதோன் பள்ளத்தாக்கில் கர்த்தரோடு யுத்தம் பண்ணவராத மற்ற மனிதர்களை மத்.25ல் சொல்லப்பட்டபடி, வெள்ளாடு, செம்மறியாடு என்று பிரிப்பார்; இது உயிரோடிருக்கும் புறஜாதிகளுக்கான நியாயத்தீர்ப்பு. கர்த்தராகிய, இயேசுகிறிஸ்து ஒலிவமலையில் காலடி வைக்கும்போதே, இஸ்ரேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (வெளி.1:7; ரோ.11:25-27 with அப்.15:17). முதலாம் வருகையில் இயேசு இரத்தம் சிந்தி போட்ட விதை, இஸ்ரேலர்களுக்குள் முளைக்க இத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கின்றன (எபி.9:27,28). நம் தேவன் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது. அல்லேலூயா! மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு, அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே (மத்.25:41) உயிரோடே தள்ளப்படுவார்கள் (வெளி.19:20).

❖ ❖ ❖

# 20ம் அதிகாரம்

இந்த அதிகாரத்தில் இரண்டு காரியங்கள் நடப்பதாய் சொல்லப்பட்டுள்ளது. (1) 1000 வருட அரசாட்சி (2) நித்திய நியாயத்தீர்ப்பு

**(1) ஆயிரவருட அரசாட்சி:-** 1000 வருஷம் என்ற வார்த்தை, வெளி.20:1-7 வசனங்களில் 6 முறை வருகிறது. இதை "Millineum" என்று இலத்தீன் பாஷையில் அழைக்கிறார்கள். இந்தக் காலத்தில்தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பூமியை ஆளுவார். அப்போது பூமியெங்கும் சமாதானமும், செழிப்பும், நீடித்த வாழ்க்கையும், நீதி நேர்மை, பரிசுத்தம் நிறைந்தும் இருக்கும். இந்த ஆட்சியைக் குறித்து பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் நிறைய வசனங்கள் உள்ளன:-

சங்.72:1-20; ஏசா.9:6,7; 11:1-9; 24:22,23 30:15-33; 35:1-10; 44:1-28; 49:1-26; 65:17-25,66:23,24; எரே.23:5,6; 33:15; எசே.39:25-29; மீகா.4:1; மத்.25:31-46; அப்.17:30,31; 1 கொரி. 15:24-28; வெளி.20:7-15; 19:15-21; ரோ.11:25-27; 8:19-21; தானி.2:34,35; 2 தெச.1:6,7; ஆதி.3:15.

சாதாரணமாக மக்கள் பாவம் செய்யும் போதெல்லாம், சாத்தானால் வஞ்சிக்கப்பட்டோம் என்று சொல்வார்கள். ஏவாளும் அப்படித்தானே சொன்னாள் (ஆதி.3:). ஆனால் யாக்.1:15ன் படி, மனிதனின் இச்சைதான் பிசாசின் ஆவியோடு இணைந்து, கர்ப்பம் தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும் என அறிகிறோம். எனவே, இந்த 1000 வருஷமளவும், பிசாசை, அதளபாதாளத்தில் (Tartarus - see வெளி.9) தள்ளி கட்டி வைக்கிறார் தேவன். பிசாசு இல்லாமல், பாவம் செய்கிறார்களா என்று தேவன் மனிதர்களை பரீட்சை பார்க்கிறார். மனிதன் சாதாரணமானவனல்ல; அவன் வெடி மருந்து (Dynamo) போன்றவன். இந்த 1000 வருஷம் வரைக்கும் பாவம் செய்யத்தக்கதான வெடிமருந்தாகிய கரு, அழியவே இல்லை; பாவம் செய்ய வேண்டும் என்ற எண்ணம், சித்தம் மாறவே இல்லை; மனிதனும் அதை அழித்துப்போட எத்தணிக்கவில்லை. see how man is! 1000 வருடம் முடிந்தபின் பிசாசு விடுதலையாக்கப்படுகிறான். பிசாசாகிய தீக்குச்சி வந்த உடனே, தயாராயிருக்கும் வெடிமருந்து அதோடு சேர்ந்து வெடிக்கிறது. அப்போதுதான், இஸ்ரேலருக்கும், பரிசுத்த நகரத்திற்கும் எதிரான கோகேமாகே யுத்தம், (எசே.38:2; சக.12:1-4; யோவே.1:15-etc) இந்த வெடி மருந்தான மனிதர்களோடு இணைந்து பிசாசு நடத்துகிறது (வெளி.20:7,8). இதுதான் இந்த பூமியின் கடைசி யுத்தம். அந்த நேரத்தில்தான், அன்று ஆதி.1:1க்கும் 1:2க்கும் இடைப்பட்ட காலத்தில் வெள்ளத்தால் பூமியை வெறுமையாக்கினதுபோல, தேவன் அக்கினியால் அழிப்பார் (See 2பேது.3:7) இதுதான் மல்.4ல் எழுதப்பட்டுள்ளது. **யார் இந்த ஆட்சியில் ஆள்பவர்கள்:-** (See வெளி.20:4,7).

1. இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள். (1 தெச.4:16-18).
2. 7 வருட அந்திகிறிஸ்து ஆட்சியில், இரத்த சாட்சியாய் மரித்தவர்கள்.
3. 1,44,000 இஸ்ரேலர்கள்.

**யார் இந்த ஆட்சியின் குடிமக்கள் :-**

1. மத்.25ல் வரும் செம்மறியாடுகள்.
2. ரோ.11:25-27; வெளி.1:7ன்படி, ஒலிமலையில் கால் வைத்து இயேசு நம்மோடு வரும்போது விசுவாசிக்கும் இஸ்ரேலர்கள்.

ஆபிரகாமுக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தின்படி, இஸ்ரேலர்கள் ஆள, தேவன் அவர்களுக்கு தேசத்தை தருகிறார் (ஆதி.15:18-21). மீதமுள்ள உலகை நாம் ஆள்கிறோம் (வெளி.5:10; 21,27; 11:15; 20:4;

ரோ.5:17). நாம் உயிர்த்து எழுவது முதலாம் உயிர்த்தெழுதல். 1000 வருட ஆட்சி முடிந்தபின் நடக்கும் கோகேமாகே யுத்தத்தில், சாத்தான் பிடிக்கப்பட்டு, 1000 ஆண்டுகளுக்கு முன்னாலேயே உயிரோடே தள்ளப்பட்டு, வாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும், அந்திகிறிஸ்துவும், கள்ளத் தீர்க்கதரிசியும் இருக்கும் அக்கினிக் கடலிலே - நரகத்திலே தள்ளப்படுகிறான். (see வெளி.19:20; 20:10; மத்.25:41). அங்கே நித்திய நித்திய - சதாகால - வாதை உண்டு. இங்கே eternal - சதாகாலம் - என்பதற்கு, Heb-ல் "OLAM" என்றும், GKல், "AINOIOS" என்றும் உள்ளது. இதன் பொருள் நித்தியமும் நித்தியமாகும் (see மத்.25:46).

**2. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு:-** இது பூமியிலல்ல; இது நித்தியத்தில் (வெளி.20:11). இது முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாதவர்களுக்கு; இரட்சிப்புக்குள் வராத, ஜீவப்புத்தகத்தில் பெயரில்லாதவர்களுக்கு நடக்கும். (வெளி.20:11). இந்த நியாயாசனங்களில் உட்காருவோர், 1000 வருஷம் பூமியை ஆண்டவர்கள் (வெளி.20:4). இந்த சிங்காசனத்திற்கு முன்பாக நிற்பவர்கள், ஆவியிலே மரித்தோர் - ஜீவ புத்தகத்தில் பெயரெழுதப்பட்டதாக காணப்படாதவர்கள். இரண்டாம் மரணம் இவர்களுக்கு உண்டு. அப்போது ஞாபகப்புத்தகம், ஜீவபுத்தகம் போன்ற புத்தகங்கள் திறக்கப்படும். எங்கெல்லாம் சரீரத்தில் மரித்திருந்தார்களோ அங்கிருந்தெல்லாம் அவர்கள் எழுப்பப்படுவார்கள். தங்கள் தங்கள் கிரியையின்படியே நியாயத்தீர்ப்பு இருக்கும். மரணப்பிசாசும், பாதாளப் பிசாசும் (கல்லறைப் பிசாசும்) நரகத்தில் அவர்களோடு தள்ளப்படும். இது அவர்களுக்கு இரண்டாம் மரணம்.

❖ ❖ ❖

## 21 மற்றும் 22ம் அதிகாரம்

வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பு முடிந்தது; முந்தின வானமும் (அதாவது நாம் தற்போது காண்கின்ற வானம்) பூமியும் ஒழிந்து போயிற்று; புதிய வானமும், புதிய பூமியும் உண்டானது. பரலோகம் மாறவில்லை; 2 பேது.3:12, 13ன் படி காரியங்கள் ஆகின்றன. 2 பேதுரு 3:10; ஏசா.65:22ன்படி பூமியும் வானமும் அழிந்து போகும் என்று பலர் எண்ணுகிறார்கள். 2 பேதுரு 3:5 -6 ஐ வாசித்தால் ஆதி.1:1க்கும் 1:2க்கும்

இடைப்பட்ட காலத்தில் பூமி ஜலத்தினால் அழிக்கப்பட்டது என்று அறியலாம்; ஆனால் பூமி இருந்தது. ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. நோவாவின் ஜலப்பிரளயத்தின் போதும் பூமியும் அதன் கிரியைகளும் அழிந்தன. ஆனாலும் பூமி இருந்தது. அப்படியே அக்கினியினால் இந்த பூமி வெளி. 20:9ன் படி அழிக்கப்பட்டாலும் பூமி இருக்கும். இப்படி உருகிய நிலையில், அழிவு நிலையில் உள்ள பூமி புதிதாக்கப்படுகின்றது. வெளி. 21:1ல் "அகன்று போதல்" - Passaway - என்பதற்கு paretchomai என்ற கிரேக்க பதம், "அழிந்து இல்லாமல் போவதல்ல; ஒரு நிலையினின்று இன்னொரு நிலைக்கு மாறுதல்" என்ற அர்த்தத்தில் வருவதையும் சிந்தியுங்கள். சமுத்திரம் இனி இருப்பதில்லை. வெளி. 22:1ன் படி ஆட்டுக்குட்டியானவரின் சிங்காசனத்திலிருந்து ஜீவநதி புறப்பட்டுப் போவதால், சமுத்திரம் பெரிய அளவுக்கு இல்லாவிட்டாலும், சிறிய கடல் அல்லது ஏரி அளவுக்கு நீர் நிலை இருக்கும்.

பரம எருசலேம், பரலோகம் விட்டிறங்குகிறது. (வெளி. 21:2,8) இது வெளி. 21:9ன் படி ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியை குறிக்கிறது என்றும் வச. 2ன் படி, மணவாட்டியைக் குறிக்கிறது என்றும் அறிகிறோம். ஆக, இந்த பரம எருசலேம் புதிய ஏற்பாட்டு சபையாரையும், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களையும் சேர்த்தே குறிக்கிறது என உணரலாம். (ஆபிரகாம் இதற்காகத்தானே காத்திருந்தான் - எபி. 11:10-16). 12 வாசல்கள் அதற்கு உண்டு. வாசல்கள் அருகே 12 தூதர்கள். பன்னிரண்டு வாசல்களிலும் 12 கோத்திரத்தார் பெயர்கள். இந்த எருசலேம் 12000 ஸ்தாதி - அதாவது 1500 மைல் நீளம், அகலம், உயரமும் உடையது. 12 அப்போஸ்தலர்களின் நாமம் தரித்த 12 அஸ்திபாரக் கற்களின் மேல் 144 முழம் - அதாவது - 216 அடி உயரமான மதில் இருந்தது. மொத்த உயரம் 1500 மைல் என்பதால், சுவர் 216 அடி உயரமிருந்து அதற்கு மேல் கூம்பு போல் அமைக்கப்பட்டு, மொத்தம் 1500 மைல் உயரம் இருக்கும் என அறியலாம். அதன் பரப்பளவு அமெரிக்காவில் பாதி இருக்கும் என அறியப்படுகிறது. வச. 22ன்படி அங்கே ஆலயமில்லை; தேவனே ஆலயமாயிருக்கிறார். (வெளி. 21; 3ஐ தியானியுங்கள்). நகரத்திற்கு தேவ மகிமையே பிரகாசம்; ஆட்டுக்குட்டியானவரே விளக்கு; எனவே அங்கே சூரியனில்லை. இரவு இல்லை; எல்லாம் பகல்தான். ஜீவநதி சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வரும். நகரத்தின் மத்தியிலும், நதியின் இருகரையிலும் 12 விதமான கனிகளைத் தரும் ஆரோக்கிய இலைகளையுடைய ஜீவ விருட்சம் உள்ளது. அங்கே சாபமில்லை;

கண்ணீரில்லை; மரணமில்லை. வெளி.21:24,26 வசனங்களை வாசித்தால் பூதிய பூமியில், வானிலிருந்து இறங்கி வந்த புதிய - பரம - எருசலேம் போக, மீதி உள்ள பரப்பில், நம்மையல்லாமல் வேறு மக்கள் வாழ்வார்கள் என அறிகிறோம். இது பாவமற்ற பூமியாகும். **இதிலே வாழ்பவர்கள் யார்?** உபா.9:7ன்படி ஆயிரம் தலைமுறை, அதாவது கிட்டத்தட்ட 33,000 ஆண்டுகள் இஸ்ரேல் மனித இனம் பூமியில் வாழ வேண்டும். ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை (ஆதி.15:18-20) சுதந்தரித்து 1000 ஆண்டுகள் வாழ்ந்த இஸ்ரேலர்களும் (See ஏசா.66:22). வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பில் அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலுக்குள் தள்ளப்படாதவர்களும், 1000 வருட ஆட்சியை அனுபவித்து முடிவில் கோகேமாகே யுத்தத்தில் (வெளி.20: 7-9) பிசாசோடு சேராத செம்மறியாட்டு இனத்தாரும் இந்த புதிய பூமியில் வாழ்வர். பூமி அக்கினியால் அழிக்கப்பட்டு உருகும்போது, இந்த மனிதர்கள் எப்படி அழியாதிருந்தனர் என்பது கேள்வி. நோவா கால ஜலப்பிரயம் போது 8 பேர் காக்கப்பட்டது எப்படியோ, அப்படியே தேவன் இவர்களையும் காக்க வல்லவர்; எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கும் எலியாவும் இப்போது எங்கே பாதுகாக்கப்பட்டுள்ளனர் என்பதை நாமறியோம்! தேவனால் கூடாத காரியம் ஏதேனும் உண்டோ! ஆதாம் மற்றும் நோவா பெற்ற முதல் கட்டளையை இவர்களும் பெற்று, பல்கிப் பெருகுவர் (ஆதி.1:28; 9;1). பாவமில்லாத சந்ததி உருவாகப் போவது புதிய பூமியில்தான். புதிய பூமியில் உள்ளவர்கள், புதிய எருசலேமின் ஆராதனைக்கு, நம்மால் அழைத்து வரப்படுவர் (வெளி.21:26). புதிய எருசலேமிலுள்ள, ஜீவ விருட்சத்தின் கனிகளை (வெளி.22:2) அனைவரும் புசிப்போம்.

வானத்திலிருந்தே புதிய எருசலேம் இறங்கி வருவதால், இந்த நகரமும், நகரத்திலுள்ள நாமும், லிப்டு போல அடிக்கடி பரலோகத்திற்கும் புதிய பூமிக்கும் போய் வருவோம் என்று நிதானிக்கலாம்; யோ.14:2ல் சொல்லப்பட்டு நமக்காக ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கும் ஸ்தலம் இந்த நகரமே! நாமே புதிய பூமியில் உள்ளாரோடு தொடர்பு கொள்வோம். யோபு 1:6; 2:1ல் வரும் தேவ புத்திரர் போல் நாமிருப்போமா தெரியவில்லை. **இந்தப் புதிய - நித்தியம் - ஆரம்பிக்கும் போதுதான் இயேசு கிறிஸ்து பிதாவிடம் ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்** (1 கொரி.15:24-28).

சீக்கிரம் சம்பவிக்கும் இவ்வளவு காரியங்களையும் கேட்ட, கண்ட யோவான் இதைக் காண்பித்த தூதனையே வணங்கும் போது, "நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள்" என்று தூதன் சொல்வது தற்கால கிறிஸ்தவர்களுக்கு ஒரு எச்சரிப்பு (வெளி.22:8,9). காலம் சமீபமாயிருப்பதால் இந்த புத்தக வசனங்களை முத்திரை போட வேண்டாம் என்பதால், வெளிப்படுத்தின விசேஷத்தை அனைவரும் திறந்த புத்தகமாக்கி தியானிக்க வேண்டும் என்பது தற்கால கிறிஸ்தவர்களுக்கு ஒரு கட்டளை, சீக்கிரமாய் வருகிறேன் என்பவர் சீக்கிரம் வரப்போகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்! இந்த புத்தகத்திலுள்ள வசனங்களை - கருத்துக்களை கூட்டாமலும், குறைக்காமலும் இருப்போம். வெளி.21:8, 2:15ல் சொல்லப்பட்டவர்களாயிராமல் கிறிஸ்துவுக்குள் வாழ்வோம்! ஆமென்!

❖ ❖ ❖

**இயேசு சீக்கிரம் வருகிறார்!**

**ஆயத்தமாவோம்!!**

**ஆயத்தமாக்குவோம்!!!**

**"End Time Deliverence Ministry Trust"**

Savings Bank Account no : 10372388517

State Bank of India, Chennai - 600 054.


(IFS Code : SBIN0004675)


(வங்கியில் அனுப்பிய உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள்)




நேபுகாத் நேச்சாரின் சொப்பனத்திற்கான
தானியேலின் விளக்கம் (தானியேல் 2)

# DANIEL 2:-39



DANIEL 2-38
DANIEL 7-4
DANIEL 2-39
DANIEL 7-5
DANIEL 8:20-24
REVELATION 17:1-6
DANIEL 7-8
DANIEL 7-6
DANIEL 2-40
DANIEL 7-7




"சிங்கக் கெபியில் தானியேல்"
(தானியேல் 6)



அக்கினிச் சூளையில் விசுவாச வீரர்களுடன் மனுஷகுமாரன்
(தானியேல் 3)





நான்காய்ப் பிரிந்த கிரேக்க சாம்ராஜ்யமும் அதிலிருந்து
எழும்பிய அந்தியோகஸ் எபிபேன்சும்
(தானியேல் 8)




70 வார தீர்க்கதரிசனம்
(தானியேல் 9:24-27)




10 கொம்பிலிருந்து எழும்பும் சின்னக்கொம்பு
(தானியேல் 7; 11:40-45)


BOOK OF DANIEL
HISTORICAL
PROPHETICAL
THE PERSONAL HISTORY OF DANIEL
THE VISIONS OF DANIEL
NEBUCHADNEZZAR'S DREAM OF THE GREAT WORLD "COLOSSUS"
BELSHAZZAR'S FEAST
DANIEL'S VISION OF "THE BEASTS"
DANIEL'S VISION OF "THE RAM & HE-GOAT"
DANIEL'S VISION OF "THE SEVENTY WEEKS"
DANIEL'S VISION OF CHRIST
DANIEL'S VISION OF THE "WILFUL KING" "THE ANTICHRIST"
DANIEL'S VISION OF THE "END TIME"
BABYLONIAN EMPIRE
MEDO-PERSIAN EMPIRE
GRECIAN EMPIRE
ROMAN EMPIRE
GOLD
SILVER
BRASS
IRON
EASTERN DIVISION (GREEK CHURCH)
WESTERN DIVISION (PAPAL CHURCH)
"THE ANTICHRIST"
"THE GREAT INTERVAL"
THE CHURCH
THE "STONE" OR MILLENNIAL KINGDOM OF CHRIST
MOUNT OF OLIVES
THE REVELATION OF CHRIST
TYPICAL TEACHING OF THE BOOK
DESIGNED AND DRAWN BY CLARENCE LARKIN

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| THE 7 CHURCHES SCRIPTURE REFERENCE | Ephesus REV. 2:1-7 | Smyrna REV. 2:8-11 | Pergamos REV. 2:12-17 | Thyatira REV. 2:18-29 | Sardis REV. 3:1-6 | Philadelphia REV. 3:7-13 | Laodicea REV. 3:14-22 |
| MEANING OF NAME | "To Let Go" | "Anointing Oil" | "To Be Married To Power" | "To Be Ruled By A Woman" | "A Precious Stone" | "Brotherly Love" | "Power of The Laity" |
| PERIOD IN CHURCH HISTORY | A.D. 96 | A.D. 100-313 | A.D. 313-606 | A.D. 606-1517 | A.D. 1517-1739 | A.D. 1739-1850 | A.D. 1850-1917+ END of AGE |
| CHARACTER OF EACH CHURCH | Effort Relaxed | Martyrdom & Tribulation | Union of Church and State | Counterfeit; Anti-Christian | Reformation | Evangelical: Missionary | Modernism; Spiritual Poverty |
| CHRIST'S TITLE AS JUDGE | "Walks In Midst of Candlesticks" | "Which Was Dead And Is Alive" | "He Which Hath The Sharp Sword" | "The Son Of God" | "He That Hath The Seven Spirits" | "He That Is Holy And True" | "The Faithful Witness" |
| GOOD POINTS | Labor & Patience | Endured Tribulation | The Faith Not Denied | Faith & Patience | A Name That It Lived | Kept The Word | NONE |
| FAULTS | Left First Love | NONE | Balaam's Doctrine, Idolatry | Ruled By "Jezebel" | But Dead Spiritually | NONE | Lukewarm |
| REWARD TO OVERCOMERS | "Paradise" | The First Resurrection | "A White Stone" | Reign With Christ | "Name Confessed" | "The New Jerusalem" | "With Christ On David's Throne" |

(வெளி. 2,3)



அந்தி கிறிஸ்துவாகிய மிருகத்தின் மேலுள்ள வேசிசபை
(வெளி. 17)

## நமது ஊழியங்கள்

1. "விசுவாச முழக்கம்" பத்திரிக்கை ஊழியம்
2. "விடுதலை கிறிஸ்துவின் சபைகள்"
3. "சேவியர் இறையியல் பயிலகம்" - பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும் (காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை)
6. வெப்சைட், பாடல் மற்றும் செய்தி சி.டி. ஆராய்ச்சி புத்தகங்கள், Facebook, you tube, Whatsapp ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதப்பாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...
முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள் ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம் போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

★ கருகலான சத்தியம் (பாகம் I)

★ கருகலான சத்தியம் (பாகம் II)

★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் I)

★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் II)

★ வியாதியா? மரணமா?

★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & பாகம் II)

★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்

★ கதைகள் அறுபது

★ சிறுவர் ஊழியம்

★ இஸ்லாமியரின் கேள்விகள்

★ உங்களுக்குத் தெரியுமா?

★ கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

★ இரத்தம் சிந்தித்தான் பாவமன்னிப்பா?

★ தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் விளக்கவுரை

## பாடல் சி.டி

★ ஆடியோ : ரூ. 50/- வீடியோ : ரூ. 50/-

★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)

★ தானியேல் (3 சி.டி) (ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்

★ குரான் சொல்லும் ஈசா தேவனா?

★ இயேசு ஏன் வரவில்லை?

★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?

★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்

★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்

★ மாறுபாடுள்ள சந்ததி எது?

- ★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?
- ★ குரானில் குளறுபடிகள் உண்டா?
- ★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?
- ★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

- ★ இயேசு வருவாரா?
- ★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?
- ★ எது தேவசித்தம்?
- ★ வியாதி தேவனின் சிட்சையா?
- ★ திரித்துவம் உண்டா?
- ★ அந்நிய பாஷை
- ★ எது ஆவிக்குரிய சபை?
- ★ படைப்பின் இரகசியம்
- ★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?
- ★ தெய்வீக சுகம்
- ★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?
- ★ இயேசுவின் இரத்தம்
- ★ பண்டிகைகள் தேவையா?
- ★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்
- ★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்
- ★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?
- ★ இயேசு சர்வ வல்லமையுள்ள தேவனா?
- ★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்
- ★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?
- ★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்
- ★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?
- ★ யார் அந்த 1,44,000 பேர்?
- ★ 70 வார தீர்க்கதரிசனம்
- ★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

❖ ❖ ❖

# வேதப் பொன்மொழிகள்

- ★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!
- ★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!
- ★ விசுவாசம் வெற்றியைத் தரும்
- ★ Where there is vision there will be provision
- ★ போதக சிட்சையே ஜீவ வழி
- ★ பரிசுத்தமாக்குவது வசனமே
- ★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
- ★ Have positive confession
- ★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு
- ★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?
- ★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்
- ★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு
- ★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி
- ★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்
- ★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்
- ★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல
- ★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை

## Rev. Dr. A. Xavier
(Author)



### ஆசிரியரைப்பற்றி,,,,,,,

1951ம் ஆண்டு மே மாதம் 16ஆம் நாள், தமிழ்நாடு, திருச்சிமாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்குமகனாய் பிறந்தவர்தான் Rev. Dr. A. சேவியர்.

குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர். B.Sc., (கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து, தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து, படிப்படியாய் பதவி உயர்ந்து, டிவிஷனல் இன்ஜீனியராக ஆனார்.

கல்லூரியில் படிக்கும்போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகர பட்டினத்தை சார்ந்த C.S.Iசபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.06.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும், ஜெபத்தாலும், ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1981–ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை முறிவிலிருந்து 1985–ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி, 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்தவரானார். பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தவர்,செவென்த்டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த சபையிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ஸ் ஊழியம், தெருப்பிசங்கம், “எப்போதும் வசன விளக்கம்” போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். “கடைசிகால விடுதலை முழக்கம்” என்ற மாத இதழை ஆரம்பித்து அதன்பின் “வசன முழக்கம்” என்ற பத்திரிக்கையை நடத்தினார். “விசுவாசம் வெற்றியைதரும்” என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும், சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்தவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார். எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர்.

தேவனின் தரிசனப்படி கஸ்தூரிபாய் ஆசிரமம், சேவியர் இறையியல் பயிலகம், விடுதலை கிறிஸ்துவின் சபை, விசுவாச கருத்தரங்குகள், ஊழியர் கருத்தரங்குகள், மற்றும் இணையதளம், தொலைக்காட்சி, முகப்புத்தகம் போன்ற பல ஊடகங்கள் மூலம் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தற்போது “விசுவாச முழக்கம்” என்ற மாதஇதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப்புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவ அநேக ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.


endtime deliverance ministry

endtimetrust xavier

9444979822

revdrxavier@gmail.com